க.பொ.த. (உயர் தரம்)

# அரசறிவியல் கோட்பாடுகள்

## ஆசிரியர் கைந்நூல்

சமூக விஞ்ஞானத் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
1996

சி.அ. ஜோதிலிங்கம்
ஆசிரியர்
நல்லாயன் கன்னியர் மடம்
கொட்டாஞ்சேனை

# க.பொ.த. (உயர் தரம்)
# அரசறிவியல் கோட்பாடுகள்

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

ஆசிரியர் கைந்நூல்

சமூக விஞ்ஞானத் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
1996

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

S. JOTHILINGAM
B. A (Hons) Po-Sc., M A Po-Sc.
Dip-in-Int-Af (BCIS) Dip-in-Edu(N I E)
ATTORNEY AT LAW
108/2, Walls Lane Colombo - 15
Tel : 0114 933 385

பணிப்பாளர் நாயகத்திடமிருந்து....

தேசிய கல்வி நிறுவகமானது முதற்தடவையாக உயர்தர வகுப்புகளுக்கான பாடவிதானங்களுடன் ஆசிரியர் கைந்நூல்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இக்கைந்நூலானது ஆசிரியர் தமது நாளாந்தக் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் ஒரு வழிகாட்டும் ஏடாகவன்றி, தமது உயரிய பணியை நிறைவேற்றுவதற்குதவும் ஓர் ஏடாக அமையுமென்று நினைக்கின்றேன்.

அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்களே இப்பாடத்தை உயர்தர வகுப்புகளிலே கற்பிக்கின்றார்கள். ஆகவே இப்பாடத்தில் மாணவர்கள் சித்தி பெறுவதற்குத் தேவையான திறமைகள் மட்டு விருத்தி செய்யப்பட வேண்டுமென்று மாணவர் சமுதாயமும், பெற்றோர்களும் கல்விமான்களும் கருதவில்லை. அரசியலில் ஆழ்ந்த அறிவுடைய இலங்கைவாழ் மக்கள் இப்பாடத்தின் மூலம் பெறக்கூடிய பயன் யாது? இதன் மூலம் நமது நாட்டினைச் சனநாயகப் போக்குடையதாக மாற்றமுடியுமா? அரசினை மட்டுமன்றிச் சமுதாயத்தினையும் சனநாயகப் போக்குடையதாக மாற்ற இயலுமா? இத்தகைய சமகாலத்துப் பிரச்சினைகள் இக் கைந்நூலில் ஆராயப்படாத போதிலும் இவை சம்பந்தமான கருத்துகள் வகுப்பறையில் விருத்தி செய்யப்படின், நமது தேசத்தின் நிலைமை இப்போதுள்ளதிலும் பார்க்கச் சிறப்பானதாக அமைந்துவிடும்.

அரசறிவியலைக் கற்பிக்கையில் ஆசிரியர்களும் மாணவர்களும் கையாளக் கூடிய செயன்முறை வேலைகள் இக் கைந்நூலிலே தரப்பட்டுள்ளன. எனினும் இவ்வேட்டிற் காணப்படும் மாதிரிக் கற்பித்தல் முறைகள் உங்களது ஆக்கபூர்வமான திறமைகளை விருத்திசெய்வதற்கும் புதிய அணுகு முறைகளைக் கையாள்வதற்கும் தடையாக இருக்காது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இக் கைந்நூல் சம்பந்தமான எங்களுக்குப் பயன்தரவல்ல ஆக்கப்பாடான மதிப்பீடுகள் உங்களிடம் இருப்பின், தேசிய கல்வி நிறுவகத்தின் சமூக விஞ்ஞானத் துறைக்கு அவற்றைத் தயவுசெய்து அனுப்பவும்.

S. JOTHILINGAM
B. A (Hons) Po-Sc., M A Po-Sc.
Dip-in-Int-Af (BCIS) Dip-in-Edu(N I E)
ATTORNEY AT LAW
108/2, Walls Lane Colombo - 15
Tel : 0114 933 385

கலாநிதி. பி. உடகம
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

S. JOTHILINGAM
B. A (Hons) Po-Sc., M A Po-Sc.
Dip-in-Int-Af (BCIS) Dip-in-Edu(N I E)
ATTORNEY AT LAW
108/2, Walls Lane Colombo - 15
Tel : 0114 933 385

# முகவுரை

இலங்கைப் பாடசாலைகளிலே 12ஆம் 13ஆம் ஆண்டு வகுப்புகளிலே கற்பிக்கும் ஆசிரியர்களுக்குதவும் நோக்குடன் இக்கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர் கைந்நூலில் அரசறிவியலுக்குரிய பாடவிடயங்களைக் கற்பிக்கையில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களிற் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அரசறிவியலின் அடிப்படையான விடயங்களைக் கருத்துள்ள வகையிலும் ஐயந்திரிபற்ற முறையிலும் மாணவர்களுக்கு எவ்வாறு சமர்ப்பிப்பது என்பதே அரசறிவியல் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாகும். பாடவிதானத்திற் குறிப்பிடப்பட்டுள்ள கற்பித்தல் இலக்குகளை எய்தும் வகையிற் கற்பித்தல் பணியை மேற்கொள்வது அத்தியாவசியமாகும்.

அரசறிவியல் பாடவிதானம் 8 அலகுகளைக் கொண்டுள்ளது. இப்பாடவிதானத்தின் ஒவ்வோர் அலகிற்கும் சிறப்பான குறிக்கோள்கள், பாடப்பரப்பு, கற்பித்தல் முறைகள், ஆசிரியர் – மாணவர் செய்முறை வேலைகள், மதிப்பீட்டு முறைகள் ஆகியன தரப்பட்டுள்ளன. ஆகவே வகுப்பறையில் நிகழும் கற்பித்தல் கற்றல் தொழிற்பாடானது வெற்றிகரமாக அமைவதற்கு அவசியமான வழிகாட்டல்கள் இக்கைந்நூலில் தரப்பட்டுள்ளன என நான் நினைக்கின்றேன். இக்கைந்நூலில் தரப்பட்டுள்ள விடயங்களை நீங்கள் மீறுதலாகாது என நான் கருதவில்லை. கற்பித்தல் முறைகளிலும், மதிப்பீட்டு முறைகளிலும் உங்கள் விருப்பத்திற் கேற்றவாறும் தேவைக்கேற்றவாறும் மாற்றங்களைப் புகுத்துவதற்கு உங்களுக்குச் சுதந்திரமுண்டு.

இக் கைநூலை ஆக்குவதற்குதவிய எழுத்தாளர் குழுவுக்கும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும் பணியாற்றும் அரசறிவியற் கலாநிதிகளுக்கும், கொழும்புப் பல்கலைக்கழகத்திற் கல்விப் பீடத்தில் பணியாற்றும் கலாநிதிகளுக்கும், சமூக விஞ்ஞானத்துறையின் அலுவலர்கள் உட்பட செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர்.சி. ஜயவர்த்தன
பணிப்பாளர்
சமூக விஞ்ஞானத் துறை.

## ஆலோசனைக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | பேராசிரியர் வை.ஆர். அமரசிங்க | – | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 2. | கலாநிதி. எம்.ஓ.ஏ.டி. சில்வா | – | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 3. | கலாநிதி. காமினி சமரநாயக்க | – | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 4. | கலாநிதி கமலா லியனகே | – | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 5. | கலாநிதி பியதாச அத்துகோரால | – | சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| 6. | டபிள்யூ. ஜி. குரலத்ன, | – | சிரேஷ்ட, விரிவுரையாளர்,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| 7. | திருமதி. எஸ்ரி. ஜீ.டி. சில்வா | – | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |

## பதிப்பாசிரியர் குழு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. பி.எல்.ஆர். ரோகண குமார | – | தேசிய கல்வி நிறுவகம் |
| 02. | திரு. எச்.எம். தயானந்த | – | தேசிய கல்வி நிறுவகம் |
| 03. | திரு. ஜே.அலுகொல்ல | – | தேசிய கல்வி நிறுவகம் |
| 04. | திரு. எஸ்.டி. பர்னாந்து | – | தேசிய கல்வி நிறுவகம் |
| 05. | திரு. எச்.வீரரத்ன | – | மா/சிறி சுமங்கல மகளிர் மா.வி. வெலிகம |
| 06. | திரு. கே.ரி. கனகரத்தினம் | – | தேசிய கல்வி நிறுவகம் |

# எழுத்தாளர் குழு

| | | |
|---|---|---|
| 01. | திரு.கே.பி. அபேரத்ன | - க/நுகவெல மமவி, நுகவெல. |
| 02. | திரு. எம்.டி. அபேரத்ன | - க/புஜாபிட்டிய மமவி, புஜாபிட்டிய |
| 03. | திருமதி. ஏ.எம்.பி. அபேசிங்க | - க/தெல்தெனிய ம.வி., தெல்தெனிய |
| 04. | திரு. ஆனந்த அஹமபால | - மா/புனித தோமஸ் ம.வி., மாத்தளை |
| 05. | திரு. ஆர்.எம். உபாலி | - அ/புனித ஜோசப் ம.வி., அனுராதபுரம் |
| 06. | செல்வி. ஆர்.எம். கருணாவதி | - பிரதேச கல்வி அலுவலகம், குருநாகல் |
| 07. | திரு. ஆர்.ஏ. கல்யாணரத்ன | - கம்/கல்ஹிட்டியாவ மமவி, கனேமுல்ல |
| 08. | திருமதி. எச்.எம். குசும் ஹேரத் | - கு/குளியாப்பிட்டிய மமவி, குளியாப்பிட்டிய |
| 09. | திரு. எச்.ஏ. காமினி சுவர்ணலதா | - சி/ஆனந்த மாவி, சிலாபம் |
| 10. | திரு. பி.டி. குணதாச | - ஹோ/தர்மபால மாவி, பன்னிப்பிட்டிய |
| 11. | திரு. எச்.ரி. சந்திரபால | - பொ/ பராக்கிரமபாகு மாவி, பொல்காவல் |
| 12. | திருமதி. ஜே.ஏ.எஸ். ஜயக்கொடி | - கம்/இரத்தினாவலி மகளிர் மா.வி. கம்பஹா |
| 13. | திரு. டி.எம். ஜயவர்த்தன | - பு/ஆனமடுவ மா.வி. ஆனமடுவ |
| 14. | திரு. ஏ.ஜி. திலக் | - கா/மகிந்த மா.வி. காலி |
| 15. | திருமதி. எம். பண்டிதரத்ன | - கொ.தெ/விசாகா வி. கொழும்பு 04. |
| 16. | திரு. ஆர்.பி. பொடிராலஹாமி | - அம்/ ரஜலதன்ன மா.வி. ரஜலதன்ன |
| 17. | திருமதி. எம்.எம்.டி. பண்டார | - க/உயர் மகளிர் மா.வி. கண்டி |
| 18. | திரு. டபிள்யூ.எம்.டபிள்யூ. பண்டார | - ப/பதுளை ம.ம.வி., பதுளை |
| 19. | திரு. மில்லவ எம்.ஆர்.ஈ.டி.பீ எம்.ஆர்.யு.யு | - பொ/அலுத்வல ம.ம.வி., பொலன்னறுவை |
| 20. | திருமதி. எல்.கே. இரத்நாயக்க | - கொ/தெ/ ஜனாதிபதி வி. மகரகம |
| 21. | திருமதி. ஏ.ஆர்.எம்.சி. ரணசிங்க | - அ/சுவர்ணபாலி மகளிர் வி., அனுராதபுரம் |
| 22. | திருமதி. எல்.டபிள்யூ.கே. ரூபிகா பெரேரா | - க/சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கர ம.ம.வி. மத்துகம |
| 23. | திரு. லயனல் ஏ. குலசூரிய | - மா/சிறி சுமங்கல மகளிர் மா.வி. வெலிகம. |
| 24. | விஜயசிறி ஹேரத் | - பிரதேசக் கல்வி அலுவலகம், கண்டி |
| 25. | திரு. ஆர்.டி. விமலசேன | - கந்தேகெதர ம.ம.வி., கந்தேகெதர |
| 26. | திரு. விமலசேன கல்அங்க | - க/பேராதெனிய .ம.வி. கண்டி |
| 27. | திருமதி. ஆர். விஜேகுணரத்ன | - கொ.வட/பலிலிக்கா ம.வி. இராகம |
| 28. | திரு. டபிள்யூ. விஜேரத்ன பண்டா | - க/ கிங்ஸவுட் மா.வி. கண்டி |
| 29. | திரு. டபிள்யூ. எம்.சீ.சீ. சபுனித | - மா/புனித தோமஸ் ம.வி. மாத்தளை |
| 30. | திரு. ரி.எம். சரத் பிரேம்லால் | - கு/ பண்டுவஸ்நுவர ம.ம.வி. ஹெட்டிபொல |
| 31. | திருமதி. சீதா ஐராங்கனி தோமஸ் | - பொ/ பலுகஸ்தமன ம.வி. பொலன்னறுவை |
| 32. | திரு. ஏ.பி. சுகதபால | - கு/ குளியாப்பிட்டிய ம.ம. வி. குளியாப்பிட்டிய |
| 33. | திருமதி. கே.பி. சுமணாவதி | - ஹோ/ சீதாவக்க ம.ம.வி. அவிசாவளை |
| 34. | திருமதி. சேபாலிக குமாரப்பெரும | - மார/சித்தார்த்த மகளிர் மா.வி. வெலிகம |
| 35 | திரு. எச்.டபிள்யூ. சோமதிலக்க | - ர/ எகலியகொட ம.ம.வி. எகலியகொட |

1. அலகு : - 1.1 அரசறிவியலின் இயல்புகள், பாடப்பரப்பு கற்பதற்கான நோக்கம்

2. பாடநேரங்கள்:- 19

3. உபஅலகுகள்:-

| | | |
|---|---|---|
| 1.1.1 | அரசறிவியலின் இயல்புகள் | பாடநேரங்கள் 04 |
| 1.1.2 | அரசறிவியலினைக் கற்பதற்கான குறிக்கோள் | பாடநேரங்கள் 01 |
| 1.1.3 | அரசறிவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களும் | பாடநேரங்கள் 04 |
| 1.1.4 | அரசறிவியலைக் கற்பதற்கான முறைகள். | பாடநேரங்கள் 07 |
| 1.1.5 | அரசறிவியலின் பாடப்பரப்பு | பாடநேரங்கள் 03 |

4. குறிக்கோள்:- அரசறிவியலின் இயல்பினையும் அதனைக் கற்பதற்கான நோக்கங்களையும் புரிந்துணர்வதற்கான அறிவினை வழங்குதல்.

5. சிறப்பான குறிக்கோள்கள்:-

1. அரசறிவியலின் இயல்பினை விவரித்தல்.

2. அரசறிவியலின் நடைமுறை இயல்பினைப் பரிசீலனை செய்தல்.

3. அரசறிவியலின் கற்கையில் விஞ்ஞான ரீதியிலான இயல்புகளை விளக்குதல்.

4. அரசறிவியலைக் கற்பதற்கான குறிக்கோள்களைத் தெளிவுபடுத்துதல்.

5. அரசறிவியலுக்கும் ஏனைய சமூக விஞ்ஞானப் பாடங்களுக்கு -மிடையிலான தொடர்பினைத் தெளிவுபடுத்துதல்.

6. அரசறிவியலைக் கற்பதற்கான முறைகளை விவரித்தல்.

7. அரசறிவியல் கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சியை விவரித்தல்.

8. அரசின் தொழிற்பாடுகளினதும் அரசியல் புரிந்துணர்வினதும் வளர்ச்சிக்கமைய சான்ப[illegible]வில் பாடப்பரப்பு விரிவடைவது பற்றி ஆராய்தல்

6. உள்ளடக்கம்:-

1. • அரசறிவியலின் இயல்பு

   - சமூக விஞ்ஞானப் பாடங்களில் ஒன்று என்பது.
   - மனிதனின் அரசியல் நடத்தையைப் பற்றிய கற்கை என்பது.
   - அரசு, அரசு ஆட்சி செய்யப்படுவது ஆகியன பற்றிய கற்கை என்பது.

2. • அரசறிவியலின் நடைமுறைசார் இயல்பு

   - அரசுக்குரிய அதிகாரங்கள்
   - சட்டவாக்க அமைப்பின் இயல்புகளும் அதன் தொழிற்பாடுகளும்.
   - அரசியல் கட்சிகளும் அமுக்கக் குழுக்களும்

(ஆசிரியருக்குரிய ஆலோசனை)

இவ்விடயங்கள் பின்னர் விரிவாக ஆராயப்படும். எனவே இவ்விடயத்தில் எளிமையான விளக்கம் போதுமானது.

3. • அரசறிவியலின் கற்கையில் விஞ்ஞான ரீதியிலான இயல்புகள்.

   - இதனைக் கற்கையில் விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறையைத் தொடர்புறுத்தலாம் என்பது.
   - இயற்கை விஞ்ஞானத்தில் கையாளப்படும் விஞ்ஞான ரீதியிலான முறையை அவ்வாறே, அரசறிவியலைக் கற்பதிற் கையாள முடியாது என்பது.

4. • அரசறிவியலைக் கற்பதற்கான குறிக்கோள்கள்.

   - சனநாயக ரீதியிற் செயற்படும், நல்ல பிரசைகளை உருவாக்குதல்.
   - அரசியல் அறிவினை விரிவுபடுத்தல்.
   - சனநாயக வாழ்க்கை முறையினை ஏற்றுக்கொள்ளல்.
   - நுட்பமாக ஆராயும் இயல்புடைய மக்களை உருவாக்கல்.
   - தேசிய அரசியல், சர்வதேச அரசியல் ஆகியன பற்றி சமநிலையான அல்லது பக்கச் சார்பற்ற புரிந்துணர்வைப் பெறுதல்.

5. ● வரலாறு பொருளியல் முதலிய சமூக விஞ்ஞானப் பாடங்களுக்கும் அரசறிவியலுக்கு -மிடையிலான தொடர்பு.

- அரசறிவியலானது ஓர் இயற்கை விஞ்ஞானப் பாடமாக விருத்தியடைந்துள்ளது என்பது.

6. ● அரசறிவியலைக் கற்பதற்கான வழிவகைகள்.

- தத்துவ ரீதியாக

- வரலாறு ரீதியில்

- பாடங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்தல்.

- நடத்தை ரீதியில்

- பொருளியல் ரீதியில்

ஆசிரியருக்கான ஆலோசனை:

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் துணையுடன் எளிமையான ஓர் விளக்கம் வழங்குதல் வேண்டும்.

7. ● அரசறிவியல் கல்வியின் வரலாறு.

- பிளேட்டோ (Plato) (கி.மு. 427 - 347)
- அரிஸ்ரோத்தில் (Aristotle) (கி.மு. 384 - 321)
- சிசேரோ (Cicero) (கி.மு. 106 - 43)
- பரிசுத்த ஒகஸ்தீன் (St. Augustine) (கி.பி. 354 - 430)
- தோமஸ் அக்குவயினஸ் (Thomas Aqwnas) (கி.பி. 1225 - 1274)
- மக்கியாவலி (Machiavelli) (கி.பி. 1496 - 1521)
- தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbes) (கி.பி. 1588 - 1679)
- ஜோன் லொக் (Jhon Lecke) (கி.பி. 1638 - 1704)
- ரூஸோ (Rousseau) (கி.பி. 1712 - 1778)
- ஹெகல் (Hegal) (கி.பி. 1770 - 1831)
- ஜெரமி பென்தம் (Jeremy Bentham) (கி.பி. 1778 - 1832)
- ஜோன் ஸ்றுவற் மில் (Jhon Steuart Mill) (கி.பி. 1806 - 1873)
- கார்ல் மார்க்ஸ் (Karl Mark) (கி.பி. 1818 - 1883)

8. • அரசறிவியலின் பாடப்பரப்பு

அரசறிவியல் பாடப்பரப்பில் பின்வரும் விடயங்கள் இடம்பெறும் என்பது.

- அரசியல் கோட்பாடுகள்.
- தேசிய ஆட்சிமுறை
- சமநிலையான ஆட்சிமுறை
- அரசியற் கட்சிகள், அதிகாரத்தின் தோற்றுவாயும் பொதுசன அபிப்பிராயமும்.
- பொது நிருவாகம்
- சர்வதேச அரசியல்

7. கற்பித்தல் / கற்றல் செயற்பாட்டில் கையாளக்கூடிய செயன்முறைகள்.

ஆசிரியர் செயன்முறைகள்

- விரிவுரை, கலந்துரையாடல், வினாவிடை முறை மூலம் தெளிவுபடுத்தல்.
- குறிப்பிட்ட தலைப்புகளில் மாணவர்களிடையே விவாதங்களை ஒழுங்கு செய்தல்.
- மூல நூல்களைப் பரிசீலனை செய்து அவற்றிலிருந்து திரட்ட வேண்டிய விடயங்கள் பற்றி வழிகாட்டல்.
- தகவல்களைத் திரட்டுவதற்குக் குழுமுறையைப் பயன்படுத்துதல்.
- அரசறிவியல் கல்வியின் மிக முக்கிய காரணங்கள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் தமது அறிவை விருத்தி செய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

மாணவர் செயன்முறைகள்

- விவாதங்களிற் கலந்து கொள்ளல்.
- பொருத்தப்பாடுடைய தகவல்களைத் திரட்டுதல்.
- குழுமுறை மூலம் பாட அறிவு, குணவியல்பு ஆகியவற்றை விருத்தி செய்தல்.
- சுயமாகக் கற்றல்.

8. மதிப்பீட்டு முறை

1. அரசறிவியல் கல்வியின் சமூக விஞ்ஞான இயல்பினைத் தெளிவுபடுத்துக.
2. "அரசறிவியல் என்பது சமூக விஞ்ஞானப் பாடங்களுள் ஒன்றாகும். ஏனைய சமூக சூழலுக்குமிடையிலான தொடர்பினை அது பரிசீலனை செய்கின்றது. அரசறிவியலானது ஒழுங்கமைவுடைய அரசியல் சமூகத்தைப் பிரதிபலிக்கின்றது."

இக் கூற்றின் பிரகாரம் அரசறிவியலின் இயல்பினை அறிவதற்குதவும் மிகப் பொருத்தமான கூற்று யாது?

அரசறிவியலானது

(I) சமூகச் சூழல் முழுவதையும் பரிசீலனை செய்கிறது.
(II) மனிதனுக்கும் சமூகத்திற்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்துகின்றது.
(III) சமுதாயத்தின் அபிவிருத்திக்கு உதவுகின்றது.
(IV) சமுதாயத்தின் அரசியல் நிருவாகங்களைப் பரிசீலனை செய்கின்றது.
(V) சமுதாயத்துடன் இணைந்து அச்சமுதாயம் ஒழுங்காக அமைவதற்கு உதவுகின்றது.

விடை (IV)

3. கூற்று

"இயற்கை விஞ்ஞானங்களிற் கையாளப்படும் விஞ்ஞான ரீதியிலான முறைகளை அரசறிவியலிலும் கையாளலாம்."

இக் கூற்றறு சம்பந்தமாகப் பின்வரும் தலைப்புகளிலே தகவல் வழங்குக.

(அ) இயற்கை விஞ்ஞானங்களின் அடிப்படையான இயல்புகள்
(ஆ) அரசறிவியல் பாடத்தை இயற்கை விஞ்ஞானங்களுள் ஒன்றாகக் கருத முடியுமா?
(இ) அரசறிவியலின் விஞ்ஞான ரீதியிலான அணுகுமுறை யாது?

4. அரசறிவியலைக் கற்பதற்கான குறிக்கோள்களைத் தெளிவுபடுத்துக.

5. அரசறிவியலுக்கும் சமூக விஞ்ஞானங்களுக்குமிடையிலான தொடர்புகளைச் சுருக்கமாக விளக்குக.
6. அரசறிவியலைக் கற்பதற்குதவும் 05 வழிமுறைகளைத் தருக.

7. கிரேக்க நகர அரசுகள் தொடக்கம் தற்காலத் தேசிய அரசுகள் உருவாகும் வரை, வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களுக்குரிய சிறப்பான இயல்புகளை அட்டவணைப்படுத்துக.

8. அரசறிவியல் கல்வியின் வரலாற்று ரீதியிலான வளர்சசி பற்றி விவரணமொன்று எழுதுக.

9. பின்வரும் அரசியல் சிந்தனையாளர் ஒவ்வொருவரைப் பற்றியும் சிறு குறிப்புகள் எழுதுக.

(1) மக்கியாவெலி
(2) ஜோன் லொக்
(3) ரூஸோ

## 1. அலகு: 1.2 : தற்கால அரசுகளின் ஒழுங்கமைப்பு

2. பாடநேரங்கள் : 17

3. உபஅலகுகள் :

| | | |
|---|---|---|
| 1.2.1 | தேசிய அரசு முறைமையின் ஆரம்பமும் வளர்ச்சியும் | பாடநேரங்கள் 05 |
| 1.2.2 | ஓர் அரசின் இன்றியமையாத இயல்புகள் | பார்டநேரங்கள் 03 |
| 1.2.3 | அரசும் சமுதாயமும் | பாடநேரங்கள் 02 |
| 1.2.4 | அரசும் ஏனைய சங்கங்களும் | பாடநேரங்கள் 03 |
| 1.2.5 | அரசும் அரசாங்கமும் | பாடநேரங்கள் 02 |
| 1.2.6 | அரசும் இறைமையும் | பாடநேரங்கள் 02 |

4. குறிக்கோள்கள்;

தேசிய அரச முறைமையின் வரலாற்று ரீதியிலான வளர்ச்சியையும் அரசு எனும் அமையத்தின் சார்பளவிலான முக்கியத்துவத்தையும் புரிந்துணர்தல்.

5. சிறப்பான குறிக்கோள்கள்:

1. அரசறிவியலில் மையமாக விளங்கும் காரணி அரசு என்பதைத் தெளிவுபடுத்தல்.
2. தேசிய அரசுகள் உருவாவதற்குத் துணையாகவிருந்த காரணிகளை விளங்குதல்.
3. ஓர் அரசின் அடிப்படையான இயல்புகளை விவரித்தல்.
4. அரசுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டல்.
5. அரசுக்கும் ஏனைய சங்கங்களுக்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குதல்.
6. அரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துதல்.
7. அரசினது உயரிய அதிகாரங்களை விளக்குதல்.

6. உள்ளடக்கம்

1. • அரசு

- அரசறிவியல் பற்றிய கல்வியில் அரசைப் பற்றிக் கற்பது முக்கியத்துவம் பெறுகின்றது என்பது.
- அரசு பற்றிச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு வரைவிலக்கணங்களின் துணையுடன் அரசு பற்றி பகுப்பாய்வு செய்தல்.
  (ஆசிரியருக்குரிய அறிவுறுத்தல் - குறைந்த பட்சம் மூன்று வரைவிலக்கணங்களையாவது சமர்ப்பித்து அவற்றின் துணையுடன் அரசினை அறிமுகஞ் செய்தல்)

2. • தேசிய அரசு உருவாவதற்கு ஏதுவான காரணிகள்

- மத்திய அரசு காலத்திலே தோன்றிய அரசியல் சிந்தனையாளரின் கருத்துகள். (1.4.1 பார்க்க)
- பரிசுத்த உரோம இராச்சியம் வீழ்ச்சியுற்றமை.
- 16ஆம் நூற்றாண்டிலேற்பட்ட மறுமலர்ச்சி.
- மத்திய வகுப்பு தோன்றுதல்.

முதலாவதாகத் தோன்றிய தேசிய அரசுகள் நான்கினைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. அவையாவன: இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகியன.

3. • அரசின் அடிப்படையான இயல்புகள்.
- நிச்சயமான நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், இறைமை. (ஒவ்வோர் இயல்பினையும் உதாரணங்களின் உதவியுடன் விளக்குதல். வேண்டும்)

4. • பின்வரும் தலைப்புகளில் அரசுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டல்.

(1) தோற்றுவாய் (2) ஒழுங்கமைப்பு (3) கடமை

5. • அரசுக்கும் சங்கங்களுக்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.

- சங்கம் பற்றிய வரைவிலக்கணங்கள்.

- அரசுக்கும் சங்கங்களுக்குமிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள் ஆகியவற்றைப் பின்வரும் தலைப்புகளில் பட்டியற்படுத்தல்.

(1) உறுப்புரிமை (2) குறிக்கோள்கள்
(3) அதிகாரம் (4) அதிகாரம் பிரயோகிக்கப்படும் நிலப்பகுதி

6. • அரசுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான வேறுபாடுகள்.

- இயல்பு, அதிகாரம் ஆகியனவற்றின் பிரகாரம் அவதானிக்கக்கூடிய வேறுபாடுகள்.

7. • அரசின் உயரிய அதிகாரங்கள்
- இவை ஆட்சேபிக்கப்படாத, ஆதிக்கமும் இறைமையுமுடைய அதிகாரங்கள். (ஜீன், போடின், ஜோன் ஒஸ்டின் ஆகியோரின் கருத்துக்களின் துணையுடன் கலந்துரையாடல்)

7. கற்பித்தல்/ கற்றல் செயற்பாட்டில் கையாளக்கூடிய செயன்முறைகள்.

ஆசிரியர் செயன்முறைகள்

- விரிவுரை, கலந்துரையாடல், வினா விடை முறைகள் மூலம் விடயங்களைத் தெளிவுபடுத்தல்.
- மூல நூல்களைப் பரிசீலனை செய்வதில் மாணவர்களை ஈடுபடுத்தல்.
- பொருத்தமான தலைப்புகளில் விவாதங்களை ஒழுங்கு செய்தல்.
- ஆசிரியர்/ மாணவர் கலந்துரையாடுவதற்கு ஒழுங்குசெய்தல்.
- சுயமாகக் கற்பதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.

மாணவர் செயன்முறைகள்

- மூல நூல்களின் துணையுடன் விடயங்களை வெளிப்படுத்தல்.
- தகவல்களைத் திரட்டுதலும் விமர்சித்தலும்.
- விவாதத்திற் பங்குபற்றல்.
- வரைவிலக்கணங்களைப் பதிவுசெய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட சிற்றேடுகளிலே தலைப்புகளுக்கேற்றவாறு வரைவிலக்கணங்களைப் பதிவுசெய்தல்.

8. மதிப்பீட்டு முறை.

1. அரசு பற்றிய வரைவிலக்கணங்களை எழுதுக.
2. தேசிய அரசு உருவாவதற்கு ஏதுவான காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.

3. பின்வருவனவற்றுள் அரசின் அடிப்படையான இயல்புகளைத் தெளிவாகத் தரும் விடை யாது?

(I) திட்டவட்டமான நிலப்பரப்பு, சனத்தொகை, சட்ட நிருவாகக் களம், அரசாங்கம்.
(II) திட்டவட்டமான நிலப்பரப்பு, சனத்தொகை, நாட்டின் உணர்வு, அரசாங்கம்.
(III) திட்டவட்டமான நிலப்பரப்பு, சனத்தொகை, அரசாங்கம், இறைமை.
(IV) திட்டவட்டமான நிலப்பரப்பு, சட்டவாக்கக்களம், அரசாங்கம், இறைமை.
(V) திட்டவட்டமான நிலப்பரப்பு, சனத்தொகை, அரசியற் கட்சிகள், இறைமை.

விடை III

4. அரசுக்கும் சமுதாயத்திற்குமிடையிலான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்தல்.

5. அரசுக்கும் சமுதாயத்திறகுமிடையிலான வேறுபாடுகளைக் கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் தெளிவுபடுத்துதல்.

(1) உறுப்புரிமை
(2) குறிக்கோள்கள்
(3) அதிகாரம்

6. அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவரித்தல்.

7. அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தொடர்பினை மிகச் சரியாக விவரிக்கும் விடை பின்வருவனவற்றுள் யாது?

(I) அரசைப் போலவே அரசாங்கமும் நிலைவேறான ஒரு நிறுவகமாகும்.
(II) அரசும் அரசாங்கமும் ஒன்றுடனொன்று தொடர்புகொள்ளும்.
(III) அரசையும் அரசாங்கத்தையும் ஒரே சமயத்தில் தாபிக்கலாம்.
(IV) அரசுக்குரிய ஒரு கருவியாக அரசாங்கம் தொழிற்படும்.
(V) அரசின் செயற்பாடுகள் அனைத்தையும் அரசே மேற்கொள்ளும்.

(விடை V)

(இத்தகைய பல்தேர்வு வினாக்களை ஆசிரியர் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்)

மேலதிக தகவல்களைப் பெறுவதற்குப் பின்வருவனவற்றை வாசிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசறிவியல் அறிமுகம் | - | ஹரல்ட் ஜே. லஸ்கி |
| 2. | அரசறிவியலில் சமூக தத்துவம் | - | பேராசிரியர் விஷ்வ வர்ணபால |
| 3. | மக்சிவெல்லின் உலகம் | - | கேசல ஜயவர்த்தனா |
| 4. | அரசறிவியல் சாரம் | - | அப்பாத்துரை |

1. அலகு : 1.3 அரசு பற்றிய அடிப்படையான அரசியல் கொள்கைகள்.

2. பாடநேரங்கள் : 20

3. உப அலகுகள் :

| | | |
|---|---|---|
| 1.3.1 | அரசு பற்றிய தாராண்மைக் கொள்கை. | பாடநேரங்கள் 05 |
| 1.3.2 | சமூக அபிவிருத்திக் கொள்கை | பாடநேரங்கள் 05 |
| 1.3.3 | அரசு பற்றி சமதர்மக் (சோஷலிசக்) கொள்கை | பாடநேரங்கள் 05 |
| 1.3.4 | அரசு பற்றிய பாசிசக் கொள்கை | பாடநேரங்கள் 05 |

4. குறிக்கோள் :

01. அரசுபற்றி நிலவுகின்ற பல்வேறு கொள்கைகளைப் புரிந்து கொள்ளல்.

5. சிறப்பான குறிக்கோள்கள்:

01. அரசு பற்றிய தாராண்மைக் கொள்கையை வரையறுத்தல்.
02. அரசு பற்றிய தாராண்மைக் கொள்கையின் வளர்ச்சியை விளக்குதல்.
03. தாராண்மை (தாராளமான) சனநாயக அரசின் பிரதான அம்சங்களை விவரித்தல்.
04. தாராளமான சனநாயக அரசின் பிரதான இயல்புகளைத் தெளிவுபடுத்தல்.
05. உம்பல் (கோத்திரம்) சமுதாயத்தின் தொடக்கம் முதல் தற்கால தேசிய அரசு வரை ஏற்பட்ட வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைத் தெளிவுபடுத்தல்.
06. மக்களை ஒன்றுபடுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் பந்தங்களைத் தெளிவுபடுத்தல்.
07. அரசு பற்றிய சமூக விருத்திச் செயற்பாட்டில் சமூக பந்தங்கள் செல்வாக்குச் செலுத்திய விதத்தைத் தெளிவுபடுத்தல்.
08. அரசு பற்றிய சமதர்மக் (சோஷலிசக்) கொள்கையினை வரையறுத்தல்.
09. அரசு பற்றிய சமதர்மக் கொள்கையின் பரம்பலைத் தெளிவுபடுத்தல்.
10. சமதர்ம அரசின் பிரதான அம்சங்களைத் தெளிவுபடுத்தல்.
11. தாராளமான சனநாயக அரசினை வேறுபடுத்திக் காட்டல்.
12. அரசு பற்றிய பாசிசக் கொள்கையை வரையறுத்தல்.
13. பாசிசக் கொள்கையின் வரலாற்றுப் பின்னணியை விவரித்தல்.
14. பாசிச அரசின் பிரதான அம்சங்களைத் தெளிவுபடுத்தல்.
15. தாராளமான சனநாயக அரசினை பாசிச அரசிலிருந்து வேறுபடுத்திக் காட்டல்.

6. உள்ளடக்கம்

**(1.3.2 இன் கீழ் சமூக அபிவிருத்திக் கொள்கையைக் கற்பித்த பின்னர் அரசு பற்றிய தாராண்மைக் கொள்கையைக் கற்பிக்க)**

1. • அரசு பற்றிய தாராண்மைக் கொள்கை.

   - அரசு பற்றிய தாராண்மைக் கொள்கையை வரையறுத்தல்.
     (பல்வேறு வரைவிலக்கணங்களைச் சமர்ப்பித்தல்)

2. • அரசு பற்றிய தாராண்மைக் கொள்கையின் பரம்பல்.
   - தாராண்மையானது வரலாற்று ரீதியான வளர்ச்சியின் விளைவாகும்.
   - கிரேக்க உரோமர் காலத்தில் நிலவிய அடிப்படையான தாராண்மைக் கருத்துகள்.
   - தாராண்மையானது தாராளமான சோஷலிசமாக விரிவடைந்தமை.
   - அரசின் தற்போக்குக் கொள்கை பற்றிய புரிந்துணர்வு.
   - அரசின் தற்போக்குக் கொள்கைக்கு எதிரான முறைப்பாடுகள் காரணமாக தாராளமான சோஷலிசம் (சமதர்ம அரசு) வரை விரிவடைந்தமை.

3. • தாராளமான சனநாயக அரசின் பிரதான இயல்புகள்.
   - தனி ஆள் சுதந்திரம், இலாப நோக்கு முதலிடம் வகிக்கும் பொருளாதார சுதந்திரம் பொதுநலத்துடன் தொடர்புறுதல்.
   - பெரிய பணிகளை நிறைவேற்றுகின்றமை, சட்டத்தையும் அமைதியையும் பேணல், பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும், நீதிபரிபாலனம்.

4. • தாராளமான சனநாயக அரசு இயங்குவதற்கு அவசியமான பிரதான பண்புகள்.

   - சர்வசன வாக்குரிமை, பொதுமக்கள் ஆட்சி, சட்டவாட்சி, சுதந்திரமான நீதித்துறை, கட்சி முறைமை, அமுக்கக் குழுக்கள், பொதுசன அபிப்பிராயம் ஆகியன தொழிற்படுதல்.

5. • உம்பல் சமுதாயம் தொடக்கம் தற்கால தேசிய அரசுகள் வரையில் வளர்ச்சி ஏற்பட்ட கட்டங்கள்.
   (1.1.4; 1.2.1 ஆகியன கீழ் தரப்பட்டுள்ள பாடங்களுடன் தொடர்புடையன)

6. • மக்களை ஒன்றுபடுத்துவதிற் செல்வாக்குச் செலுத்திய சமூக பந்தங்கள்.
   - குடும்பம், சுற்றத்தாருடன் தொடர்புகள், மதம், பொது வசிப்பிடத்தில் குடியிருத்தல், பாதுகாப்பு, அரசியல் அபிப்பிராயங்கள், பொருளாதாரத் தேவைகள்.

7 • சமூக அபிவிருத்திச் செயற்பாட்டில் சமூகப் பந்தங்கள் செல்வாக்குச் செலுத்திய விதம்.
   - அரசு எனும் பரந்த சமூக அமைப்பு உருவாவதில் சமூக பந்தங்கள் அடிப்படையாக விளங்கின என்பது.

8. • அரசு பற்றிய சோஷலிசக் கொள்கையினை வரையறுத்தல்.
   - அரசானது பொருளாதாரப் பலத்தையுடைய சமூக வகுப்பொன்றினது ஆயுதமாகும்.

9. • அரசு பற்றிய சோஷலிசக் கொள்கையின் பரம்பல்.

- மனித வரலாற்றின் வளர்ச்சி பற்றிக் கால்மார்க்ஸின் பகுப்பாய்வு.
(கமியூனிசத்துக்கு முற்பட்ட காலந் தொடக்கம் கமியூனிசக் காலம் வரையிலான வளர்ச்சி)
அரசானது பொருளாதாரப் பலத்தினையுடைய சமூக வகுப்பொன்றின் ஆயுதமாகும் என்பதை எடுத்துக் காட்டுக.

10. • சோஷலிச அரசொன்றினது பிரதான பண்புகள்.

- சொத்துகள் பொது உடைமையாக இருத்தல்.
- பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம்
- தனிக்கட்சி முறைமை
- நடைமுறைசார் சமத்துவம்

11. • பிரதான பண்புகளுக்கமைய சோஷலிச அரசானது தாராளமான சனநாயக அரசிலிருந்து வேறுபடுகின்றது என்பது.

| தாராளமான சனநாயக அரசு | சோஷலிச அரசு |
|---|---|
| சிறப்பான குறிக்கோள்கள் | சிறப்பான குறிக்கோள்கள் |
| (3)இற்கு அமைய வேறுபடுகின்றது | (10) இற்கு அமைய வேறுபடுகின்றது |

12. • அரசு பற்றிய பாசிசக் கொள்கையை வரையறுத்தல்.
(அரசானது சமுதாயத்திற் காணப்படும் உயரிய அமைப்பாகும்)

13. • பாசிசம் உருவாவதற்கான வரலாற்றுப் பின்னணி.

- இத்தாலியிலும் ஜெர்மனியிலும் அரசியல், சமுதாய - பொருளாதார பின்னணி செல்வாக்குச் செலுத்திய விதம்.

14. • பாசிச அரசின் பிரதான பண்புகள்.
- ஹிட்லர், மூசோலினி போன்ற பிரதான பாசிச ஆட்சியாளரின் நடவடிக்கைகள்.
- அரசின் ஆதிக்கம், நுண்ணறிவுடையோரை எதிர்த்தல், போராட்டத்தில் நாட்டம், கடுமையான நாட்டினவுணர்ச்சி, உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படாமை, ஆட்சியாளரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றல், வெளிநாடுகள் தொடர்பில் ஆக்கிரமிக்குந் தன்மையுடைய போக்கு, சனநாயகத்தை எதிர்த்தல்.

15. • தாராளமான சனநாயக அரசுக்கும் பாசிச அரசுக்குமிடையிலான வேறுபாடுகள்.

| தாராளமான சனநாயக அரசு | பாசிச அரசு |
| --- | --- |
| 3ஆம் 4ஆம் சிறப்பான குறிக்கோள்களுக்கு அமைய வேறுபாடும். | 14ஆம் சிறப்பான குறிக்கோள்களுக்கு அமைய வேறுபடும். |

7. கற்றல் / கற்பித்தல் செயற்பாட்டில் கையாளக்கூடிய செயன்முறைகள்.

ஆசிரியர் செயன்முறைகள்

- விரிவுரை, கலந்துரையாடல், வினா விடை முறை மூலம் விடயங்களை விளக்குதல்.
- கிரேக்க – உரோம காலத்தில் நிலவியதாராண்மையின் மூலாதாரமான கருத்துக்களைக் கண்டுபிடித்தற்கு உதவும் ஆலோசனைகளை வழங்குதல்.
- குழு முறை மூலம், அரசின் பொதுநலச் சேவைகள் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பதிவு செய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.

1வது குழு – இலவசமாகவும் உதவிப் பணத்துக்காகவும் (மானியம்) கிடைக்கும் பண்டங்கள்.
2வது குழு – இலவசமாகக் கிடைக்கும் பொதுச் சேவைகள்.
3வது குழு – குழுக்கள் கலந்துரையாடல்.

- ஓர் அணுகுமுறை என்ற வகையில் சிந்தனையைக் கிளர்வதன் மூலமும் வினவுதல் மூலமும் சமூக பந்தங்களை அறிந்து கொள்வதற்கு மாணவரை ஊக்குவித்தல்.

உதாரணம்

(அ) நீர் சமுதாயத்திலே எந்த அலகிற்கு உரித்தாவீர்?
(ஆ) அவ்வலகின் தலைவன் யார்?
(இ) தலைவரானவர் அங்கத்தவருடன் சேர்ந்து சட்டங்களை நிறைவேற்றுகின்றாரா?
(ஈ) அச்சட்டங்கள் கடைப்பிடிக்கப்படாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் விளைவு யாது?

- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து சோஷலிச அரசின் பண்புகள், தார்ாளமான சனநாயக அரசின் பண்புகள் சம்பந்தமான விவாதமொன்றிற் பங்குபற்றச் செய்தல்.
- பாசிசம் நிலவிய, நிலவுகின்ற அரசுகள் பற்றித் தகவல்களைத் தாமாகவே திரட்டும் பணியில் மாணவர்களை ஈடுபடுத்தல்.

மாணவர் செயன்முறைகள்

- பொருத்தமான தகவல்களைத் திரட்டிப் பதிவு செய்தல்.
- கலந்துரையாடல்களில் உற்சாகத்துடன் பங்குபற்றல்.
- அரசு ஏற்பாடு செய்துள்ள பொதுநல நடவடிக்கைகளைப் பதிவுசெய்தல்.
- சமூக பந்தங்களைப் பட்டியற்படுத்தல்.
- விவாதங்களிற் கலந்து கொள்வதற்காக ஒவ்வொரு மாணவனும் தகவல்களைத் திரட்டுதல்.
- திரட்டிய தகவல்களை, பாசிசத்தின் அடிப்படைய இயல்புகளுக்கமைய சுருக்கி எழுதுதல்.

8. மதிப்பீட்டு முறை

01. தாராண்மை அரசின் வளர்ச்சியில் பிரதானமான மூன்று கட்டங்களைச் சுருக்கமாக விளரிக்க.
02. தாராண்மை அரசின் பிரதான இயல்புகளைத் தெளிவுபடுத்துக.
03. தாராண்மை அரசு நிலைபெறுவதற்கு அவசியமான நான்கு பண்புகளை விவரிக்க.
04. அடிப்படையான சமூக பந்தங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.
05. தற்கால தேசிய அரசில் கட்டாயமாகக் காணப்படும் நான்கு அம்சங்களை விளக்குக.
06. மனித வரலாற்றின் வளர்ச்சி பற்றி கார்ல்மார்க்ஸ் வெளியிட்டுள்ள கருத்துக்களை விவரிக்க.
07. தாராண்மை சனநாயக அரசுக்கும் சோஷலிச அரசுக்குமிடையிற் காணப்படும் வேறுபாடுகளை ஒப்பிடுக.
08. பாசிச அரசொன்றின் பிரதான இயல்புகள் நான்கினை விவரிக்க.
09. தாராளமான சனநாயக அரசானது பாசிச அரசிலிருந்து வேறுபடுமாற்றை பின்வரும் தலைப்புகளின் கீழ் எழுத்துக் காட்டுக.

    (1) தனியாள் சுதந்திரம்
    (2) ஆட்சியில் மக்கள் பங்குபற்றல்.

10. ‘அ’ நிரலிலுள்ள அரசியல், சமுதாய, பொருளாதார இயல்புகள்
‘அ’ நிரலிலுள்ள அரசியற் கொள்கைகள், பொருளாதார இயல்புகள்
ஆகியவற்றுடன் பொருத்தப்படும்போது, கீழே தரப்பட்டுள்ளவனவற்றுள் சரியான விடையாக அமைவது எது?

| ‘அ’ | ‘ஆ’ |
|---|---|
| 1. தனியாள் சுதந்திரம் | A சோஷலிச அரசு |
| 2. அடிமை முறை | B பாசிச அரசு |
| 3. பொதுச்சொத்து முறைமை | C தாராளமான சனநாயக அரசு |
| 4. உம்பல் (கோத்திர) நிலை | D மானிய முறை |
| 5. அரசின் மேலாதிக்கம் | E சமூக அபிவிருத்திக் கொள்கை |

(I) CADBE (II) CDEBA (III) CBDAE (IV) CDAEB (V) CEABD

விடை (IV)

மேலதிகத் தகவல்களைப் பெறுவதற்கு வாசிக்க வேண்டிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாசிசவாதமா? மாக்சிசவாதமா? | - | குணதாச அமரசேகர |
| 2. | அரசறிவியலின் அடிப்படைச் சித்தாந்தம் | - | கலாநிதி எம்.ம.சி.த. சொய்சா |
| 3. | அரசறிவியலும் சமுக தத்துவம் | - | பேராசிரியர் விஸ்வ வர்ணபால |
| 4. | அரசறிவியல் அறிமுகம் | - | ஹரல்ட் லஸ்கி |
| 5. | அரசியல் இலக்கணம் | - | ஹரல்ட் லஸ்கி |
| 6. | அரசறிவியல் சாரம் | - | அப்பாத்துரை |
| 7. | கம்யூனிசம், பாசிசம், சனநாயகம் | - | கார்ல் கோஹன் |
| | COMMUISM FASCISM AND DEMOCRACY | - | CARL COHEN |

1. அலகு: 1.4 தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படையான அரசியல் எண்ணக்கருக்கள்.

2. பாடநேரங்கள்: 78

3. உபஅலகுகள் :

1.4.1 உரிமைகள் — பாடநேரங்கள் 08

1.4.2 சுதந்திரம் — பாடநேரங்கள் 04

1.4.3 சமத்துவம் — பாடநேரங்கள் 03

1.4.4 இறைமை — பாடநேரங்கள் 08

1.4.5 சட்டம் — பாடநேரங்கள் 08

1.4.6 அதிகார (வலு) வேறாக்கக் கொள்கை — பாடநேரங்கள் 06

1.4.7 அரசியல் யாப்பு — பாடநேரங்கள் 18

1.4.7.1 அரசியல் யாப்பு பற்றி அறிமுகம். அதன் உள்ளடக்கம், பயன்பாடு.

1.4.7.2 அரசியல் யாப்புகளை வகைப்படுத்தல்.

1.4.7.2.3 வரைந்த, வரையா அரசியல் யாப்புகள்.

1.4.7.2.2. நெகிழ், நெகிழா அரசியல் யாப்புகள்

1.4.7.2.3 ஒற்றையாட்சி சமஷ்டி அரசியல் யாப்புகள்

1.4.8 தேர்தல் முறைகளும் பிரதிநிதித்துவமும் (பாடநேரங்கள் 17)

1.4.8.1 எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவமுறை

1.4.8.2 விகிதாசார பிரதிநிதித்துவம்

1.4.8.2.1 பட்டியல் முறைமை

1.4.8.2.2. தனிமாற்று வாக்கு முறை

1.4.8.2.3 விசேட பிரதிநிதித்துவம்

1.4.9 நேர்க் குடியாட்சி (சனநாயக)

1.4.9.1 ஒப்பங்கோடல் (மக்கள் தீர்ப்பு)

1.4.9.2 குடிமுனைப்பு

1.4.9.3 பிறக்கழைப்பு (குடியொப்பம்) பாடநேரங்கள் 06

4. குறிக்கோள்கள்:

- அடிப்படையான அரசியல் எண்ணக்கருக்கள் பற்றிய புரிந்துணர்வு.
- அதிகார வேறாக்கல் கொள்கை பற்றிய புரிந்துணர்வு.
- அரசியல் யாப்புகளை வகைப்படுத்தல் பற்றிய அறிவு.
- தேர்தல் முறை, பிரதிநிதித்துவ முறை, நேர்க்குடியாட்சி முறைகள் பற்றிய புரிந்துணர்வு.

5. சிறப்பான குறிக்கோள்கள்:

01. உரிமை என்பதனை வரையறுத்தல்.
02. உரிமைகளை வகைப்படுத்திக் காட்டல்.
03. உரிமைகளைப் பாதுகாத்தற்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளைத் தெளிவுபடுத்தல்.
04. உரிமைகளை அனுபவிப்பது சம்பந்தமான வரையறைகளை எடுத்துக்காட்டல்.
05. உரிமைகள் அனுபவிக்க கூடியனவாக இருப்பதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல்.
06. சுதந்திரத்திற்கு வரைவிலக்கணம் வகுத்தல்.
07. சுதந்திரத்தினை வகைப்படுத்திக் காட்டல்.
08. சுதந்திரத்தைப் பாதுகாத்தற்குதவும் வழிமுறைகளை விவரித்தல்.
09. சனநாயகச் சமுதாயத்திலே சுதந்திரத்தை அனுபவிப்பது சம்பந்தமான வரையறைகளை விவரித்தல்.
10. சமத்துவம் என்பதனை விளக்குதல்.
11. சமத்துவத்துக்கும் சுதந்திரத்துக்குமிடையிலான சம்பந்தத்தைத் தெளிவுபடுத்துதல்.
12. இறைமை என்பதனைத் தத்துவ (மெய்யியல்) ரீதியான கொள்கையின் துணையுடன் தெளிவுபடுத்தல்.
13. இறைமை எண்ணக்கருவின் வளர்ச்சியை விவரித்தல்.
14. இறைமைக்குரிய அதிகாரத்தின் இயல்புகளைத் தற்கால அரசினது அதிகாரத்தின் இயல்புகளைத் தற்கால அரசினது அதிகாரத்தின் செயற்பாட்டுடன் ஒப்பிடுதல்.
15. சட்டம் சம்பந்தமான பல்வேறு கருத்துகளைத் தெளிவுபடுத்தல்.
16. சட்டங்களை நிறைவேற்றுவதில் சட்டத்தின் மூலங்கள் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குக.
17. சட்டத்தின் அடிப்படை இயல்புகளை அறிதல்.
18. சட்டத்தின் வகைகளைத் தெளிவுபடுத்தல்.
19. சட்டத்துக்கும் விழுமியங்களுக்குமிடையிலான தொடர்பினைத் தெளிவுபடுத்துதல்.
20. சட்டத்துக்கும் விழுமியங்களுக்குமிடையிலான வேறுபாட்டை தெளிவுபடுத்துதல்.
21. சட்டத்தை - மீறித் தனியாள் செயற்படுவது சம்பந்தமான கருத்துகளை விளக்குதல்.
22. சனநாயக சமுதாயத்திலே தனியாள் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதற்கு அவசியமான காரணிகளை பகுப்பாய்வு செய்தல்.
23. அரசாங்கத்தின் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவகங்களை அறிமுகப்படுத்தல்.
24. அதிகார வேறாக்கற் கொள்கையின் வளர்ச்சியை விவரித்தல்.
25. அதிகார வேறாக்கல் கொள்கையை விளக்குதல்.
26. அதிகார வேறாக்கல் கொள்கையின் பலவீனங்களை ஆராய்தல்.

27. அதிகார வேறாக்கல் கொள்கைக்கெதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள கண்டனங்களை எடுத்துக்காட்டல்.
28. அதிகார வேறாக்கல் கொள்கையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தல்.
29. அரசியல் யாப்பு என்பதனை வரையறுத்தல்.
30. அரசியல் யாப்பினது இயல்புகளைத் தெளிவுபடுத்தல்.
31. அரசியல் யாப்பின் பயன்களைத் தெளிவுபடுத்தல்.
32. அரசியல் யாப்புகளை வகைப்படுத்தல்.
33. வரைந்த, வரையா யாப்புகளைத் தெளிவுபடுத்தல்.
34. நெகிழ், நெகிழா யாப்புகளைத் தெளிவுபடுத்தல்.
35. ஒற்றையாட்சி, சமஷ்டி அரசியல் யாப்புகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
36. ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விவரித்தல்.
37. சமஷ்டி அரசியல் யாப்பின் பிரதான இயல்புகளை விவரித்தல்.
38. சமஷ்டி அரசியல் யாப்பின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் விவரித்தல்.
39. சமஷ்டி அரசியல் யாப்பின் சமகாலப் போக்குகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
40. தேர்தல் என்பதனைத் தெளிவுபடுத்துதல்.
41. தேர்தல் முறைகளின் பெயர்களை வழங்குதல்.
42. பிரதிநிதித்துவத்துக்காக தேர்தல் பயன்படுத்தப்படும் விதத்தைத் தெளிவுபடுத்துக.
43. பிரதிநிதித்துவ முறைகளை வகைப்படுத்துதல்.
44. எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை என்பது என்னவென்று விளக்குதல்.
45. விகிதாசார (விகிதசம) பிரதிநிதித்துவ முறையை விவரித்தல்.
46. விகிதாசார பிரதிநிதித்துவ முறைகளின் பெயர்களை வழங்குதல்.
47. பட்டியல் முறையைத் தெளிவுபடுத்துதல்.
48. தனிமாற்று வாக்கு முறையைத் தெளிவுபடுத்துதல்.
49. விசேட பிரதிநிதித்துவ முறையைத் தெளிவுபடுத்துதல்.
50. நேர்க் குடியாட்சி என்பதனை விளக்குதல்.
51. நேர்க் குடியாட்சி முறைகளின் பெயர்களை வழங்குதல்.
52. ஒப்பங்கோடல் என்பதனை விளங்கப்படுத்துதல்.
53. ஒப்பங்கோடலின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் ஒப்பிடுதல்.
54. குடிமுனைப்பு என்பதனைத் தெளிவுபடுத்துதல்.
55. குடிமுனைப்பின் நன்மை தீமைகளை ஒப்பிடுதல்.
56. பிறக்கழைப்பின் நன்மை தீமைகளை ஒப்பிடுதல்.
57. பிறக்கழைப்பின் பிரதான இயல்புகளை விவரித்தல்.
58. பிறக்கழைப்பின் நன்மை, தீமைகளை எடுத்துக்காட்டுதல்.

6. உள்ளடக்கம்

1. • உரிமைகள் பற்றிப் பின்வரும் சிந்தனையாளர் வகுத்த வரைவிலக்கணங்கள்.
   - ஹொப் ஹவுஸ்
   - ஜோன் லொக்
   - ஹரல்ட் ஜே லஸ்கி
   - வயிலட்

   (இந்த வரைவிலக்கணங்களைத் தெளிவாக எழுதி வகுப்பறையில் காட்சிக்கு வைத்தல் வேண்டும்)

2. • உரிமைகளின் வகைகள்

- சிவில் (குடியியல்) உரிமைகள்
- பொருளாதார உரிமைகள்
- அரசியல் உரிமைகள்

(உதாரணந் தந்து, இவ்வுரிமைகள் பற்றி விரிவாகக் கலந்துரையாட வேண்டும்)

3. • உரிமைகளைப் பாதுகாத்தற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள்.

- சட்டம் மேலாதிக்கம்.
- அதிகாரத்தை வேறாக்கும் கோட்பாடு.
- அரசியல் யாப்பின் மூலம் உரிமைகளை உறுதிப்படுத்தல் (பிரித்தானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மீது விசேட கவனஞ் செலுத்துவதுடன் ஏனைய அரசுகள் நிறைவேற்றியுள்ள வழிமுறைகளை ஆராய்தல்.)
- உரிமைகள் மீறப்படுகையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரக் கூடியமை.
- பத்திரிகை, தொடர்புச் சாதனங்கள் ஆகியவற்றுக்குச் சுதந்திரம் வழங்குவதன் மூலம் பொதுமக்கள் அறிவை விருத்தி செய்வது.
- சர்வதேச சமூகமானது மேற்கொண்டுள்ள வழிமுறைகள்.

  (அ) மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனம்.

  (ஆ) சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற தன்னிச்சையான அமையங்கள்.

4. • வரையறைகள்

- மற்றவர்களது உரிமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் உரிமைகளை அனுபவிப்பது.
- சமுதாயத்தின் பொது நலனுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உரிமைகளை அனுபவிப்பது.
- நடைமுறையிலுள்ள சட்ட முறையான ஒழுங்குமுறைகள்:

  உ-ம் : அவசரகால நிலைமை.

5. • உரிமைகளின் நடைமுறை முக்கியத்துவம்

- அபிவிருத்தியை அளவிடுவதற்கான பிரமாணமாக (அளவுகோலாக) இருத்தல்.
- வெளிநாட்டு உதவியைப் பெறுதற்குரிய பிரமாணமாக இருத்தல்.
- மனித. உரிமை மீறல்களை வெளிப்படுத்தக் கூடியமை.

6. • மூன்று வரைவிலக்கணங்கள்

- முன் ஏற்பாடு என்ற வகையில், அரசறிவியல் சிந்தனையாளர், சுதந்திரம் சம்பந்தமாகச் சமர்ப்பித்த மூன்று வரைவிலக்கணங்களைத் தேடிப் பெறுமாறு மாணவர்களுக்கு வழிகாட்டல். அந்த வரைவிலக்கணங்களுள் ஏற்றுக் கொள்ளத்தக்க வரைவிலக்கணத்தை ஒரு தாளில் எழுதி வகுப்பறை அறிவிப்புப் பலகையில் காட்சிக்கு வைத்தல்.

7. • சுதந்திரத்தை வகைப்படுத்தல்.

- குடியியல் (சிவில்) சுதந்திரம்
- தனியாள் சுதந்திரம்
- பொருளாதார சுதந்திரம்
- அரசியல் சுதந்திரம்

(மேற்குறிப்பிட்ட விடயங்களை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலும் ஈடுபாடு ஏற்படக் கூடியவாறு உதாரணங்களுடன் வழங்கி கலந்துரையாடலை நடத்துக.)

8. • சுதந்திரத்தைப் பாதுகாத்தற்காகத் தற்கால அரசுகளில் உள்ள வழிமுறைகள்.

- அரசியல் யாப்புகளில் அடிப்படை உரிமைகள் பற்றிய பிரகடனம் புகுத்தப்பட்டுள்ளமை.
- நீதித்துறைச் சுதந்திரம்
- சட்டவாட்சி
- அரசின் கொள்கையின் கோட்பாடுகள் பற்றிய கூற்றினை அரசியல் யாப்பில் புகுத்தல்.

• பொதுசனத் தொடர்புச் சாதனங்களுக்குள்ள சுதந்திரம்
• பொதுமக்களது அறிவை வளர்த்தல்.

9. • சனநாயக சமுதாயத்திலே சுதந்திரங்களை அனுபவிக்கையில் நடைமுறை வாழ்க்கையில் வரையறைகளுண்டு என்பது.

- மற்றவர்கள் சுதந்திரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில், ஒருவர் தமது சுதந்திரங்களை அனுபவித்தல்.
- சமுதாயத்தில் நிலவும் சட்டங்களுக்கமைய சுதந்திரங்களை அனுபவித்தல்.
- குடியியல், பொருளாதார, அரசியல் சுதந்திரங்களை அனுபவிக்கையில் ஒன்றிற்கொன்று முரண்பாடு ஏற்படுதல்.

10. • சமத்துவம் அறிமுகம்
• சமத்துவம் நிலவுவதற்கு இருக்க வேண்டிய பிரதான பண்புகள்.
- தனியாள்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாமை.
- சகலருக்கும் சமமான வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சகலருக்கும் சமமான உரிமைகள் உரித்தாதல்.

11. • சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்குமிடையிலான தொடர்பு.
- சுதந்திரமும் சமத்துவமும் ஒன்றிற்கொன்று முரணானவை அல்ல; அவை ஒன்றினையொன்று குறை நிரப்புவனவாக உள்ளன.
- சுதந்திரமும் சமத்துவமும் ஒன்றிற்கொன்று முரண்பாடுடைய எண்ணக்கருக்களாகும்.
- நடைமுறையில் பொருளாதார சுதந்திரம் நிலவுகையில் சுதந்திரத்தின் ஒரு சில அம்சங்கள் வரையறுக்கப்படும்.
- சுதந்திரத்துக்கும் சமத்துவத்திற்கும் இருக்கும் தொடர்பு பற்றி பொதுவான ஒருமைப்பாடு இல்லை என்பது.

12. • இறைமை எனும் எண்ணக்கரு பற்றிப் பல தத்துவ ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்பது.
- ஜீன் போடினின் கருத்து.
- ஜோன் ஒஸ்டினின் கருத்து.

• இறைமையின் அதிகாரம் அரசின் அதிகாரமாகும் என்பது.

13. • இறைமை எனும் எண்ணக்கருவின் வளர்ச்சி.
- ஜீன் போடின் முன்னோடியாக உள்ளமை.

• சம்பந்தப்பட்ட சிந்தனையாளர்.
- குறோஷன்
- தோமஸ் ஹொப்ஸ்
- ரூசோ
• இறைமை பற்றி ஜோன் ஒஸ்டினின் எண்ணக்கரு.
(ஜோன் ஒஸ்டினின் எண்ணக்கரு விரிவாக ஆராயப்படல் வேண்டும்)

14. • இறைமை அதிகாரத்தின் செயப்பாடு.
- இறைமை அதிகாரத்தைத் தற்கால அரசுகளினூடாகச் செயற்படுத்த முடியாது என்பது.
(ஜோன் ஒஸ்டினின் இறைமை எண்ணக்கருவுடன் ஒப்பிட்டு வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக)

- கீழே தரப்பட்டுள்ள அரசறிவியல் சிந்தனையாளரின், இறைமை பற்றிய நவீன கருத்துகளை உபயோகித்து விளக்கமளிக்க.
  - சேர் ஹென்ரி மேன்
  - பேராசிரியர் ஹரல்ட் ஜே. லஸ்கி
  - மக் அயிவர்

15. • சட்டம் சம்பந்தமான பல்வேறு கருத்துகள்.

(அ) அரசியல் விஞ்ஞான (அறிவியல்) ரீதியான கருத்து.

(ஆ) அரசியல் சிந்தனையாளரின் கருத்துகள்.

- அரிஸ்தோத்தில்
- தோமஸ் ஹெப்ஸ்
- ஜெரமி பெந்தம்
- ஜோன் ஒஸ்டின்
- சல்மன்ட்
- எச்.ஆர். சோல்ட்டு

16. • சட்டத்தின் மூலங்கள்

- சட்டவாக்கக் களம்
- நீதி
- சட்டம் உயரியது எனும் கொள்கை.
- நீதிமுறையான தீர்ப்புகள்
- பழக்கவழக்கங்கள்
- மதம்

• சட்டவாக்கத்தின்போது சட்ட மூலங்கள் செல்வாக்குச் செலுத்தும் விதம்.

17. • சட்டத்திற்குரிய அடிப்படையான இயல்புகள்.

- அதிகாரம் பலமுடையது.
- சமுதாயத்திலே தனியாள்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தல்.
- சட்டத்தை மீறுதல் தண்டனை பெறுவதற்கு ஏதுவாகும் என்பது.
- சமுதாயத்தின் பொதுநலத்தைக் கருத்திற் கொண்டு நிறைவேற்றப்படுவது.
- மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமுதாயத் தேவைகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்ப சட்டம் மாற்றத்திற்குள்ளாகும் என்பது.
- சட்டமானது பொருள் மயக்கம் இல்லாததாகவும் தெட்டத் தெளிவானதாகவும் இருக்க வேண்டுமென்பது.

18. • சட்டங்களின் வகைகள்

(அ) தேசிய சட்டங்கள்
- யாப்பு முறையான சட்டங்கள்
- பொதுச் சட்டங்கள்
- தனியாளுக்குரிய சட்டங்கள்
- நிருவாகச் சட்டங்கள்

(ஆ) சர்வதேசச் சட்டங்கள்

19. • சட்டத்துக்கும் விழுமியங்களுக்குமிடையிலான தொடர்பு

- விழுமியம் சட்டத்திற்கு மூலமாக இருக்கும் என்பது.
- தனியாள்கள் விழுமியங்களைக் கடைப்பிடிக்கும் போக்கினை விருத்தி செய்வதே சட்டத்தின் நோக்கமாகும் என்பது.

20. • சட்டத்துக்கும் விழுமியங்களுக்குமிடையிலான வேறுபாடு

(சட்டத்தின் அடிப்படையான இயல்புகளுடன் ஒப்பிட்டு வேறுபாட்டை எடுத்துக் காட்டுக.)

21. • தனியாள் சட்டத்திற்கு மதிப்பளிப்பது சம்பந்தமான கருத்துகள்.

- தத்துவரீதியான கொள்கைகள்.
- சமூக விஞ்ஞான ரீதியான கொள்கைகள்.

22. • போராசிரியர் சி.வி. டயிஸியின், சட்டவாட்சி பற்றி எண்ணக்கரு.

- நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய நிலவுகின்ற நீதிமன்றத்தினால் மட்டுமே ஆள் ஒருவர் தண்டிக்கப்பட வேண்டும்.
- சட்டத்திற்கு முன்னர் சகலரும் சமமானவர்.
- தனியாள் உரிமைகள் சட்டங்களினால் பாதுகாக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும் அதே வேளையில் உரிமையானது உடன்பிறந்ததாகவும் சமூக ஒப்புதலைப் பெற்றதாகவுமுள்ளது என்பது.
- இவ்வெண்ணக்கருக்கள் நடைமுறையில் செயற்படாதிருக்கும் சந்தர்ப்பங்கள்.

23. • அரசாங்கத்தின் அதிகாரத்தைத் தொழிற்படுத்தும் அமையங்கள்.

- சட்டவாக்கக் களம், நிருவாகக் களம், நீதிக்களம்.
(இந்த அமையங்களிடமுள்ள அதிகாரம் பற்றிச் சுருக்கமான விளக்கம் வழங்குக)

24. • அதிகார (வலு) வேறாக்கல் கொள்கையின் வரலாற்றுப் பின்னணி.

- அரிஸ்தோத்தில்
- பிளாஸ்ரன்
- ஜோன் லொக் (நவீன கொள்கையின் முன்னோடி என்ற வகையில்)
- மொன்ரெஸ்கியு

(மொன்ரெஸ்கியுவின் கொள்கையிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் விசேட கவனஞ் செலுத்துக.)

25. • மொன்ரெஸ்கியுவின் அதிகார வேறாக்கல் கொள்கை.

- அரசாங்கத்தின் அலுவல்களைத் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் சட்டவாக்க நிருவாக, நீதித்துறை, எனப் பிரித்தல் வேண்டும் என்பது.
- ஒவ்வோர் அமையமும் அதற்கு உரித்தான அலுவல்களை மட்டுமே நிறைவேற்ற வேண்டும் என்பது.
- ஓர் ஆள், ஓர் அமையமும் அதற்கு உரித்தான அலுவல்களை மட்டுமே நிறைவேற்ற வேண்டும் என்பது.
- ஓர் ஆள், ஓர் அமையத்தில் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும் என்பது.

26. • மொன்ரெஸ்கியுவின் அதிகார வேறாக்கல் கொள்கையின் பலவீனங்கள்.
• அதை செயற்படுத்தும் போது நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகள்.)

(பிரித்தானிய அரசியல் யாப்பு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் அரசியல் யாப்பு ஆகியன மூலம் பலவீனங்களை எடுத்துக்காட்டுக. குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் யாப்பில் இடம்பெறும் தடை. சமப்பாடுகள் (Checks and Balances) கோட்பாடு மீது கவனஞ் செலுத்துக.)

27. • கண்டனம்

- அதிகார வேறாக்கல் கொள்கையானது ஓரளவுக்கு நீதித்துறை சம்பந்தப்பட்ட வரையிலேதான் செல்லுபடியானதாகவுள்ளது.

28. • சனநாயக ஆட்சி முறைகளில் அதிகார வேறாக்கல் கொள்கை செலுத்தும் செல்வாக்கு.

- அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் யாப்பில் அதிகார வேறாக்கல் கொள்கையானது ஒரு கோட்பாடாகப் புகுத்தப்பட்டதிலிருந்து தற்கால சனநாயக அரசியல் யாப்பு வரையிலான அதன் செல்வாக்கு.
- அதிகாரம் ஒருமுனைப்படுத்தப்படுவதனால் மக்களை வருத்துகின்ற நிர்வாகம் உருவாகின்றது என்பதிற் கவனஞ் செலுத்துதல்.
- நீதித்துறை சுயாதீனமாகச் செயற்படும் ஓர் அமையமாக இருப்பதன் முக்கியத்துவம்.

29. • அரசியல் யாப்பு பற்றிய வரைவிலக்கணங்கள் (பிரயிஸ்சாமி, ஜேம்ஸ் மக்சின்டொஷ், ஜெலிநெக், சார்ல்ஸ் போகோட் போன்ற அரசியல் சிந்தனையாளர் சமர்ப்பித்துள்ள வரைவிலக்கணங்களின் துணையுடன் அரசியல் யாப்பினைப் பற்றிய அறிமுகமொன்று.)

30. • அரசியல் யாப்பின் இயல்புகள்
• அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்.
• அதில் உள்ளடக்கப்படலாகாத விடயங்கள்.

31. • அரசியல் யாப்பின் பயன்பாடுகள்.
- மனம் போன போக்கிலும் தவறான முறையிலும் ஆட்சி நடாத்தப்படுவதைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.
- பிரசைகளின் உரிமைகள் உறுதிசெய்யப்படும்.
- அரசியல் உறுதிப்பாடு.

32. • அரசியல் யாப்புகளை வகைப்படுத்தல்.
- வரைந்த, வரையா (எழுதிய, எழுதப்படாத)
- நெகிழ், நெகிழா.
- ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி

• வரைந்த, வரையா அரசியல் யாப்புகளுக்கிடையிலான வேறுபாடுகள். (உதாரணம் வழங்கி விளக்குக)

• முழுமையாக வரைந்த அல்லது முழுமையாக வரையாத யாப்பு இல்லை என்பது.
- இது சிறப்பான வகைப்பாடு, அல்ல என்பது.

• வரைந்த அரசியல் யாப்புகளின் அனுகூலங்களும், பிரதிகூலங்களும்.

• வரையாத அரசியல் யாப்புகளின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

34. • அரசியல் யாப்பினைத் திருத்துவதற்குக் கடைப்பிடிக்கப்படும் நடைமுறையின் அடிப்படையில், அது நெகிழ் அரசியல் யாப்பா, நெகிழா அரசியல் யாப்பா என்பது தீர்மானிக்கப்படும்.

• அசியல் யாப்பினைத் திருத்துவதற்கான நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபடும். (பிரித்தானிய, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இலங்கை போன்ற நாடுகளின் அரசியல் யாப்புகளிலிருந்து உதாரணம் வழங்கி தெளிவுபடுத்துக.)

• இது சிறப்பான வகைப்படுத்தல் அல்ல என்பது.
• நெகிழ் அரசியல் யாப்பின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.
• நெகிழா அரசியல் யாப்பின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

35. • மத்திய அரசாங்கத்திற்கும் பிரதேச அரசாங்கங்களுக்குமிடையே அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ள விதத்திற்கமைய ஒற்றையாட்சியும் சமஷ்டியாட்சியும் உருவாகின்றன என்பது.

• மத்திய சபையொன்றில் அதிகாரம் ஒருமுறைப்படுத்தப்பட்டிருத்தல், ஒற்றையாட்சி உருவாவதற்கு உதவுகின்றது என்பது.

(ஜெர்மன் ஜெ. வைனர், டி.ஸ்ரோஸ் ஆகியோரின் வரைவிலக்கணங்களின் உதவியுடன் விளக்குக)

36. • ஒற்றையாட்சி முறையின் அனுகூலங்கள்.

- அதிகாரத்தைப் பிரயோகிப்பவர் யார் என்பதை அறிந்துகொள்ளலாம்.
- நெருக்கடியான நிலைமைகளில் எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல்.

• ஒற்றையாட்சி முறையின் பிரதிகூலங்கள்.

- பிரதேசத்தின் தேவைகளுக்கும் நாட்டின் தேவைகளுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படும்.
- மத்திய அரசாங்கத்திற்கு மனம்போன போக்கிற் செயற்பட முடியும்.

(இவற்றைவிட, வேறு அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பற்றிக் கலந்துரையாடுக)

37. • சமஷ்டி ஆட்சி முறை

- அறிமுகம்
- அடிப்படை இயல்புகள்

• சமஷ்டி அரசு உருவாவதற்கான காரணங்கள்.

- அரசியல், பொருளாதார, சமூக, பாதுகாப்பு சம்பந்தமான காரணங்கள்.

(இக்காரணங்களை உதாரணங்களின் உதவியுடன் விளங்கப்படுத்தவும்.)

• வெற்றிகரமான சமஷ்டி ஆட்சியின் இயல்புகள்.

- வரைந்த, நெகிழா, மேன்மைமிக்க அரசியல் யாப்பு.
- அதிகாரமும் கடமைகளும் பிரித்துக் காட்டப்பட்டுள்ளமை.

(அ) செவ்விய முறை (செம்மையான முறை)

(ஆ) கனேடிய முறை

(இ) இந்திய முறை

- அதிஉயர் நீதித்துறை
- பிரதேச அரசுகளுள் சமமானவையாக கருதப்படுவது.

38. • சமஷ்டி ஆட்சிமுறையின் அனுகூலங்கள்.
- வேற்றுமைகள் நிலவும் சமுதாயத்தில் தேசிய ஒருமைப்பாட்டினை உருவாக்குகின்றமை.
- மத்திய அரசாங்கமானது மனம்போன போக்கில் செயற்பட முடியாமை.
- துரித அபிவிருத்தியை எளிதில் ஏற்படுத்துவதற்கு உதவுகின்றது.

• சமஷ்டி ஆட்சிமுறையின் பிரதிகூலங்கள்

- ஒருமுகமான ஆட்சியினை உருவாக்க முடியாமை.
- அதிகாரமும் சுதந்திரமும் இருப்பதால் அரசுகள் பிரிவினை கோருதல்.
- சட்டமுறையான ஒருமைப்பாட்டுக்கும் நிருவாக ஒருமைப்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுதல்.

(மேலதிகமான அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் மூல நூல்களிலிருந்து திரட்டுமாறு மாணவர்க்கு வழிகாட்டுதல்.)

39. • சமஷ்டி ஆட்சிமுறையின் சமகாலப் போக்குகள்.
- மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் துரிதமாக அதிகரிக்கின்றமை.
- பிரதேச அரசாங்கங்களின் பணிகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றமை.

(மேலே குறிப்பிட்ட விடயங்களுக்கு ஏதுவான காரணிகளைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.)

40. • தேர்தல்

- அறிமுகம்
- தேர்தல் நடத்தப்படுவதற்கான காரணங்கள்.

41. • தேர்தல் முறைகள்
- சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், பிரதேச சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், மாநகர சபைத் தேர்தல், ஒப்பங்கோடல்,

42. • பிரதிநிதித்துவம் சம்பந்தமாகத் தேர்தல்கள் கையாளப்படும் விதம்.
- பொது மக்களது நம்பிக்கையைப் பெறுவதற்காக.
- பொது மக்களது நம்பிக்கையைப் பெற்ற நபரையோ கட்சியையோ அறிந்து கொள்வதற்காக.

43. • பிரதிநிதித்துவ முறைகள்.
- எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை.
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை.

44. • எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையின் இயல்புகள்.
- தனி உறுப்பினர் தேர்தல் தொகுதி முறை.
- பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவது தேர்தலில் வெற்றியீட்டுவதற்குக் காரணமாகும்.
(பிரித்தானியாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுமிருந்து உதாரணங்கள் வழங்குக.)

• எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

45. • விகிதாசார பிரதிநிதித்துவ முறையைப் பற்றிய அறிமுகம்.

• விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் இயல்புகள்.
• விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

46. • பல்வேறு விகிதாசார பிரதிநிதித்துவ முறைகள்.
- பட்டியல் முறைமை
- தனிமாற்று வாக்கு முறைமை

47. • பட்டியல் முறைமை
- அறிமுகம்
- அடிப்படை இயல்புகள்

48. • தனிமாற்று வாக்கு முறைமை
- அறிமுகம்
- அடிப்படை இயல்புகள்

49. • விசேட பிரதிநிதித்துவ முறையின் இயல்புகள்.
- விசேட காரணங்கள் நிமித்தம் உருவாக்கப்பட்ட பிரதிநிதித்துவ முறை இனம், குலம், மகளிர்.
(பங்களாதேஷ், இந்தியா, ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு ஆராய்க.)

50. • சட்டவாக்கத்தில் பிரசைகளின் நேரடியான தொடர்பு.

• நேர்க் குடியாட்சியின் வரலாற்றுப் பின்னணியின் தன்மை.
- புராதன, கிரேக்க நகர் அரசுகள்.
- புராதன இந்தியாவிலிருந்து லிச்சவி இராச்சியம்.

• நேர்க் குடியாட்சி முறைகளைப் பயன்படுத்தல்
- புராதன நகர் அரசுகளின் நிருவாகத்துக்கு அவசியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டமை.
- தற்காலத்தில் நெருக்கடியான நிலைமைகளில் மட்டும் பயன்படுத்தப்படுவது.
(இத்தகைய நிலைமைகளை எடுத்துக்காட்ட உதாரணங்கள் வழங்குக.)

51. ● நேர்க் குடியாட்சி நுட்பங்கள்.
- ஒப்பங்கோடல், குடிமுனைப்பு
- பிறக்கழைப்பு (Recall)

52. ● ஒப்பங்கோடல்
- பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் (உதாரணம் வழங்குக)

53. ● ஒப்பங்கோடலினால் ஏற்படும் அனுகூலங்கள்.
- பிரசைகளின் விருப்பத்தை அறிந்து கொள்ளலாம்.

● பிரதிகூலங்கள்
- அரசியல் கட்சிகளின் செல்வாக்குக் காரணமாக உண்மையான நிலைமையை அறியமுடியாமை.
- செலவு அதிகம்.

54. ● குடிமுனைப்பு பற்றிய அறிமுகம்.
- சட்டமியற்றலை ஆரம்பித்தற்காக.

● குடிமுனைப்பின் இயல்புகள்.
- சட்ட வரைபுகளை உருவாக்கும் அதிகாரம் பொது மக்களுக்கு உரித்தாகின்றது.
- குறிப்பிட்ட எண்ணிக்கையான வாக்காளரினால் குடிமுனைப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படும்.

● குடிமுனைப்பு பிரேரணையைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் கட்டுப்பட்டிருத்தல்.

55. ● குடிமுனைப்பின் அனுகூலங்கள்.
- சட்டவாக்கக் களம் நிறைவேற்றும் சட்டங்களின் குறைபாடுகளை நீக்கிவிடல்.
- பொதுமக்கள் சட்டவாக்கத்திற் பங்குபற்றல்.

● பிரதிகூலங்கள்
- மக்கள் அல்லற்படுதல்.
- குறுகிய சுயநலப் போக்குடைய அமையங்களுக்குத் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியமை.

56. ● பிறக்கழைப்பு
- அறிமுகம்
- அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆரம்பமான முறை என்பது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 5 விதங்களில் செயற்படுதல். (தகவல்களைத் திரட்டுமாறு மாணவர்களைத் தூண்டுதல்)

57. • பிரதான இயல்புகள்

- வாக்காளரின் அபிப்பிராயத்திற்கமைய நிகழ்வது.

58. • பிறக்கழைப்பின் அனுகூலங்கள்

- மக்கள் பிரதிநிதிகள் அரசாங்க அலுவலர் ஆகியோரின் மீது மக்களது கட்டுப்பாடு அதிகரித்தல்.
- அவர்கள் மனம்போன போக்கிற் செயற்படுவதைத் தவிர்த்தல்.

• பிரதிகூலங்கள்

- மக்கள் பிரதிகூலங்களினதும் அரசாங்க அலுவலர்களினதும் மேலாதிக்கத்திற்கு இடையூறு ஏற்படல்.
- அவர்களது வினையாற்றலும் சீர்கெடுவதற்கு வாய்ப்புண்டு.

(முன் ஏற்பாடு என்றவாறு நேர்க் குடியாட்சிப் பற்றிய மூல நூல்களை வழங்கி, அவற்றினைப் பயன்படுத்தித் தகவல்களைத் திரட்டுமாறு மாணவர்களுக்குக் கூறுக. பாடம் நடைபெறவுள்ள தினத்தில் மாணவர்களுடன் கட்டுப்பாடற்ற கலந்துரையாடலை நடத்துக.)

பொது அறிவுறுத்தல்கள்:

சகல விடயங்களை சம்பந்தமாகவும் இங்கு மிகச் சுருக்கமாகவே தகவல்கள் தரப்பட்டுள்ளன. எனவே மூல நூல்களிலிருந்து மேலதிகத் தகவல்களைத் திரட்டுக. மூல நூல்களைப் பயன்படுத்துமாறு மாணவர்களை ஊக்குவிக்கவும், வரைவிலக்கணங்களைக் கொண்ட அட்டை, கட்டுரைகளைக் கொண்ட கோவை, பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்ட சிற்றேடுகள் ஆகியவற்றைத் தயாரித்தற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுக.

7. கற்றல்/ கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய செயன்முறைகள்.

ஆசிரியருக்குரிய செயன்முறைகள்.

- விரிவுரை, கலந்துரையாடல், வினாவிடை முறைகள் மூலம் விடயங்களை விளக்குதல்.
- அடிப்படைய உரிமை மீறல்கள் பற்றிப் பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் பலவற்றை மாணவர் குழுக்களிடையே பகிர்ந்து, அவற்றைத் தாமாகவே கற்றுணர்வதற்கு மாணவர்களுக்கு உற்சாகமூட்டுதல்.
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தேடும்படி மாணவர்களைத் தூண்டுதல்.
- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து விவாதமொன்றை ஒழுங்கு செய்தல்.

(அ) மாணவர் குழு 1 - முன்மொழியும் அணி

"சனநாயக அரசில் அரசியல், பொருளாதார சுதந்திரங்கள் உண்டு."

(ஆ) மாணவர் குழு 2 - எதிரணி

"சனநாயக அரசியல் அரசியல், பொருளாதார சுதந்திரங்கள் இல்லை"

(இ) மாணவர் குழு 3 - நடுவர் சபை

(ஆசிரியர் அவதானிப்பதுடன் வழிகாட்டவும் வேண்டும்.)

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பொருளாதார, அரசியல், சமூக சமத்துவம் பற்றிக் கட்டுப்பாடின்றிக் கலந்துரையாடுவதற்குத் தூண்டுக.
- சுதந்திரம், சமத்துவம் பற்றிய பல்வேறு கருத்துக்களைச் சேகரிக்குமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- இறைமை எண்ணகருவினது பலவீனங்கள் கொள்கையளவிலும் நடைமுறையிலும் வெளிப்படும் சந்தர்ப்பங்களை, இலங்கையும் விதிக்கப்பட்ட நாடுகளையும் ஆதாரமாகக் கொண்டு வரைபில் பதிவுசெய்க.
- சட்டம் சம்பந்தமான அரசியல் சிந்தனையாளரின் பல்வகைப்பட்ட கருத்துகளை மூல நூல்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.
- விவாதமொன்றை ஒழுங்கு செய்தல். இரண்டு குழுக்களுக்குமுரிய விடயங்கள் பின்வருமாறு:

  1. சட்டமானது இறைமையின் ஆணையாகும்.
  2. சட்டமானது பொது விருப்பத்தைப் பிரதிபலிக்கும்.

- அதிகார வேறாக்கல் பற்றி அரிஸ்தோத்தில், பிளாக்ஸ்ரன், ஜோன் லொக் போன்றவர்கள் வெளியிட்ட கருத்துக்களைத் தேடி பெறுவதற்கு மாணவர்களை ஊக்குவித்தல்.
- அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பிரித்தானியாவிலும் சட்டவாக்கக்களம், நிருவாகக்களம், நீதிக்களம் ஆகியனவற்றிகிடையேயுள்ள தொடர்புகளை எடுத்துக்காட்டும் விடயங்களை வரைபில் பதிவுசெய்தற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுதல்.
- அரசியல் யாப்பு பற்றிய வரைவிலக்கணங்களை சேகரிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல்.

- வரைந்த - வரையா

  நெகிழ் - நெகிழா

  ஒற்றையாட்சி - சமஷ்டியாட்சி

  அரசியல் யாப்புகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பட்டியற்படுத்துமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வருமாறு பணிகளை அக்குழுக்களுக்கு ஒதுக்கிடுக.

  1. ஒற்றையாட்சி முறையின் இயல்புகளைத் திரட்டுதல்.
  2. ஒற்றையாட்சி நிலவும் நாடுகளின் பெயர்ப் பட்டியலொன்றினைத் திரட்டுதல்
  3. சமஷ்டி ஆட்சி நிலவும் நாடுகளின் பெயர்ப்பட்டியெலான்றினைத் தயாரித்தல்.
  4. சமஷ்டி அரசொன்று உருவாவதிற் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைச் சேகரித்தல்.

குழுத் தலைவர்கள் சமர்ப்பிக்குந் தகவல்களை ஆராய்தல்.

- எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை நிலவுகின்ற நாடுகளின் பெயர்ப்பட்டியெலான்றைத் தயாரிக்குமாறு மாணவர்களைப் பணித்தல்.
- விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை நிலவுகின்ற நாடுகளின் பெயர்ப் பட்டியெலான்றைத் தயாரிக்குமாறு மாணவர்களைப் பணித்தல்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, " எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையும்" எனும் பொருள் பற்றி விவாதமொன்றை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்தல்.
- குழுக்களுக்கிடையே நடைபெற்ற விவாதத்தின் மூலம் வெளியான விடயங்களூடாக எளிய பெரும்பான்மை பிரதிநிதித்துவ முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகியனவற்றின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பட்டியற்படுத்துமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- நேர்க் குடியாட்சி நுட்பங்கள் செயற்படுத்தப்படும் முறையினை உள்ளடக்கும் வரைபு ஒன்றினைத் தயாரித்தற்கு ஆலோசனை வழங்குதல்.

## மாணவர் செயன்முறைகள்

- உரிமைகளைப் பட்டியற்படுத்தல்.
- உரிமைகள் மீறப்படும் விதத்தினைக் குறிப்பிடல்.
- உரிமைகள் மீறப்படுகையில் பெறக்கூடிய சட்டமுறையான பாதுகாப்புகளைப் பட்டியற்படுத்தல்.
- தேசிய, சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிப் பத்திரிகைகளிலும் வேறு மூலகங்களிலுமிருந்து பெற்ற தகவல்களைக் குறிப்பிட்டுக் கொள்ளல்.
- பொருளாதார அரசியல், சமூக சமத்துவமானது நடைமுறையில் அவ்வாறு செயற்படுகின்றது என்பது பற்றி கலந்துரையாடல்.
- சுதந்திரம், சமத்துவம் ஆகிய பற்றிய பல்வேறு கருத்துக்களை கோவைப்படுத்துதல்.
- இறைமையின் கொள்கை ரீதியான, நடைமுறை ரீதியான பலவீனங்களை வரைபில் பதிவுசெய்தல்.
- சட்டம் சம்பந்தமாக அரசியல் சிந்தனையாளர் வெளியிட்டுள்ள கருத்துகளை மூலகங்களிலிருந்து பெற்று பதிவுசெய்து கொள்ளல்.
- 'சட்டம்' எனும் பொருள் பற்றி நடத்தப்பட்ட விவாதத்தில் வெளியிடப்பட்ட முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, அறிக்கையொன்றினைத் தயாரித்தல்.
- அதிகார வேறாக்கம் சம்பந்தமாக அரிஸ்தோத்தில், பிளாக்ஸ்ரன், ஜோன் லொக் போன்றவர்கள் வெளியிட்ட கருத்துக்களைத் தேடிப் பதிவுசெய்து கொள்ளல்.
- அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரித்தானியா ஆகிய நாடுகளில், சட்டவாக்கக் களத்திற்கும் நீதித்துறைக்குமிடையிலான தொடர்புகளைக் காட்டும் வரைபு ஒன்றினைத் தயாரித்தல்.
- அரசியல் யாப்பு பற்றிய வரைவிலக்கணங்களைச் சேகரித்தல்.

- அரசியல் யாப்பு வகைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பட்டியற்படுத்தல்.
- ஒற்றையாட்சி, சமஷ்டி அரசுகள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள அலுவல்களை நிறைவேற்றுவதற்காக விதித்துரைக்கப்பட்ட நூல்கள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஆகியனவற்றிலிருந்து தகவல்களைத் திரட்டி அறிக்கைகள் தயாரித்தல். குழுத் தலைவர் அறிக்கைகளை வகுப்பிற்குச் சமர்ப்பித்தல்.
- எளிய பெரும்பான்மைப் பிரதிநித்துவ முறை நடைமுறையிலுள்ள நாடுகளின் பெயர்ப் பட்டியல் ஒன்றைத் தயாரித்தல்.
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை நடைமுறையிலுள்ள நாடுகளின் பெயர்ப் பட்டியலொன்றினைத் தயாரித்தல்.
- எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையும் எனும் பொருள் பற்றிய விவாதத்திற்காகத் தகவல்கள் திரட்டுதல், விவாதத்தில் பங்குபற்றல்.
- நேர்க் குடியாட்சி முறைகள் பற்றித் தகவல்களைத் திரட்டிப் பதிவு செய்தல்.
- நேர்க் குடியாட்சி முறைகள் தொழிற்படுத்தப்படும் விதத்தை உள்ளடக்கும் வரைபொன்றினைத் தயாரிக்க.

8. மதிப்பீட்டு முறை

(1) உரிமைகளை வகைப்படுத்திக் காட்டுக.

(2) குடியியல் (சிவில்) உரிமைகளின் கீழ் இடம்பெறும் இரண்டு உரிமைகள் பற்றித் தெளிவாக விளக்குக.

(3) பின்வருவனவற்றுள் அரசியல் உரிமைகளைச் சுருக்கமாகத் தரும் கூற்று யாது?

(i) வாழ்வதற்கான உரிமை, கட்சியில் சேர்வதற்கான உரிமை, தொழில் புரியும் உரிமை.

(ii) தாம் விரும்பும் மதத்தைக் கடைப்பிடிக்கும் உரிமை, தொழிற் சங்கத்தில் உறுப்புரிமை பெறுதற்கான உரிமை, விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை.

(iii) தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிருவதற்கான உரிமை, தொழில் புரியும் உரிமை, வாக்களிக்கும் உரிமை.

(iv) வாக்களிக்கும் உரிமை, அரசியல் கூட்டங்களை ஒழுங்குசெய்யும் உரிமை, தேர்தல்களில் அபேட்சகராக முன்வரும் உரிமை.

(v) சொத்துகளைத் தமதுடைமையாக்கிக் கொள்ளும் உரிமை, கட்சியிலிருந்து வெளியேறும் உரிமை, நியாயமான நேரம் வேலை செய்வதற்கான உரிமை.

விடை (iv)

(4) சமத்துவம் பற்றிப் பின்வரும் தலைப்புகளில் விடை தருக.

(1) சமத்துவம் என்பதன் கருத்து.

(2) சமத்துவத்தின் பிரதான இயல்புகள்.

(3) "பொருளாதாரச் சுதந்திரம் என்பது பொருளாதார சமத்துவமாகும்." கருத்துரை வழங்குக.

(5) இறைமை எனும் எண்ணகருவினைத் தெளிவுபடுத்துக.

(6) போடின், ஒகஸ்டின் ஆகியோர் இறைமை எண்ணக்கரு பற்றி வெளியிட்ட கருத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக்காட்டுக.

(7) இறைமை எண்ணக்கருவினைத் தற்கால அரசியல் சிந்தனையாளரின் கொள்கைகளைத் துணையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(8) ஒரு சட்டத்தில் காணப்படவேண்டிய அடிப்படையான நான்கு இயல்புகளை விளக்குக.

(9) யாப்புமுறைச் சட்டம் என்பதனை விளக்குக.

(10) சட்டமானது இறைமையினது ஆணையாகவும், பொதுமக்களின் விருப்பத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருப்பதால் சமுதாயத்தில் வாழும் தனியாள்கள் அதனைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(11) அதிகார வேறாக்கம் என்பதனால் கருதப்படுவதைத் தெளிவுபடுத்துக.

(12) மொன்ரெஸ்கியுவின் அதிகார வேறாக்கற் கொள்கையின் அடிப்படையான இயல்புகளை விவரிக்க.

(13) அதிகார வேறாக்கற் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக.

(14) அதிகார வேறாக்கற் கொள்கையின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

(15) அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டிய விடயங்கள் யாவை?

(17) "அரசியல் யாப்புகளை வகைப்படுத்தும் முறைகளில் ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி எனும் வகைப்படுத்தும் முறையே நடைமுறையில் மிகப் பயன்தருவதாகும்." கருத்துரை வழங்குக.

(18) "மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிப்பது சமஷ்டி ஆட்சி முறைகளில் அண்மைக் காலத்திலே ஒரு போக்காகும்." ஆராய்க.

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(19) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவுசெய்யப்படும் விதத்தைப் பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(1) நியமனப் பத்திரங்களைக் கையளித்தல்.

(2) தேர்தலின் பின் ஆசனங்களைப் பகிர்தல்.

(3) உறுப்பினரிடையே ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பல்.

(20) "விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது எளிய பெரும்பான்மைப் பிரதிநிதித்துவ முறையிலும் பார்க்க சனநாயகப் போக்குடைய பிரதிநிதித்துவ முறையாகும்." கருத்துரை வழங்குக.

(21) நேர்க் குடியாட்சி முறைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பின்வரும் தலைப்புகளில் தெளிவுபடுத்துக.

1. ஒப்பங்கோடல் (மக்கள் தீர்ப்பு)

2. குடிமுனைப்பு

3. பிறக்கழைப்பு

(22) பின்வருவனவற்றுள் எக்குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக ஒப்பங்கோடல் நடத்தப்படுகின்றது.

(1) மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தற்காக.

(2) சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்காக.

(3) முக்கியமான பூட்கை பற்றிப் பொதுமக்களின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்காக.

(4) ஆளுனரைத் தெரிவு செய்வதற்காக.

(5) சட்டவாக்கக்களம் இயற்றும் சட்டங்களின் குறைபாடுகளைச் சீராக்குவதற்காக.

விடை (III)

9. துணை நூல்கள்

| | |
|---|---|
| 1. அரசியல் இலக்கணம் | ஹரல்ட் ஜே. லஸ்கி |
| 2. அரசியல் கோட்பாடுகளும் ஆட்சி முறைகளும் | எ.ஜே. வில்சன் |
| 3. அரசறிவியல் சாரம் | எ. அப்பாத்துரை |
| 4. அரசறிவியல் அறிமுகம் | ரொட்அன்டர்ஸன் கிறிஸ்ரல் |

1. அலகு : 1.5 விதிக்கப்பட்ட நாடுகளின் அடிப்படையான அரசியல் நிறுவனங்கள்.

2. பாடநேரங்கள்: 80

3. உப அலகுகள்: 1.5.1 பிரித்தானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், இந்தியா, சோவியற்று ஒன்றியம்.

1.5.1.1 விதிக்கப்பட்ட நாடுகளின் சட்டவாக்கங்களும், நிருவாகக்களம், நீதிக்களம் ஆகியனவற்றின் அடிப்படை இயல்புகள்.

17 பாடநேரங்கள்

1.5.1.2 சட்டவாக்கக்களம், நிருவாகக்களம், நீதிக்களம் ஆகியன -வற்றிற்கிடையிலான தொடர்பு.

16 பாடநேரங்கள்

1.5.1.3 விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள நிருவகங்களைப் பக்கச்சார்பின்றிக் கற்றல்.

04. பாடவேளைகள்

1.5.1.4 விதிக்கப்பட்ட நாடுகளின் அரசியல் கட்சி முறைகளைக் கற்றல்.

13 பாடவேளைகள்

4. குறிக்கோள்கள்.

- தற்கால அரசுகளில் செயற்படும் அடிப்படையான ஆட்சிமுறை மாதிரிகளை அறிந்துகொள்வர்.
- அரசியல் முறைமையொன்றின் நோக்கங்கள் பற்றிக் கொள்கையளவிலான புரிந்துணர்வை பெறுதல்.
- உலகிலே பரவலாக நடைமுறையிலுள்ள அடிப்படையான அரசியல் முறைமைகளின் பல்வகைத் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ளல்.

5.5 சிறப்பான குறிக்கோள்கள்

1. விதிக்கப்பட்ட நாடுகளிலே ஆட்சிமுறை வளர்ச்சியுற்றவாறினை விவரித்தல்.
2. மாதிரியாக தரப்பட்டுள்ள ஆட்சிமுறைகளின் சிறப்பான குறிக்கோள்களை விளக்குதல்.
3. விதிக்கப்பட்ட நாடுகளின் சட்டவாக்கக்களங்களின் இயல்புகளை விவரித்தல்.
4. விதிக்கப்பட்ட நாடுகளின் நிருவாகக்களத்தின் வடிவத்தை விவரித்தல்.
5. விதிக்கப்பட்ட நாடுகளின் நீதிக்களங்களின் இயல்புகளைத் தெளிவுபடுத்தல்.
6. சட்டவாக்கக்களம், நிருவாகக்களம், நீதிக்களம் ஆகியனவற்றிற்கிடையிலான தொடர்பினைப் பகுப்பாய்வு செய்தல்.
7. விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள நிருவாகங்களின் கட்டமைப்பைச் சமநிலையாகப் பகுப்பாய்வு செய்தல்.
8. விதிக்கப்பட்டுள்ள நாடுகளிற் காணப்படும் கட்சி முறைமையின் இயல்பினை விவரித்தல்.

6. உள்ளடக்கம்

1. ● மாதிரி ஆட்சிமுறைகள்

– பிரித்தானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்ஸ், இந்தியா சோவியத் ஒன்றியம்.

● ஆட்சிமுறைகளின் வளர்ச்சியில் பிரதான கட்டங்கள்.

– பிரித்தானியா (கி.பி. 5ஆம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரையில்ான பிரதான கட்டங்கள்)

– அமெரிக்க ஐக்கிய நாடுகள் (குடியேற்றங்கள் தாபிக்கப்பட்டதிலிருந்து சமஷ்டி ஆட்சி முறை புகுத்தப்படும் வரையிலான பிரதான கட்டங்கள்.)

– பிரான்ஸ் (பிரான்ஸியப் புரட்சியின் முதலாவது குடியரசு ஆட்சிலிருந்து ஐந்தாவது குடியரசு தாபிக்கப்படும் வரையிலான பிரதான கட்டங்கள். ஜெனரல் டி கோல் என்பவரது ஆட்சியில் பிரான்ஸ் பலம்வாய்ந்த அரசாகத் திகழ்ந்தது.)

– இந்தியா (குடியேற்றமாகவிருந்து சுதந்திரம் பெற்றமை; 1950 இல் புதிய அரசியல் யாப்பு புகுத்தப்பட்டமை)

– சோவியத் ஒன்றியம் (1917ஆம் ஆண்டுப் புரட்சி; 1918, 1936, 1977 ஆண்டுகளில் புகுத்தப்பட்ட அரசியல் யாப்புகள்.)

2. ● ஆட்சிமுறைகளின் சிறப்பியல்புகள்.

(அ) பிரித்தானியா

பாராளுமன்ற சனநாயக ஆட்சிமுறை.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி, சமஷ்டி முறை ஆகியனவற்றைக் கொண்ட சனநாயக ஆட்சிமுறை.

(இ) பிரான்ஸ்

பாராளுமன்ற சனநாயகமும் சனாதிபதி ஆட்சியும் கலந்துள்ள ஆட்சி முறை.

(ஈ) இந்தியா

வரைந்த, நெகிழா அரைகுறையான சமஷ்டி, பாராளுமன்ற சனநாயக ஆட்சிமுறை.

(உ) சோவியற்று ஒன்றியம்

வரைந்த, நெகிழா, சமஷ்டி, சமதர்ம ஆட்சிமுறை.

3. ● விதிக்கப்பட்ட நாடுகளின் சட்டவாக்கக்களங்கள்.

(அ) பிரித்தானியா

● சட்டவாக்கக் களத்தின் கட்டமைப்பு.

– பொதுமக்கள் சபை

– பிரபுக்கள் சபை

● சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்கள்.

– சட்டவாக்கக் களத்தின் கடமைகள்.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

- அமெரிக்க சட்டவாக்கக் களத்தின் இயல்பு
  - இரு மன்றங்களினால் ஆக்கப்பட்டது. (கொங்கிரஸ்)

1. பிரதிநிதிகள் சபை
2. செனட் சபை

- சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்கள்.
- சட்டவாக்கக் களத்தின் கடமைகள்.

(இ) பிரான்ஸ்

- சட்டவாக்கக் களத்தின் கட்டமைப்பு
  - இரு மன்றங்களைக் கொண்ட சட்டவாக்கக் களம்.
    1. பிரதிநிதிகள் சபை
    2. செனட் சபை
  - பிரதிநிதிகள் சபை உறுப்பினர் தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
  - தேர்தல் கழகத்தினால் செனட் சபை தெரிவுசெய்யப்படும்.
- பிரான்ஸ் சட்டவாக்கக் களம் தெரிவுசெய்யப்படும் விதம்.
  - தேர்தல் தொகுதி மட்டத்தில் பிரதிநிதிகள் சபைக்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றமை.
  - தேர்தலின் முதலாவது கட்டத்தில் பெரும்பான்மையைப் பெறுவோர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுவர்.
  - முதலாவது கட்டத்தில் 10% இலும் குறைந்த வாக்குகளைப் பெற்றவர்கள் நீக்கப்படுவர்; பின்னர் தேர்தலின் இரண்டாவது கட்டம் நடாத்தப்படும்.
- செனட் சபை
  - இதன் உறுப்பினர்கள் பிரதேச சபைகளினால் தெரிவுசெய்யப்படுவர்.
  - காலத்திற்குக் காலம் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மாற்றத்திற்குள்ளாகும் விதம்.
- பிரான்ஸினது சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.
  - சட்டமியற்றல்
  - மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
  - நிதி சம்பந்தமான அதிகாரங்களைப் பெற்றிருத்தல்.

(ஈ) இந்தியா

- சட்டவாக்கக் களத்தின் கட்டமைப்பு
  - லோக் சபா, உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவது, பதவி வகிக்கும் காலம், குறைவு.
  - ராஜ்ய சபா, உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவது, பதவி வகிக்கும் காலம்.
  - ராஜ்ய சபை சம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துகள்.
- சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்கள்
  - சட்டவாக்கம்
  - தேசிய நாணயத்தைக் கட்டுப்படுத்தல்.
  - நிருவாகக் களத்தினைக் கட்டுப்படுத்தல்.

- சட்டவாக்கக் களத்தின் கடமைகள்.
  - சட்ட வரைவுகளை ஆராய்தல்.
  - பிரதிநிதிகளுக்கு அரசியலில் பயிற்சியளித்தல்.

(உ) சோவியற்று ஒன்றியம்

- சட்டவாக்கக் களத்தின் கட்டமைப்பு
  - உயர் (சுப்ரீம்) சோவியற்று சபையானது சட்டவாக்கக் களமாகத் தொழிற்படுகின்றமை.
  - இரு மன்றங்களைக் கொண்டுள்ளமை.
    1. சோவியற்றுகளின் ஒன்றியம்
    2. நாட்டினங்களின் சோவியற்று.
  - பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறையும் பதவிக் காலமும்.
- சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்கள்
  - அதி உயர் நிறுவனமாகத் தொழிற்படுதல்.
  - பிரசீடியத்தின் உறுப்பினரைத் தெரிவுசெய்தல்.
  - மத்திய அரசாங்கத்தின் அமைச்சரவையைத் தெரிவு செய்தல்.
  - நீதி மன்றங்களுக்கு நீதிபதிகளைத் தெரிவு செய்தல்.
  - சட்டமா அதிபர் தெரிவு செய்தல்.
  - மத்திய அரசாங்த்திற்குரிய மூலாதார அதிகாரங்களைச் செயற்படுத்தல்.
- சட்டவாக்கக் களத்தின் கடமைகள்.
  - தேசிய பொருளாதாரத் திட்டங்களைக் கட்டுப்படுத்தல்.
  - அரசியல் யாப்பினை மீளாய்வு செய்தல்.
  - அரசின் உயரதிகாரிகளை நியமித்தல்.
  - ஆணைக் குழுக்களை நியமித்தல்.
  - படைகளைக் கட்டுப்படுத்தல்; யுத்தத்தைப்/சமாதானத்தைப் பிரகடனஞ் செய்தல்.
  - சர்வதேச தொடர்புகளை விருத்தி செய்தல்.

4. • விதிக்கப்பட்ட நாடுகளின் நிருவாகக்களம்.

(அ) பிரித்தானியா

- பிரித்தானிய நிருவாகக் களத்தின் கட்டமைப்பு.
  - பெயரளவு நிருவாகம்.
  - உண்மை நிருவாகம், தெரிவு செய்யப்படும் விதம்.
- பிரித்தானிய நிருவாகக் களத்தின் அதிகாரம், கடமை, குறிப்பான இயல்புகள்.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

- நிருவாகக் களத்தின் தன்மை.
  - சனாதிபதி (பிரதான நிறைவேற்று அலுவலர்)
  - துணை சனாதிபதி
- நிருவாகக் களத்தின் அதிகாரங்கள்.
  - உலக அரசுகளின் தலைவர்களுள் அமெரிக்க சனாதிபதிக்கு உரித்தான சிறப்பான இடம்.
  - சனாதிபதி அதிகாரங்கள்.
- நிருவாகக்களத்தின் கடமைகள்.

(இ) பிரான்ஸ்

- பிரான்ஸின் நிருவாகக் களத்தின் தன்மை.
  - நிருவாக (நிறைவேற்று) சனாதிபதி முறை.
  - பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை.
  - அமைச்சரவை அமைச்சர்கள் தமது உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தல் வேண்டும்.

- பிரான்ஸிய சனாதிபதி நியமிக்கப்படும் விதம்.
  - 1945 ஆம் ஆண்டு வரை தெரிவு செய்யும் மன்றத்தினால் சனாதிபதி தெரிவுசெய்யப்பட்டார்.
  - தற்காலத்திலே தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மக்கள் தெரிவு செய்வார்.
  - முதலாவது கட்டத்திலே பெரும்பான்மை வாக்குகள், கிடைக்காவிட்டால் இரண்டாம் தேர்தல் நடைபெறும்.
- நிருவாகத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.
  - சட்டவாக்கக் களத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாகச் சட்டமியற்றலும் கட்டளைகளைப் பிறப்பித்தலும்.
  - சனாதிபதியின் இஷ்டப்படி பாதீடு நிறைவேற்றப்படல்.
  - சட்டவாக்கக் களத்தினால் அங்கீகரிக்கப்படாத சட்டமூலங்களை 70 தினங்களுக்கு பிறகு அங்கீகரித்தல்.
  - அவசரக் கால அதிகாரங்கள்.
  - பிரதமரை நியமித்தல்.

(ஈ) இந்தியா

- நிருவாகக் களத்தின் தன்மை.
  - நாம நிருவாகம்
    சனாதிபதி, துணைச் சனாதிபதி ஆகியோர் நியமிக்கப்படும் விதம்.
  - உண்மை நிருவாகம்.
    தெரிவு செய்யப்படும் விதம்.
  - நிருவாகக் களம் பதவியிலிருக்கும் காலம்.
- நிருவாகத்தின் அதிகாரங்கள்
  - சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
  - சட்டவாக்கத்தைக் கட்டமைத்தல், தரிப்பிடுதல், குலைத்தல்.
  - கூட்டுப்பொறுப்பு
  - உயர் அரசாங்க அதிகாரிகளை நியமித்தல்.
  - நீதித் துறையின் நடடிக்கைகள் சம்பந்தமான அதிகாரங்கள்.
  - பிரதமரின் ஆலோசனைப்படி பெயரளவு நிருவாகம் தொழிற்படல்.
- பெயரளவு நிருவாக நடவடிக்கைகள்.
  - வெளிநாட்டு அரசுகளின் தலைவர்களை வரவேற்றல்.
  - அரசின் சடங்கு முறையான உற்சவங்களில் தலைமை வகித்தல்.
  - நாட்டிற்குச் சிறப்பான சேவையாற்றியவர்களுக்கு கௌரவப் பட்டங்கள் வழங்குதல்.

(உ) சோவியற்று ஒன்றியம்

- நிருவாகக் களத்தின் தன்மை.
  - அமைச்சரவையினை நிருவாகக் களமாகக் கருதுதல்.
  - சனாதிபதி நிருவாகக் களத்தின் தலைவராவார்.
  - சோவியற்று ஒன்றியத்தின் நிருவாகக் களம் நியமிக்கப்படும் விதம்.
  - அமைச்சர்களின் எண்ணிக்கை.

- நிருவாகக் களத்தின் அதிகாரங்கள்.
  - சோவியற்று ஒன்றியத்தில் விதிப்புகளும் கட்டளைகளும் பிறப்பிக்கப்படும் விதமும் அவை நடைமுறைப்படுத்தப்படும் விதமும் பற்றி அறிதல்.
  - மத்திய அரசாங்கத்திற்கும் தேசிய குடியரசுகளுக்கும் இடையில் தொடர்புகளைப் பேணல்.
  - நிதிக் கட்டுப்பாடு.
  - வெளிநாட்டு விவகாரங்கள்.
  - நிருவாகத் தாபனங்களையும் விசேட குழுக்களையும் தாபித்தல்.
  - இராணுவத்தைக் கட்டுப்படுத்தல்.
- நிருவாகக் களத்தின் கடமைகள்.
  - அமைச்சரவையின் பூட்கையை அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல்.
  - அமைச்சரை நியமித்தல், மாற்றுதல், நீக்குதல்.

5. விதிக்கப்பட்ட நாடுகளின் நீதிக்களம்.

(அ) பிரித்தானியா

- நீதி நிருவாகத்தின் கட்டமைப்பு.
- நீதி மன்றுகளின் வகைகள்.

- பிரித்தானிய நீதிக் களத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.

  பிரித்தானிய நிதிக்களத்தின் சுதந்திரம்.
  - சட்டத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ளல்.
  - நீதி அமைச்சரானவர் பிரபுக்கள் சபையினதும் கோமறைக் கழகத்தினதும் (பிரிவுக் கவுன்சில் தலைவராவார்)
  - நாம (பெயரளவு) நிருவாகக் களத்தினால் நீதிபதிகள் நியமிக்கப்படுதல்.
  - நீதிபதிகளின் சம்பளமும் சேவைக்காலமும்.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

- அமெரிக்க நீதிக் களத்தின் தன்மை.
  - நீதிக் களத்தின் சுதந்திரம்.
  - உயர் நீதிமன்ற நீதியரசர்களை நியமித்தல்.
  - மத்திய அரசாங்கத்தினதும் பிரதேச அரசாங்கங்களினதும் நீதி நிருவாகம்.
  - நீதிக் களத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.

(இ) பிரான்ஸ்

- பிரான்ஸிய நீதிக்களத்தின் தன்மை.
  - பிரித்தானிய நீதிக் களத்திலிருந்தும் அமெரிக்க நீதிக்களத்திலிருந்தும் பெருமளவில் வேறுபட்டது.
  - உரோமச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது.
  - நீதிக் களத்தின் பிரதான பிரிவுகள் இரண்டு.
    1. நிருவாக நீதி முறைமை.
    2. வழமையான நீதிமன்ற முறைமை.
  - குற்றவியல் வழக்குகள் சம்பந்தமான நீதிமன்ற வகைகள்.
  - அதி உயர் நீதிமன்றம்.
- பிரான்ஸிய நீதிக் களத்தின் கடமைகள்.
  - அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல்.
  - அரசியல் யாப்பின் பயனுரைத்தல்.
  - சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுவதுடன் நீதி நிருவாகமும்.

(ஈ) இந்தியா

- இந்திய நீதிக் களத்தின் தன்மை.
  - நீதி நிருவாகக் கட்டமைப்பும் நீதிமன்ற வகைகளும்.
  - உயர் நீதி மன்றம்.
  - பிரதேச மட்டத்திலுள்ள நிதி நிருவகங்கள்.
- நீதிக் களத்தின் அதிகாரங்களும் கடமைகளும்.
  - நீதி நிருவாகம்
  - உயர்ந்த மன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்படும் சட்டவாக்க, நிருவாக நடவடிக்கைகள்.
  - உயர் நீதிமன்றத்திற்குள்ள நீதிமுறையான மீளாய்வு செய்வதற்கான அதிகாரம்.

(உ) சோவியற்று ஒன்றியம்

- சோவியற்று நீதிக் களத்தின் தன்மை.
  - சோவியற்று ஒன்றியத்தின் சட்டமுறைமையும் நீதிக்கள நிருவகங்களின் கட்டமைப்பும், தாராளமான சனநாயக நாடுகளின் நீதிமுறையிலும் மிக்க வேறுபட்டவை.
  - சோஷலிச முறைமையின் அடிப்படையில் அமைந்த நீதிமுறை.
  - சோவியற்று ஒன்றியத்திற்கே சிறப்பானதான சட்ட முறைமையும் நீதி நிருவாகக் கட்டமைப்பும் இருக்கின்றமை.
  - சட்டவாக்கக் களத்தின் நேரடியான கட்டுப்பாட்டுக்கு உட்படுவதால் நீதிக்களம் சுயாதீனமானதொரு நிருவகமாகச் செயற்படாமை.
  - சோவியற்று தேசம் முழுவதும் ஒரே மாதிரியான நீதி நிருவாகம் காணப்படுகின்றமை.
  - நீதிமன்ற வகைகள்.

- உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள்
  - மேன்முறையீட்டு அதிகாரம்
  - கீழ்மட்ட நீதிமன்றுகளைப் பரிசீலனை செய்வதும் அந்நீதிமன்றங்களுக்குப் பொருத்தமான கட்டளைகளைப் பிறப்பிப்பதும்.
  - சட்டங்களின் பொருள்கோடல் சம்பந்தமாக அதிஉயர் (சுப்ரீம்) சோவியற்றுச் சபைக்கு உதவுதல்.
  - பிரச்சினைகளைத் தீர்ப்பது.
  - அரசியல் யாப்பின் பாதுகாவலனாகச் செயற்படல்.
- நீதிக்களத்தின் கடமைகள்.
  - நாட்டிலுள்ள அனைவருக்கும் நீதியையும் நியாயத்தையும் வழங்கல்.
  - வகுப்புப் பிரிவுகளற்ற கொமியூனிஸ்ட் சமுதாயத்தை உருவாக்குவதற்கேற்றவாறு சட்டமும் நீதிமன்றங்களும் தொழிற்படுவது.

6. • சட்டவாக்கக் களம், நிருவாகக் களம், நீதிக்களம் ஆகியனவற்றிற்கிடையிலான தொடர்புகள்.

(அ) பிரித்தானியா

- பிரித்தானியாவின் சட்டவாக்கக் களம், நிருவாகக்களம், நீதிக்களம் ஆகியனவற்றின் அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் என்பனவற்றைப் பயன்படுத்தி அவற்றினிடையே காணப்படும் தொடர்புகள் பற்றிப் பகுப்பாய்வு செய்தல்.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

- அரச நிருவகங்களுக்கிடையிலான அன்னியோன்னிய தொடர்பு.
  - அரசியல் யாப்பு மூலம் நிருவாகக் களம், சட்டவாக்கக் களம், நீதிக்களம் ஆகியனவற்றின் அதிகாரங்கள் தெட்டத்தெளிவாக வேறுபடுத்தப்பட்டுள்ளன.
  - சட்டவாக்கக் களம், நிருவாகக் களம், நீதிக்களம் ஆகியன தொடர்பில் சனாதிபதியின் அதிகாரம் செயல்படுதல்.
  - சட்டவாக்கம், சட்டத்தினை ஏற்றல், சட்டத்தின் பொருள் கோடல் ஆகியனவற்றின் போது ஒத்துழைப்பு வழங்கும்.
- அமெரிக்க சனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படும் விதம்.
  - தடைசமப்பாடுகள் (Checks and balances)
  - சனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்கள், பதவி உயர்வு, இடமாற்றங்கள், பதவி நீக்கம் ஆகியவற்றினை அங்கீகரிக்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் காங்கிரஸ் சபைக்கு உண்டு.
  - நிருவாகக் களத்தைக் கட்டுப்படுத்தும், அதிகாரம் சட்டவாக்கக் களத்திற்கு உண்டு.

- அமெரிக்க நிருவாகக் களத்தினதும் நீதிக் களத்தினதும் அதிகாரம் விருத்தியடைகின்றமை.
  - சட்டவாக்கக் களத்தினால் அங்கீகரிக்கப்படும் சட்டங்களின் வரைவுகளுக்கு இறுதியான அங்கீகாரம் அதிகாரம் நிருவாகக் களத்திற்கும் நீதிக் களத்திற்கும் உரித்தாகும்.

- ஒரு நிருவகம் மற்றைய நிருவகத்தின் நடவடிக்கைகளுக்குத் தடையாகச் (Check) செயற்படுதல்.
- தனித்தனியாகத் தாபிக்கப்பட்டுள்ள இந் நிறுவகங்கள் தொழிற்படுகையில் ஒன்றுனொன்று சம்பந்தப்படுதல்.

(இ) பிரான்ஸ்

- பிரான்சிலே சட்டவாக்கக்களம், நிருவாகக் களம், நீதிக்களம் ஆகியனவற்றிற்கிடையிலான தொடர்பு.
    - பிரான்ஸின் சனாதிபதியானவர் தனது நடவடிக்கைகளுக்குத் தானே பொறுப்பானவர் என பாராளுமன்றத்திற்கோ நீதிக் களத்திற்கோ கூறவேண்டிய அவசியமில்லை.
    - பிரான்ஸிலே சகல சட்டங்களுக்கும் சனாதிபதியினதும் பிரதமரினதும் இறுதியான அங்கீகாரம் அவசியமாகும்.
    - சட்டவாக்கக் களத்தைக் குலைக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.
    - சனாதிபதியானவர் தனது செய்கைகள் குறித்து தேசிய சபைக்குப் பொறுப்புடையவராவார்.
    - சனாதிபதியே பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிப்பார்.
    - பிரதிநிதிகள் சபையினதும் செனட் சபையினதும் கொள்கையை ஆராய்ந்தறிந்து அவற்றைக் குலைக்கும் அதிகாரம் தேசிய சபைக்கு உண்டு.
    - ஒப்பங்கோடல் சம்பந்தமான அதிகாரம் சனாதிபதிக்கு உரித்தாகும்.
    - சட்டவாக்கக் களம் நிருவாகக் களத்தின் மீது செல்வாக்குச் செலுத்த மாட்டாது.
    - அதிஉயர் நீதிமன்றுக்கு நீதியரசரைத் நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு.

(ஈ) இந்தியா

- இந்திய நிருவாகக் களத்தின் அமைப்பு
    - பிரதமரைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை லோக்சபாவிலிருந்து தெரிவு செய்யப்படுதல்.
    - நிருவாகக் களமானது லோக் சபாவிற்குக் கூட்டுப் பொறுப்பினையுடையதாகவுள்ளது.
    - சட்டவாக்கக் களத்தைக் குலைக்கும் அதிகாரம் நிருவாகக் களத்திற்கு உண்டு.
- மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்குமிடையிலா தொடர்புகள்.
    - பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் நாம (பெயரளவு) நிருவாகக் களத்தினால் மாநில ஆளுநர்கள் நியமிக்கப்படுதல்.
    - மாநிலங்களின் நிருவாகம் குறித்து மத்திய அரசாங்கத்திடமுள்ள அதிகாரங்கள்.
- இந்திய நீதிக்களத்தின் சுதந்திரம்.
    - சட்டத்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளல்.
    - மாநில மேல்நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரை நீதியரசர்களை நியமித்தல்.
    - நீதிக்களத்தின் சுதந்திரத்தைப் பேணுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள்.

(உ) சோவியற்று ஒன்றியம்

- சோவியற்று ஒன்றியத்தில் அடிப்படையான அமையங்களுக்கிடையிலான தொடர்பு.
  - சட்டவாக்கக் களத்தினால் நிருவாகக்களம் நியமிக்கப்படல்.
  - நிருவாகக் களமானது தனது நடவடிக்கைகள் தொடர்பில் சட்டவாக்கக் களத்திற்குப் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.
  - நிருவாகக் களத்திற்கும் சட்டவாக்கக் களத்திற்குமிடையே அன்னியோன்னிய தொடர்பு இல்லாமை.
  - நிருவாகக் களத்தை நீக்கும் அதிகாரம் பிரிசீடியம் சபைக்கு உண்டு.
  - நீதிக்களம் தனியாகச் செயற்பட்டாலும் அது சட்டவாக்கக் களத்தினது நேரடியான கட்டுப்பாட்டிற்கு உட்படும்.
  - அரசியல் யாப்பினைப் பாதுகாக்கும் பொதுப்பு நீதிக் களத்திற்கு உரியதல்ல.

7. • **விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள தாபனங்களின் கட்டமைப்பினை சமநிலையாகக் (பக்கச்சார்பின்றி) கற்றல்.**

- விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஆட்சிமுறைகளின் சிறப்பான இயல்புகள்.

(அ) பிரித்தானியா
- ஒற்றையாட்சி, நெகிழ் யாப்பு, வரையா யாப்பு, அரச பதவி ஆகியனவற்றைக் கொண்ட பாராளுமன்ற சனநாயக, அமைச்சரவை (கபினட்) ஆட்சிமறை நிலவுகின்ற நாடு.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
- சமஷ்டி ஆட்சி, வரைந்த யாப்பு, நெகிழா யாப்பு, ஆகியவற்றுடன் வலு வேறாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி ஆட்சி முறை நிலவுகின்ற நாடு.

(இ) பிரான்ஸ்
- ஒற்றையாட்சி, வரைந்த யாப்பு, நெகிழா யாப்பு, பல்கட்சி முறைமை ஆகியனவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி ஆட்சிமுறை நிலவுகின்ற நாடு.

(ஈ) இந்தியா
- அரைகுறையான சமஷ்டி ஆட்சி, வரைந்த யாப்பு, நெகிழா யாப்பு பெயரளவு நிருவாகக் களம் ஆகியனவற்றைக் கொண்ட அமைச்சரவை (கபினட்) ஆட்சிமுறை நிலவுகின்ற நாடு.

(உ) சோவியற்று ஒன்றியம்
- சமஷ்டி ஆட்சி, வரைந்த நெகிழா யாப்பு, ஒரு கட்சி முறைமை ஆகியனவற்றுடன்வு சனாதிபதியினால் நிருவாகம் மேற்கொள்ளப்படுகின்றன சோஷலிச ஆட்சிமுறை நிலவுகின்ற நாடு.

- அடிப்படையான அரச நிருவகங்களுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.
  - சட்டவாக்கக் கள, நிருவாகக் கள, நீதிக் கள நிருவகங்களின் அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றிற்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.
  - அரசியல் கட்சிகள், அழுக்கக் குழுக்கள் ஆகியன அரசின் அடிப்படை நிருவகங்கள் மீது செலுத்தும் செல்வாக்கு.

8. • விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள அரசியல் கட்சி முறைமை.

- அரசியல் சட்சி என்பதனை விளக்குதல்.
- கட்சி முறைமை

(அ) தனிக் கட்சி முறைமை

(ஆ) இரு கட்சி முறைமை

(இ) பல் கட்சி முறைமை

• பிரித்தானிய அரசியல் கட்சி முறைமையின் வடிவமைப்பு.

- அரசியல் கட்சிகளுக்கு நீண்ட வரலாறு இருக்கின்றமை.
- ஒழுங்கமைந்த இரு கட்சி முறைமை.
- கட்சிப் பூட்கைகளிலுள்ள வேறுபாடு.
- காலத்தின் தேவைப்பாடுகளுக்கமைய கட்சிப் பூட்கைகள் திருத்தியமைக்கப்படுவது.
- மூன்றாவது சக்தியாக (கட்சியாக) விபரல் சனநாயகக் (டிமோக்கிரட்டிக் கட்சி வளர்ச்சி யெய்தியமை.

• ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் கட்சி முறைமை.

- இரு கட்சி முறைமை.
- தேர்தல் காலங்களில் மட்டுமே அரசியல் கட்சிகள் தொழிற்படுவது.
- மூன்றாவது கட்சி எனக் கூறத்தக்க கட்சி ஒன்று இல்லாமை.
- அரசியல் கட்சிகள் உரிய முறையில் ஒழுங்கமைப்புச் செய்யப்படாமலிருக்கின்றமை.
- சனநாயக (டிமோக்கிரட்டிக்) கட்சி நீண்ட காலமாக அதிகாரத்திலிருந்துள்ளமை.
- அமுக்கக் குழுக்கள் அரசியல் கட்சிகள் மீது செல்வாக்குச் செலுத்தும் விதம்.

• பிரான்ஸ் கட்சி முறைமை.

- பல்கட்சி முறைமையும் பிரதான கட்சியும்.
- நடுத்தர அளவிலான அதிகாரத்தினையுடைய அநேக கட்சிகள் இருக்கின்றமை.
- பிரதான அரசியல் கட்சிகளினது பூட்கைகளும் அவற்றிற் காணப்படும் முரண்பாடுகளும்.

• இந்தியாவின் கட்சி முறைமை.

• பல்கட்சி முறைமையும் பிரதான கட்சியும்.

- காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கம்.
- சமூக பல்வகைத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட அநேக கட்சிகள் இருக்கின்றமை.

• சோவியற்று ஒன்றியத்தின் கட்சிமுறைமை.

- தனிக்கட்சி முறைமை (கம்யூனிசக் கட்சி)
- கம்யூனிசக் கட்சியின் ஆரம்பம்.

1. தொழிலாளர் குழு 1895
2. கம்யூனிசக் கட்சி 1925

- முறைமையான அமையங்கள் அனைத்தையும் நெறிப்படுத்தும் அதிகாரம் கம்யூனிசக் கட்சியிடம் உள்ளமை.
- கட்சிப் பூட்கைகள்.

1. சோவியற்று ஒன்றியத்திலே கம்யூனிச (பொதுவுடைமை) சமூக முறைமையை நிலைபெறச் செய்வது.
2. அரசினையும் கட்சியையும் ஒன்றெனக் கருதுதல்.
3. அரசின் சகல செயல்களும் கம்யூனிசக் கட்சியினால் தீர்மானிக்கப்படுகின்றமை.
4. அரசை விஞ்சும் வகையில் கட்சி செயற்படுகின்றமை.

7. ஆசிரியர் - மாணவர் செயன்முறைகள்.

### ஆசிரியர் செயன்முறைகள்

- விரிவுரை முறை, கலந்துரையாடல் முறை, வினா விடை முறை, சிந்தனையைக் கிளறும் முறை போன்ற கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி விடயங்களை விளக்குதல்.
- அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, சோவியற்று ஒன்றியம் ஆகிய நாடகளின் தேசப் படங்களை வரைந்து அவற்றிலே பிரதேசங்களைக் குறித்துப் பெயரிடுதல்.
- பிரித்தானிய அரசியல் யாப்பின் வளர்ச்சி, பெயரளவு நிருவாகக் களம், உண்மை நிருவாகக் களம், சட்டவாக்கக் களம் ஆகியன பற்றிய தகவல்களை, மூல நூல்களை வாசித்துத் திரட்டுமாறு மாணவர்களை நெறிப்படுத்துதல்.
- விவாதமொன்றினை ஒழுங்கு செய்தல்.
  பொருள்:- "அமெரிக்க சட்டக்களமானது அதிகாரமற்ற ஒரு நிறுவகமாகும்."
  விவாதத்திற்கு அவசியமான தகவல்களைத் திரட்டுமாறு மாணவர்களைப் பணித்தல்.
- அமெரிக்க சனாதிபதியினதும் இலங்கைச் சனாதிபதியினதும் அதிகாரங்களை ஒப்பிட்டுப் பார்க்குமாறு மாணவர்களுக்குக் கூறுதல்.
- பிரான்ஸிய புரட்சியிலிருந்து 1958 வரை பிரான்ஸின் ஆட்சிமுறை வளர்ச்சியுற்ற விதத்தைப் பற்றித் தகவல்களைத் திரட்டுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்.
- பிரான்ஸின் தேசிய சபை, செனட் சபை பிரதிநிதிகள் சபை முதலிய அமையங்களிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை உறுப்பினர்கள் பதவி வகிக்கும் காலம், தெரிவு செய்யப்படும் விதம் ஆகியனவற்றைப் பற்றி அறிந்து கொள்ளுமாறு மாணவர்களைப் பணித்தல்.
- பிரான்ஸிலே சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் முறையைப் பற்றித் தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர்களுக்கு உற்சாகமளித்தல்.
- இந்தியாவின் ஆட்சிமுறை வளர்ச்சியுற்ற விதத்தைப் பற்றித் தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர்களுக்கு உற்சாகமளித்தல்.
- இந்திய சனாதிபதி தெரிவு செய்யப்படும் விதத்தைப் பற்றித் தகவல்களைத் திரட்டுமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- கொர்பசெவ்வின் சீர்திருத்தங்களின் பிரதான அம்சங்களைப் பற்றி அறிந்து கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்.
- சோவியற்று ஒன்றியத்தின் நீதிமன்ற வகைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கு அவசியமான மூல நூல்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- விவாதமொன்றிற்கு ஏற்பாடு செய்தல்.

விடயம்

"வகுப்புப் பிரிவுகளில்லாத சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பும் வகையில் சட்டமும் நீதிமன்ற முறைமையும் தொழிற்பட்டால் முழுச் சமுதாயத்திற்கும் நீதியையும் நியாயத்தையும் வழங்கக் கூடியதாக இருக்கும்."

- அமெரிக்க சனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்குச் சட்டவாக்கக் களமும் நீதிக் களமும் முயற்சி செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடிப் பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- பிரான்ஸிலே சட்டவாக்கக் களம், நிருவாகக் களம், நீதிக்களம் ஆகியவற்றிற்கிடையே நிலவும் தொடர்புகள் பற்றித் தகவல்களைத் தேடிப் பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்களைத் தூண்டுதல்.
- சோவியற்று ஒன்றியத்திலே அடிப்படையான அமையங்களிடையே நிலவுகின்ற தொடர்புகள் பற்றி மேலதிகத் தகவல்களைத் தேடிப் பெற்றுக்கொள்ளுமாறு மாணவர்களை ஊக்குவித்தல்.
- விதித்துரைக்கப்பட்ட நாடுகளின் ஆட்சிமுறைகளிற் காணப்படும் அடிப்படையான அம்சங்களைத் தேடிப் பெற்றுக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு வழிகாட்டல்.

(வகுப்பினை 5 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு நாட்டை ஒதுக்கிடுக.)

- வகுப்பு மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினையும் ஒரு நாட்டினது அரசியல் கட்சி முறைமையைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, அறிக்கையொன்று தயாரிக்குமாறு ஆலோசனை வழங்குதல்.

மாணவர் செயன் முறைகள்

- அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, சோவியற்று ஒன்றியம் ஆகிய நாடுகளின் தேசப்படங்களை வரைந்து, அவற்றில் பிரதேசங்களைக் (மாநிலங்களைக்) குறித்துப் பெயரிதல்.
- பிரித்தானிய ஆட்சிமுறையின் வளர்ச்சி, பெயரளவு நிருவாகக் களம், உண்மை நிருவாகக் களம், சட்டவாக்கக் களம் ஆகியன பற்றித் தகவல்களைத் திரட்டிக் குறிப்பிட்டுக் கொள்ளுதல்.
- அமெரிக்க சட்டவாக்கக் களம் பற்றிய விவாதத்துக்கு அவசியமான தகவல்களைத் திரட்டுவது; அவற்றைப் பதிவு செய்வது; விவாதத்தில் பங்குபற்றல்.
- அமெரிக்க, இலங்கைச் சனாதிபதிகளின் அதிகாரங்களை ஒப்பிடுவது முக்கிய விடயங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளல்.
- 1958 வரை பிரான்ஸின் ஆட்சிமுறை வளர்ச்சியுற்ற விதத்தைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, அறிக்கையொன்றினைத் தயாரித்தல்.
- பிரான்ஸின் சட்டவாக்கக்களம் பற்றிய தகவல்களைத் தேடிப் பெற்று, பதிவு செய்து கொள்ளல்.
- பிரான்ஸிலே சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் முறையைப் பற்றி அறிக்கையொன்று தயாரித்தல்.
- இந்திய ஆட்சிமுறையின் வளர்ச்சியைப் பற்றித் தகவல்களைத் திரட்டி, பதிவு செய்து கொள்ளல்.

- இந்திய சனாதிபதி தெரிவு செய்யப்படும் முறை சம்பந்தமான தகவல்களைத் திரட்டி அதனை அட்டவணைப்படுத்துதல்.
- கொர்பசெவ் சீர்திருத்தங்களின் முக்கியமான அம்சங்களைத் தேடிப்பெற்று, பதிவுசெய்து கொள்ளல்.
- சோவியற்று ஒன்றியத்திலுள்ள நீதிமன்ற வகைகள் பற்றிப் பட்டியலொன்றைத் தயாரித்தல்.
- "வகுப்புப் பிரிவுகளற்ற சமுதாயமொன்று..." எனும் பொருள் பற்றித் தகவல்களைத் திரட்டுதல், விவாதத்தில் கலந்து கொள்ளல், விவாதத்தை அவதானித்தல்.
- அமெரிக்க சனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றிக் கட்டுரையொன்று வரைதல்.
- பிரான்ஸினது அடிப்படையான அமையங்களுக்கிடையே நிலவும் தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்து அறிக்கையொன்று தயாரித்தல்.
- சோவியற்று ஒன்றியத்தில் அடிப்படையான அமையங்களுக்கிடையே நிலவுகின்ற தொடர்புகள் பற்றி மூல நூல்களிலிருந்து சேகரித்த தகவல்களைப் பதிவு செய்து கொள்ளல்.
- விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஆட்சிமுறைகளின் அடிப்படையான இயல்புகளைச் சுருக்கமாக எழுதிக் கொள்ளல்.
- விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள கட்சிமுறைமைப் பற்றித் தகவல்களைச் சேகரித்து, அறிக்கையொன்று எழுதுதல்.

8. மதிப்பீட்டு முறை

01. விதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஆட்சிமுறைகளின் அடிப்படையான இயல்புகளைச் சுருக்கமாக விவரிக்க.
02. கி.பி. 1668 வரை பிரித்தானிய ஆட்சி முறையிலுண்டான வளர்ச்சியின் பிரதான கட்டங்களை விவரிக்க.
03. பிரித்தானிய சட்வாக்கக் களத்தின் கட்டமைப்பினைத் தெளிவுபடுத்துக.
04. பிரித்தானிய சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் விவரிக்க.
05. பிரித்தானியாவின் நிருவாகக் களத்தைப் பற்றி நுண்ணாய்வு ரீதியான மதிப்பீடொன்று செய்க.
06. பிரித்தானிய நிருவாகக் களத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் விவரிக்க.
07. பிரித்தானிய நீதிக் களத்தின் கட்டமைப்பினை விவரித்து, நீதிக் களத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் தெளிவுபடுத்துக.
08. அமெரிக்க ஆட்சிமுறையின் வளர்ச்சியைச் சுருக்கமாக விவரிக்க.
09. அமெரிக்க சட்வாக்கச் சபைக்கும் செனட் சபைக்குமிடையே காணப்படும் ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் தெளிவுபடுத்துக.
10. அமெரிக்க சனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறையை விவரிக்க.
11. அமெரிக்க சனாதிபதி நிறைவேற்றும் நிருவாக, சட்டவாக்கக் கடமைகள் யாவை?
12. அமெரிக்காவிலுள்ள நீதிக்களம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ள பாங்கினை விபரிக்க.

13. அமெரிக்க உயர்நீதி மன்றத்தின் கடமைப் பங்கினைத் தெளிவுபடுத்துக.
14. பிரான்ஸினது ஆட்சிமுறையின் தன்மையை தெளிவுபடுத்துக.
15. பிரான்ஸினது சட்டவாக்கக் களத்தினது அமைப்பினை விவரிக்க.
19. பிரான்ஸின் செனட் சபைக்குப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படும் விதத்தை விவரிக்க.
17. பிரான்ஸ் தேசத்து சனாதிபதியின் அதிகாரங்களையும் கடமைகளையும் தெளிவுபடுத்துக.
18. பிரான்ஸின் நீதி நிருவாக முறைமையைப் பற்றிக் கட்டுரையொன்று வரைக.
19. இந்திய ஆட்சிமுறையின் சிறப்பான இயல்புகளைத் தெளிவுபடுத்துக.
20. இந்திய லோக் சபாவுக்கும் ராஜ்ய சபாவுக்கும் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் முறை பற்றி விவரிக்க.
21. இந்திய சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் ஆராய்க.
22. இந்தியாவின் பெயரளவு (நாம) நிருவாகக் களத்தை விவரிக்க.
23. இந்தியாவின் உண்மை நிருவாகக் களத்தின் அதிகாரங்களையும் கடமைகளையும் விவரிக்க.
24. "இந்தியாவின் ஆட்சிமுறையானது அமைப்பில் சமஷ்டி ஆட்சி முறையாயினும் நடைமுறையில் ஒற்றையாட்சி முறையாகும்." நீர் இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்குக் காரணங் காட்டுக.
25. இந்திய நீதிக்களம் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ள பாங்கினைத் தெளிவுபடுத்துக.
26. சோவியற்று ஒன்றியத்தின் குடியரசு ஆட்சிமுறையின் சிறப்பான இயல்புகளைத் தெளிவுபடுத்துக.
27. சோவியற்று ஒன்றியத்தின் சட்டவாக்கக் களத்தின் அதிகாரங்கள், கடமைகள் ஆகியன பற்றி ஆராய்தல்.
28. சோவியற்று ஒன்றியத்தில் அமைச்சரவை அமைக்கப்படும் விதத்தை விவரிக்க.
29. சோவியற்று ஒன்றியத்திலே நிருவாகக் களத்திற்குரிய அதிகாரங்களையும் கடமைகளையும் விளக்குக.
30. சோவியற்று ஒன்றியத்திலுள்ள நீதிக்களம் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ள பாங்கினை விவரிக்க.
31. சோவியற்று ஒன்றியத்தினது உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களைப் பகுப்பாய்வு செய்க.
32. "சோவியற்று ஒன்றியத்தின் உயர்நீதிமன்றம்" எனும் பொருள் பற்றிக் கட்டுரையொன்று வரைக.
33. பிரித்தானியாவிலே நிருவாகக் களத்திற்கும் சட்டவாக்கக் களத்திற்குமிடையிலா தொடர்புகளைப் பரிசீலனை செய்க.
34. பிரித்தானிய நீதிக் களத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.
35. அமெரிக்க சட்டவாக்கக் களத்தின் அதிகாரத்தை விஞ்சும் வகையில் நிருவாகக் களமும் நீதிக்களமும் தமது அதிகாரத்தை அதிகரித்துக் கொண்டள்ள விதத்தை விளக்குக.

36. இந்தியாவிலே பின்வருவனவற்றிற்கிடையே நிலவும் தொடர்பினைப் பரிசீலனை செய்க.
    (1) மத்திய அரசாங்கம்
    (2) லோக் சபா
    (3) மாநில அரசாங்கம்
37. இந்தியாவின் நீதிக்களம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ள விதத்தை விளக்கி, நீதிக் களத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தற்கு மேற்கொள்ளப்பட்டள்ள வழிமுறைகளைப் பரிசீலனை செய்க.
38. சோவியற்று ஒன்றியத்திலே அடிப்படையான அமையங்களுக்கிடையே நிலவும் தொடர்பினை தெளிவுபடுத்துக.
39. அமுக்கக் குழுக்கள் பற்றிச் சிறு குறிப்பொன்று எழுதுக.
40. "B" எழுத்து குறித்து நிற்கும் நாடுகளுக்குப் பொருத்தமான தகவல்கள் பல "A" எழுத்தினால் குறிக்கப்பட்டுள்ளன. "X" இல் உள்ள நாடுகளுக்குப் பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்து உரிய கோட்டிலே புள்ளிக்கோடு இடுக.

| வரைந்த | வரையா | நெகிழ் | நெகிழா | ஓற்றையாட்சி | சமஷ்டி | சனாதிபதி | முடியாட்சி | அமைச்சரவை | தனிக்கட்சி | இருகட்சி | பல்கட்சி | ← A<br>B |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | பிரித்தானியா |
| | | | | | | | | | | | | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| | | | | | | | | | | | | இந்தியா |
| | | | | | | | | | | | | பிரான்ஸ் |
| | | | | | | | | | | | | சோவியற்று ஒன்றியம் |

41. அரசின் கட்சிகளையும் அமுக்கக் குழுக்களையும் எவ்வாறு வேறுபடுத்திக் காட்டுவது என்பதைத் தெளிவுபடுத்துக.
42. பிரித்தானியாவின் கொன் சேர்வேட்டிவ் கட்சியினதும் லேபர் (தொழிற்) கட்சியினதும் பூட்கைகளையும் ஒப்பிடுக.
43. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் கட்சிகள் பற்றி ஓர் ஆய்வு செய்க.
44. "பல்கட்சி முறைமையினுள் காங்கிரஸ் கட்சி செலுத்தும் ஆதிக்கமானது இந்திய அரசியல் கட்சி முறைமையினுள் காணக்கூடிய சிறப்பானதோர் இயல்பாகும்." ஆராய்க.
45. சோவியற்று ஒன்றியத்தின் கமியூனிசக் கட்சி பற்றி விவரணமொன்று எழுதுக.

## மேலதிகத் தகவல்களைப் பெறக்கூடிய நூல்கள்


1. அரசியல் தத்துவங்களும் ஆட்சி – ஏ.ஜே. வில்சன்
2. அரசியல் யாப்புச் சட்டம் – அன்ரன் குரே
3. அரசறிவியல் இலக்கணம் – ஹரல்ட் லஸ்கி
4. அரசறிவியல் சாரம் – அப்பாத்துரை
5. இராணியின் ஆட்சி – ஐவர் ஜெனிங்ஸ்
6. பெரஸ்துரொயிக்கா – மிகயில் கொப்பசெவ்
7. பிரித்தானிய அரசியல் யாப்பு – எச்.ஆர்.பி. கிறீவ்ஸ்

1. அலகு 2.1 சுதந்திரத்துக்கு முந்திய இலங்கையின் அரசியல் மாற்றங்களும் அவற்றின் பின்னணியும்.

2. பாடவேளைகள்: 36

3. உபஅலகு : 2.1.1. பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்களும் அரசியல் வளர்ச்சியும்

பாடவேளைகள் : 04

2.1.2. 1833 – 1931 வரை சட்டவாக்கம், பிரதிநிதித்துவம் என்பனவற்றின் இயல்பும் வளர்ச்சியும்

பாடவேளைகள் : 08

2.1.3 குடியேற்ற காலத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக அமைப்புகளும் ஆட்சிமுறை, அரசியல் சீர்திருத்தங்களுக்கான அவற்றின் பங்களிப்பும்.

பாடவேளைகள் : 08

2.1.4 டொனமூர் அரசியல் சீர்திருத்தப் பின்னணி, அதன் இயல்புகள், நடைமுறை, இலங்கையின் அரசியல் வளர்ச்சிக்கான அதன் பங்களிப்பு.

பாடவேளைகள்: 16

4. குறிக்கோள்

இலங்கை சுதந்திரமடைய முன்னர் நிலவிய அரசியல் சீர்திருத்த சமூக, பொருளாதாரப் பின்னணி பற்றியும் அரைகுறைப் பொறுப்பாட்சியாக டொனமூர் அரசியல் திட்டத்தின் சிறப்பியல்புகளை விளங்கிக் கொள்ளல்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

01. 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் நிலவிய சமூக, பொருளாதார நிலமைகளை விபரிப்பர்.
02. பிரித்தானிய ஆட்சி முடிவடையும் போது இலங்கையில் நிலவிய பொருளாதார முறை, சமூக நிலை என்பவற்றை விளக்குவர்.
03. பிரித்தானியர் காலப் பிரிவில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களுக்கான காரணங்களைக் கலந்துரையாடுவர்.
04. பிரித்தானியர் யுகத்தின் ஆரம்ப கட்டத்தில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சியை விபரிப்பர்.
05. கோல்புரூக் ஆணைக் குழுவை நியமிக்க உதவியாயிருந்த காரணிகளை விமர்சிப்பர்.
06. கோல்புரூக் ஆணைக் குழுவின் சிபார்சுளை விளக்குவர்.
07. 1931 வரையிலான சட்ட நிரூபனத்தின் வளர்ச்சியை விபரிப்பர்.
08. தேசிய அமைப்புகளின் பின்னணியை விளக்குவர்.
09. தேசிய அமைப்புகளை நெறிப்படுத்திய பல்வேறு நிறுவனங்களின் செயற்பாடுகளை விளக்குவர்.
10. இலங்கைத் தேசிய காங்கிரஸ் வீழ்ச்சியடைவதற்கான காரணங்களை எடுத்துக் கூறுவர்.

11. இடதுசாரி அமைப்புகளின் ஆரம்பத்தையும் அவற்றின் பின்னணியையும் விபரிப்பர்.

12. இடதுசாரி அமைப்புகளின் வளர்ச்சிக்கான காரணங்களை விபரிப்பர்.

13. இடதுசாரி அமைப்புகள் எதிர்நோக்கிய தடைகளை விபரிப்பர்.

14. டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வரக் காரணமாயிருந்த சூழ்நிலைகளைக் காட்டுவர்.

15.. டொனமூர் சிபார்களின் முக்கிய இயல்புகளை விபரிப்பர்.

16. டொனமூர் அரசியல் முறையின் செயற்பாடு இலங்கை அரசியல் வளர்ச்சியில் தாக்கம் ஏற்படுத்திய விதத்தை விளக்குவர்.

17. சோல்பேரி அரசியல் சீர்திருத்தங்களுக்கான காரணங்களை விளக்குவர்.

6. பாட உள்ளடக்கம்

1. • 19ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கையின் பொருளாதார நிலை.
   - சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம்
   - 19ஆம் நூற்றாண்டில் நிலவிய மானிய முறைச் சமூகம் சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தமை.

2. • 20ஆம் நுற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் பொருளாதார நிலை.
   - பொருந்தோட்டப் பயிர்ச் செய்கையை மையமாகக் கொண்ட ஏற்றிறக்குமதிப் பொருளாதாரம் விருத்தியடைந்திருந்தமை.

   • பிரித்தானியர் ஆட்சி முடிவடையும் காலத்தில் இலங்கையில் நிலவிய சமூக நிலை.
   - இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டிருந்தமை.
   - வர்த்தகச் சமூக முறையொன்றின் தோற்றம்.

3. • அரசியல், சமூக பொருளாதார மாற்றங்கள் ஏற்படக் காரணமாயமைந்த அம்சங்களும், அதன் பின் ஏற்பட்ட அரசியற் சீர்திருத்தமும்.

4. • இலங்கையின் அரசியல் வளர்ச்சி (பிரித்தானியர் கால ஆரம்பப் பகுதி)
   - சட்டநிருபண, நிர்வாக சபைகள் உருவானவை.
   - தேசாதிபதியின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டமை.
   - ஒன்றிணைந்த நிர்வாக முறை ஏற்படுத்தப்பட்டமை.
   - இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை.
   - மத்திய வர்க்கத்தினர் ஆர்வத்துடன் அரசியலில் பங்குபற்றியமை.

5. • கோல்புருக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டமைக்கான காரணங்கள்.
   - இலங்கையில் நிலவிய சீரற்ற நிதி நிலைமை.
   - 1815இல் முழு இலங்கையும் குடியேற்ற நாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டமையால் ஏற்பட்ட நிர்வாகச் சிக்கல்கள்.

   (கண்டி, கரையோர நிர்வாகங்களில் இருந்த வேறுபாடுகள்)

6. • கோல்புருக் ஆணைக்குழுவின் சிபார்சுகள்.

- சட்ட நிருபண, சட்ட நிருவாக சபைகள் அமைத்தல்.
- தேசாதிபதியின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டமை.
- இனரீதியான உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் தெரிவு செய்யப்பட்டமை.
- இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்படல்.
- பிரித்தானியரின் நிதி எதிர்பார்ப்புகளுக்கேற்ற நிர்வாக முறையொன்றை ஏற்படுத்தல்.

7. • சட்ட நிருபணத்தின் வளர்ச்சி.

| ஆண்டு | உத்தியோகப் பற்றுள்ள | உத்தியோகப் பற்றற்ற |
|---|---|---|
| 1833 கோல்புருக் | 09 | 06 |
| 1912 க்ருவி - மக்கலம் | 11 | 10 |
| 1921 மனிங் | 14 | 23 |
| 1921 மனிங் | 12 | 37 |

8. • தேசிய இயக்கத்தின் பின்னணி.
- 1870ஆம் தசாப்த சமய மறுமலர்ச்சி
- பௌத்த, இந்து, இஸ்லாம் சமயப் புத்துணர்வின் மூலம் தேசிய இயக்கப் பின்னணி உருவாகியமை.

9. • தேசிய இயக்கத்தை நெறிப்படுத்திய அமைப்புகள்.
- 1914 இலங்கை மறுமலர்ச்சி இயக்கம்.
- 1919 இலங்கை தேசிய காங்கிரஸ்.
- தேசிய இயக்கத்தை நெறிப்படுத்திய அமைப்புகளின் செயற்பாடுகள்.
- தேசிய சுதந்திரத்துக்காக இலங்கை தேசிய காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

10. • இலங்கை தேசிய காங்கிரஸ் வீழ்ச்சிக்கான காரணங்கள்.
- தேசிய காங்கிரஸ் தலைவர்களுக்கிடையே கருத்து வேற்றுமை.
- இளைஞர்கள் பிரிந்து சென்று இளைஞர் தேசிய காங்கிரஸ் அமைத்தல்.
- சிங்கள, தமிழ் கருத்து வேற்றுமை காரணமாக தமிழர்கள் சங்கத்திலிருந்து வெளியேறல்.
- இளைஞர் தேசிய காங்கிரஸ் ஊடாக தொழிலாளர் தலைமைத்துவம் முன்னனிக்கு வருதல்.

11. • இடது சாரி இயக்கத்தின் தோற்றமும் பின்னணியும்.
- ஆங்கிலம் கற்ற சில மத்திய வர்க்கத்தினர் மேற்கத்திய கல்வியை பயன்படுத்திக் கொண்டமை.
- தேசிய சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளல், சமஉடமைச் சமூகமொன்றைக் கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு இடதுசாரி இயக்கம் ஆரம்பமாகுதல்.
- 1917 ஆம் ஆண்டு ருஷ்யாவில் ஏற்பட்ட புரட்சியின் செல்வாக்கு.
- 1929 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம்.

12. • இடதுசாரி இயக்க வளர்ச்சிக்கு ஏதுவான காரணங்கள்.
   - சூரியமல் இயக்கத்தை ஆரம்பித்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை மலேரிய ஒழிப்பு இயக்கத்துக்குப் பயன்படுத்தியமை.
   - இடது சாரிக் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
   - தொழிற் சங்கங்கள் பலம் பெற்றமை.
   - அரசாங்க சபைக்கு இடதுசாரிகள் தெரிவு செய்யப்பட்டமை.

13. • இடதுசாரி இயக்கம் எதிர்நோக்கிய பிரச்சினைகள்.
   - இயக்கத்துக்குள் ஏற்பட்ட பிரச்சினைகள்.
   - இரண்டாம் உலக யுத்தத்தின் போது இடதுசாரிக் கட்சிகள் தடைசெய்யப்பட்டமையும் இடதுசாரித் தலைவர்கள் கைது செய்யப்பட்டமையும்.

14. • டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வருவதற்கான காரணங்கள்.
   - சட்டநிருபண சபையின் அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் வேறுபடுத்துதல்.
   - பிரித்தானியாவில் ஏற்பட்ட அரசியல் சிந்தனையின் தாக்கம்.

15. • டொனமூர் சிபார்சின் பிரதான அம்சங்கள்
   - சர்வசன வாக்குரிமை உட்பட முக்கிய சிபார்சுகள் கலந்துரையாடப்படல்.

16. • இலங்கை அரசியல் வளர்ச்சியில் டொனமூர் சிபார்சுகள் செல்வாக்குச் செலுத்திய விதம்.

   - முதலாம் அரசாங்க சபைக் காலப்பிரிவு 1931 - 1936 நிர்வாகக் குழு முறையும் அரச உத்தியோகத்தர்களும்.
   - இரண்டாம் அரசாங்க சபைக் காலம் 1936 - 1947
   - அமைச்சரவை வினைத்திறமையுடன் செயற்படல்.
   - தேசாதிபதியின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்படல்.
   - நலன்பேன் பணிகள் அதிகரித்தல்.
   - டொனமூர் சீர்திருத்தக் குறைபாடுகள் கோல்ட்கோட் தேசாதிபதியினால் எடுத்துக்காட்டப்படல்.

17. • சோல்பெரி அரசியல் திட்டச் சீர்திருத்தங்களுக்கான காரணங்கள்.
   - டொனமூரில் இருந்த குறைபாடுகள்.
   - தேசிய சங்கமும், இடதுசாரி இயக்கங்களும் மேற்கொண்ட போராட்டங்கள்.
   - இந்தியச் சுதந்திரப் போராட்டம், இரண்டாம் உலக மகாயுத்தம் என்பவற்றின் செல்வாக்கு.
   - சமவுடமைக் கோட்பாட்டின் செல்வாக்கு.

7. • கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

## ஆசிரியர் செயற்பாடு

- விரிவுரை/ கலந்துரையாடல், வினாவிடை முறைமை உபயோகித்து விடயங்களை விளக்குதல்.
- சுவர்ப் பத்திரிகை வெளியிடலுக்காக கோல்புறூக்ஆணைக்குழு பற்றிய தகவல்களைத் திரட்ட ஊக்குவித்தல்.
- கோல்புறூக் சிபார்சுக்கேற்ப இலங்கையின் மாகாணங்கள் பிரிக்கப்பட்டமையை தேசப்படத்தில் அமைக்க ஊக்குவித்தல்.
- 1833 – 1924 வரை சட்ட நிருபண சபையின் அமைப்பை அட்டவணைப்படுத்த மாணவர்களைத் தூண்டுதல்.
- தேசிய இயக்கத்தை மேற்கொண்ட அமைப்புகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல்.
- இடதுசாரி இயக்கம் தொடர்பான தகவல்களைத் திரட்ட மாணவர்களைத் தூண்டல்.
- பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சியூடாகப் பின்வரும் விடயங்கள் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.
  - பொபிமல் இயக்கம்
  - சூரிய மல் இயக்கம்
  - இடதுசாரி இயக்கமும் அவற்றின் கொள்கைகளும்
  - மே தினம்

- சமய மறுமலர்ச்சி, தேசிய இயக்கம், மதுஒழிப்பு இயக்கம், 1915 இல் நடந்த சிங்கள முஸ்லிம் கலவரம் போன்ற விபரங்களை மூலாதாரங்களின் உதவியுடன் திரட்டும்படி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- டொனமூர் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் பற்றி மாணவர்களிடையே விளக்கம் ஏற்படும்படியாக டொனமூர் அறிக்கை போன்ற மூலாதாரங்களைக் கையாண்டு தகவல் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.
- பின்வரும் தலைப்பில் விவாதமொன்றை ஏற்பாடு செய்தல்.
  "டொனமூர் சிபார்சுகள் நடைமுறைப்படுத்தும் போது இலங்கையர்களுக்கு பயிற்சியும், பொறுப்பும் கிடைத்ததா?
- 1946 – 1947 அரசசட்ட மூலம், 1947 இன் சுதந்திரச் சட்ட மூலம் என்பன பற்றி தகவல் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.

## மாணவர் செயற்பாடுகள்

- கோல்புறூக் ஆணைக்குழு பற்றிய தகவல்களைத் திரட்டி சுவர்ப்பத்திரிகை தயாரிப்பர்.
- இலங்கையின் 5 மாகாணங்களைச் சித்தரிக்கும் தேசப்படத்தை வரைவர்.
- 1833 – 1924 வரையிலான சட்ட நிருபண சபையின் அமைப்பை காட்டும் அட்டவணையைத் தயாரித்து வகுப்பில் தொங்கவிடுவர்.
- ஆசிரியரினால் தெரிவிக்கப்படும் மூலாதாரங்களைக் கையாண்டு சமய மறுமலர்ச்சி, தேசிய இயக்கம், மது ஒழிப்பு இயக்கம் 1915இன் சிங்கள முஸ்லிம் கலவரம் என்பன பற்றிய தகவல்களைத் திரட்டி அறிக்கை தயாரிப்பர்.
- தேசிய இயக்கத்தை நெறிப்படுத்திய அமைப்புகள் பற்றிக் கலந்துரையாடலில் ஈடுபடுவர்.
- இடதுசாரி இயக்கங்கள் பற்றித் தகவல் திரட்டி அறிக்கையிடுவர்.
- பொப்பிமல் இயக்கம், சூரியமல் இயக்கம், இடதுசாரி அரசியல் கட்சிகள், அவற்றின் கொள்கைகள், மேதினம் பற்றிய தகவல்களைத் திரட்டி குறிப்பெடுப்பர்.
- டொனமூர் சிபார்சின் முக்கிய அம்சங்களைப் பட்டியல்படுத்துவர்.
- விவாதத்துக்கான விடயங்களைத் திரட்டுவர். விவாதத்தில் பங்கேற்பர்.
- அரச சட்டமூலம், சுதந்திரச் சட்டமூலம் என்பன பற்றிய தகவல்களைத் திரட்டி குறிப்பெடுப்பர்.

8. மதிப்பீட்டு முறை

1. பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் விடயத்தில் செல்வாக்குச் செலுத்திய முக்கிய காரணி பின்வருவனவற்றுள் எது?

(I) பழைய நீதிபரிபாலன முறை ஒழிக்கப்பட்டமை.

(II) மானிய முறையின் வீழ்ச்சி

(III) உள்நாட்டுக் கல்வி முறையின் வீழ்ச்சி.

(IV) தன்னிறைவுப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி.

(V) சொத்துரிமை கொண்ட குடும்பங்களின் தோற்றம்.

சரியான விடை (2)

2. பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையினால் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மிகப் பிரதானமான மாற்றம் பின்வருவனவற்றுள் எது?

(i) ஏற்றிறக்குமதிப் பொருளாதாரத்தின் தோற்றம்.

(ii) உள்நாட்டு வாழ்க்கைக் கோலம் மாற்றமடைதல்.

(iii) புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படல்.

(iv) இலங்கை மக்கள் ஊழியர் சந்தையை நோக்கிச் செல்லல்.

(v) இந்தியத் தொழிலாளர் பிரச்சினை உதயம்.

சரியான விடை (1)

3. பின்வருவன பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் சிலவாகும்.

A சட்டநிருபண, சட்ட நிர்வாக சபை அமைத்தல்.

B அரசாங்க சபை அமைக்கப்படல்.

C இராஜகாரிய முறை ஒழிப்பு.

D மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அளிக்கப்படல்.

E பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தி.

F நிர்வாகக் குழுமுறை உதயம்.

G இலங்கை 5 மாகாணங்களாகப் பிரிக்கப்படல்.

H ஆங்கிலக் கல்வியின் ஆரம்பம்.

வர்த்தக முதலாளித்துவ வகுப்பைத் தோற்றுவிக்கும் நோக்கில் சோல்புறூக் ஆணைக் குழு சிபார்சு செய்த சிபார்சுகளை மட்டும் தெரிவுசெய்தால் சரியான தெரிவு பின்வருவனவற்றுள் எது?

(I) ACEGH (II) BCDEG (III) CEGAF (IV) DACFH (V) ECGBF

விடை (I)

4. *1910* ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தத்தை விட *1920* ஆம் ஆண்டு அரசியல் சீர்திருத்தம் முன்னேற்றமானதாகும். பரிசீலனை செய்க.

5. குருவ் - மக்கலம், சீர்திருத்தத்தை மனிங்கின் திருத்தத்துடன் ஒப்பிடுக.

6. இலங்கைத் தேசிய சங்கம் பேச்சளவிலான ஒரு சங்கமென்றும் அதன் நடவடிக்கைகள் கோரிக்கைகளுடனும் குற்றச்சாட்டுகளுடனும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக தேசாதிபதி மனிங் குடியேற்ற செயலாளருக்கு எழுதியனுப்பினார்.

இந்த கருத்துடன் மிகவும் ஒத்துப்போகும் கூற்றைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிக.

(I) தேசிய சங்கத்தின் தலைவர்கள் தமது நடவடிக்கைகள் கூட்டம் கூடுவதுடன் நிறுத்திக் கொண்டனர்.

(II) இலங்கைத் தேசிய சங்கம் சமாதானமாகச் சுதந்திரம் பெற முயற்சித்தனர்.

(III) இலங்கைத் தேசிய சங்கம் சுதந்திரம் கிடைப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்தியது.

(IV) இலங்கைத் தேசிய சங்கத்தின் நடவடிக்கைகள் பிரித்தானியருக்கு ஒரு சவாலாக இருக்கவில்லை.

(V) இலங்கை தேசிய சங்கத்தின் நடவடிக்கைகளில் பிரித்தானிய அரசாங்கம் அதிக அக்கறை காட்டவில்லை.

*சரியான விடை (4)*

7. சுதந்திரத்துக்கு முந்திய இலங்கையின் அரசியல் வளர்ச்சியில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்திய விதத்தை ஆராய்க.

*(1)* சோல்புறூக் சீர்திருத்தம் *(2)* இலங்கைத் தேசிய சங்கம்

*(3)* இடதுசாரி இயக்கம்.

8. எமது சங்கத்தின் இறுதி நோக்கம் பிரித்தானிய கொடியின் கீழ் உள்நாட்டு ஆட்சியைப் பெறுவதாகும். பிரித்தானிய முடி பிரித்தானியத் தீவுகளைப் போன்றே எமதும் முடியாகும்.

எச்.ஜே.ஸி. பெரேரா *1922/ 10/ 27*

இக்கூற்றின் படி இலங்கை தேசிய சங்கத்தின் நோக்கமாக இருந்தது பின்வருவனவற்றுள் எது?

(I) சுய ஆதிக்கத்தைப் பெற்றுக் கொள்ளப் போராடுதல்.

(II) டொமினியர் அந்தஸ்த்திலான சுதந்திரத்தைப் பெறுதல்.

(III) வெஸ்மினிஸ்டர் முறையிலான பாராளுமன்ற முறையைப் பெறுதல்.

(IV) அரசியல், பொருளாதார ரீதியான பூரணசுதந்திரத்தைப் பெறுதல்.

(V) சட்டவாக்கக் கழகத்துடன் கூடிய ஆட்சி முறையொன்றைப் பெறுதல்.

சரியான விடை (II)

9. இலங்கையின் சுதந்திரத்தில் இடதுசாரிகள் இயக்கத்தின் பங்கை மதிப்பிடுக.

10. பின்வருவன பற்றி சிறு குறிப்பெழுதுக.

(1) சூரியமல் இயக்கம் (2) பொப்பிமல் இயக்கம்

(3) மலேரியாத் தடுப்பு இயக்கம்

11. டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வர ஏதுவான காரணிகளை விளக்குக.

12. டொனமூர் ஆட்சிமுறையின் கீழ் மக்களின் அரசியல் பங்கு பற்றல் விருத்தியில் பின்வரும் சிபார்சுகளின் செல்வாக்கை ஆராய்க.

(1) சர்வசன வாக்குரிமை (2) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்

(3) மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை வழங்குதல்.

13. டொனமூர் சிபார்சின் முக்கிய அம்சங்களை விளக்குக.

14. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையினால் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்க.

15. சர்வசன வாக்குரிமை வழங்கப்படுவதற்குச் சார்பாக டொனமூர் குழுவினர் முன்வைத்த வாதங்கள் எவை?

16. நிர்வாகக் குழு முறையின் நன்மை தீமைகளை விளக்குக.

17. கபினற் முறையொன்றை நோக்கி முன்னேறுவதற்கு டொனமூர் ஆட்சி முறையினால் கிடைத்த நன்மைகளை ஆராய்க.

18. சுதந்திரத்துக்கு முன்பு வழங்கப்பட்ட அரசியல் சீர்திருத்தங்களைப் படிமுறை ஒழுங்கில் வகுத்தால் பின்வருவனவற்றுள் சரியானது எது?

(I) கோல்புறூக், சோல்பரி, டொனமூர், மக்கலம், மனிங்

(II) கோல்புறூக், மனிங், டொனமூர், சோல்பரி, மக்கலம்

(III) கோல்புறூக், டொனமூர், மனிங், மக்கலம், சோல்பரி

(IV) கோல்புறூக், மக்கலம், மனிங், டொனமூர், சோல்பரி

(V) கோல்புறூக், மக்கலம், சோல்பரி, மனிங், டொனமூர்

விடை (IV)

1. அலகு: 2.2 சுந்திர இலங்கையின் அரசியல் வளர்ச்சி.

2. பாடவேளைகள் : 120

3. உபஅலகு: 2.2.1 வெஸ்மினிஸ்டர் மாதிரியில் இருந்து சனாதிபதி முறை வரை அரசியல் திட்ட எண்ணக்கரு அடிப்படை மாற்றமடைந்தமையும், 1972, 1978 அரசியல் சீர்திருத்தங்களுக்கு ஏதுவாயமைந்த காரணங்களாகும்.

பாடவேளை – 09

2.2.2 பின்வரும் விடயங்களின் கீழ் 1947 – 1972, 1978 அரசியல் திட்டங்கள் கொண்டுவரப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட விதம்.

| | | |
|---|---|---|
| 2.2.2.1 | அரசத் தலைவர் | பாடவேளை 05 |
| 2.2.2.2. | சட்டஆக்கம் – நிர்வாகம் | பாடவேளை 09 |
| 2.2.2.3 | பிரதிநிதித்துவ முறை, ஒப்பங்கோடல், சனாதிபதித் தேர்தல் | பாடவேளை 18 |
| 2.2.24 | நீதிபரிபாலனமும் அரச சேவையும் | பாடவேளை 04 |
| 2.2.2.5 | அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர், அரசாங்கக் கொள்கைகள் பற்றிய கோட்பாடுகள். | பாடவேளை 07 |
| 2.2.3 | சனாதிபதி ஆட்சி முறை அதன் இயல்பு | பாடவேளை 18 |
| 2.2.4 | சுதந்திரத்தின் பின் இலங்கை அரசியலுடன் தொடர்பான அரசியல், சமூக சக்திகள் | பாடவேளை 09 |
| 2.2.4.1 | கட்சிமுறை, வளர்ச்சியும் போக்கும் | பாடவேளை 10 |
| 2.2.4.2 | தேசியம், மொழி, சமயம், போன்றவை பற்றிய அரசியல் போராட்டங்கள், இயக்கங்கள். | பாடவேளை 08 |
| 2.2.4.3 | சமூக நலன்களும், பொருளாதார மாற்றங்கள் அரசியலைப் பாதித்த விதம் | பாடவேளை 05 |
| 2.2.4.4 | இடதுசாரி இயக்கம் | பாடவேளை 05 |
| 2.2.4.5 | அமுக்கக் குழுக்கள் | பாடவேளை 03 |
| 2.2.5 | அதிகாரப் பரவலாக்கமும் நிர்வாகமும் மாகாண சபைகள். | பாடவேளை 12 |
| 2.2.6 | உள்ளூராட்சி சபைகள் | பாடவேளை 04 |
| 2.2.6.1 | மாநகர சபைகள் | பாடவேளை 01 |
| 2.2.6.2 | நகர சபைகள் | பாடவேளை 01 |
| 2.2.6.3 | பிரதேச சபைகள் | பாடவேளை 01 |

4. குறிக்கோள்கள்

- இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அவற்றின் அமைப்பு, அதிகாரம், பணிகள் பற்றிய விளக்கம்.
- இலங்கையின் மாகாணசபைகள், உள்ளூராட்சி, மன்றங்கள் பற்றிய விளக்கம்.

5. சிறப்பு குறிக்கோள்கள் (2.2.1) பாடவேளைகள்: 09

1. சோல்பரி அரசியல் யாப்பு அமைக்கப்பட்ட முறையை விளக்குவார்.
2. 1972 ஆம் ஆண்டு அரசியற்றிட்டம் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆராய்வார்.
3. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு தோன்ற ஏதுவாயமைந்த காரணங்களை ஆராய்வார்.

6. பாட உள்ளடக்கம்

1. • வெஸ்மினிஸ்டர் மாதிரியின் கீழ் சோல்பரி அரசியல் யாப்பு ஆக்கப்பட்டமை.
2. • 1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் உருவாகக் காரணம்.
   - சோல்பரி யாப்பு சுதந்திர நாடொன்றுக்குப் பொருந்தாத அம்சங்களுடன் விளங்கியமை.
   - அடிப்படை மனித உரிமைகள் பற்றிய விதிகள், அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிராமை.
3. • 1978 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் உருவாகக் காரணம்.
   - உயர்மட்ட அரசியல் கலாச்சாரம் காணப்படாமை.
   - ஒரு முகச் சமூக அமைப்பு காணப்படாமை.
   - அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், தேசிய தலைமைத்துவத்துக்கும் பலம் வாய்ந்த நிர்வாக அதிகாரம் தேவை என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தமை.
   - 1972 அரசியல் திட்டத்தின் குறைபாடுகள்.
   - பிரநிதித்துவ முறையில் காணப்பட்ட குறைபாடுகள்.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்.

- விரிவுரை / கலந்துரையாடல், வினாவிடை முறை மூலம் விளக்கத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
- சோல்பரி யாப்பின் முக்கிய அம்சங்களை வெஸ்மினிஸ்டர் மாதிரியுடன் ஒப்பிட்டு அட்டவணைப்படுத்த ஆலோசனை வழங்குதல்.
- சோல்பரி யாப்பின் குறைபாடுகளை ஆராய்ந்து பார்க்க மாணவர்களை ஈடுபடுத்தல்.
- கபினட் முறையொன்று வெற்றிகரமாக அமைய தேவையான காரணிகளைத் திரட்ட மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- 1972 ஆம் ஆண்டில் அரசியல் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை ஆராய மாணவர்களை ஊக்குவித்தல்.

மாணவர் செயற்பாடுகள்

- சோல்பரி யாப்பு, வெஸ்மினிஸ்டர் மாதிரி என்பவற்றை ஒப்பிட்டு அட்டவணையிடுவர்.
- சோல்பரி யாப்பின் குறைபாடுகளைத் தொகுப்பர்.
- ஒரு கபினட் முறையின் வெற்றிகரமான செயற்பாட்டிற்குத் தேவையான காரணிகளைப் பட்டியலிடுவர்.
- 1972 இன் அரசியல் யாப்பில் காணப்பட்ட குறைபாடுகளை குறிப்பர்.

8. மதிப்பீடு

1. "சோல்பரி அரசியல் யாப்பு வெஸ்மினிஸ்டர் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டது" நிறுவுக.
2. 1972 இன் அரசியல் யாப்பு உருவாக ஏதுவாயிருந்த காரணிகளை ஆராய்க.
3. 1978 இன் அரசியல் யாப்பு உதயமாகவதில் 1972 இன் அரசியல் யாப்பில் காணப்பட்ட குறைபாடுகள் எவ்வளவுக்குப் பாதிப்புறச் செய்துள்ளது என்பதை விளக்குக.

மேலதிக வாசிப்புக்கான நூல்கள்.


01. டொனமூர் அறிக்கை - அரசகரும மொழித் திணைக்களம்
02. இன நியாயமும் தேசிய ஒருமைப்பாடும் - மார்க்க நிறுவன வெளியீடு
03. 1978 ஆம் ஆண்டு சனநாயக சோசலிச குடியரசு
அரசியல் யாப்பும் அரசாங்க முறையும் - நந்தா ரணவீர
04. இலங்கை அரசியல் யாப்புச் சட்டம் - எம்.ஜே.ஏ. குரே
05. இலங்கைத் தேர்தல் வரலாறு - எஸ். பியசேன
06. தேர்தற் சட்டம் - ஜயதிஸ்ஸ டி கொஸ்த்தா
07. ஒற்றை ஆட்சி முறைக்கு - மாலிங். எச். குணரத்ன
08. இலங்கையின் குடியரசு அரசியல் யாப்பு - டப். ஏ. அபேசிங்ஹ
09. பிரித்தானியரின் கீழ் இலங்கை - கொல்வின்.ஆர்.டி. சில்வா
10. இலங்கை அரசியற்றிட்ட வளர்ச்சி - பி.ஸி. பெரேரா
11. இலங்கைப் பாராளுமன்றம் - ஜஸ்டின் டயஸ்
12. 1992 அரசியல் யாப்பும் திருத்தங்களும்.
13. 1998 அரசியல் யாப்பும் திருத்தங்களும்
14. அரசறிவியலின் அடிப்படைக் கோட்பாடுகள் - எம்.ஏ.ஓ.டி. சொய்ஸா

1. அலகு: 2.2. சுதந்திரத்தின் இலங்கையின் அரசியல் வளர்ச்சி.

2. பாடவேளைகள் : 120

3. உபஅலகு: பின்வரும் தலைப்புகளின் கீழ் 1947, 1972, 1978 ஆம் அரசியல் யாப்புக்கள் அமைக்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்பட்ட விதம்.
   2.2.2 – 2.2.2.3 (வரை 32 பாடவேளைகள்)

4. குறிக்கோள்கள்:
   சுதந்திரத்தின் பின் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமூக சக்திகள் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

01. ஆளுநரின் கடமைகளையும் அதிகாரங்களையும் கடமைகளையும் விபரிப்பார்.
02. 1972 அரசியல் யாப்பின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்களையும் கடமைகளையும் விபரிப்பார்.
03. 1978 அரசியல் யாப்பின் கீழ் சனாதிபதியின் அதிகாரங்கள், கடமைகளையும் விபரிப்பார்.
04. 1948, 1972, 1978 அரசியல் யாப்புகளில் அரசத் தலைவர்களின் கடமைகளை ஒப்பிடுவார்.
05. 1947 யாப்பின் சட்ட ஆக்கத்திறன் தன்மையை விளக்குவார்.
06. செனெட் சபையின் தன்மையை விளக்குவார்.
07. 1972 இன் சட்டவாக்கத்தின் தன்மை, அதிகாரம் பற்றி விளக்குவார்.
08. 1978 இன் சட்டவாக்கத்தின் தன்மை பற்றி விரிப்பார்.
09. 1948 – 1972 நிர்வாக அதிகாரத்தின் தன்மையை ஒப்பிடுவர்.
10. 1947, 1972 அரசியல் யாப்புகளின் கீழ் தொகுதிகள் நிர்ணயிக்கப்பட்டமை பற்றி விளக்குவார்.
11. 1947 – 1977 தேர்தல் நடைபெற்ற முறையை விளக்குவார்.
12. 1978 அரசியல் யாப்பின்படி பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்ட முறை பற்றி விபரிப்பார்.
13. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் நன்மை தீமைகளைப் பட்டியலிடுவார்.
14. ஒப்பங்கோடல் (மக்கள் விருப்பு வாக்கெடுப்பு) பற்றி விபரிப்பார்.
15. சனாதிபதி தெரிவு முறை பற்றி விளக்குவார்.

6. பாட உள்ளடக்கம்

1. • ஆளுநர் – (1948 – 1972)
   – ஆளுநர் நியமனம், பதவிக்காலம், சட்டஆக்க, நிர்வாக, நீதித்துறை சார் அதிகாரங்கள்

2. • 1972 அரசியல் யாப்பில் சனாதிபதிப் பதவி.
   – நாட்டின் தலைவர் – பெயரளவு நிர்வாகி, பெயரளவு நிர்வாகிகள் நியமனம், பதவிக்காலம்.
   – சட்டஆக்கம், நிர்வாகம், நிதி – அதிகாரங்கள்.

3. • 1978 அரசியல் யாப்பில் சனாதிபதிப் பதவி.
 - நாட்டின் தலைவர் - நிறைவேற்று அதிகாரம் கொண்டவர், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டல், பதவிக்காலம்.
 (2.2.2.3, 2.2.3 என்பதைப் பார்க்கவும்.)

4. • அரச தலைவரின் கடமைகள் ஒப்பீடு. 1948, 1972, 1978 யாப்புகளின் கீழ் நியமனம், பதவிக்காலம், கடமைகள், அதிகாரங்கள்.

5. • 1947 சட்ட ஆக்கத்தின் தன்மை.
 - இருமாற்று முறை
 1. மக்கள் பிரதிநிதிகள் சபை
 2. மேல்சபை

6. • மேல் சபையின் அமைப்பு
 - அமைக்கப்பட்டதன் நோக்கம்
 - அமைப்பும் பதவிக் காலமும்
 - நோக்கம் நிறைவேறாமையால் கலைக்கப்பட்டமை.

7. • 1972 இன் அரசியல் திட்டத்தின் தன்மை.
 - தேசிய அரசுப் பேரவை என்றழைக்கப்பட்டமை.
 - தேசிய அரசுப் பேரவையின் அதிகாரங்கள்.
 - மூவகை அதிகாரங்கள் கொண்ட உச்ச மன்றமாக இருந்தமை.

8. • 1978 அரசியல் திட்டத்தின் தன்மை.
 - பாராளுமன்றம் என்றழைக்கப்படல்.
 - சட்டஆக்க அதிகாரம் மட்டும் வழங்கப்படல்.

9. • நிர்வாக அதிகாரத்தின் தன்மை 1947 - 1972
 - தெரிவு செய்யும் முறை.
 - கூட்டும் பொறுப்பு
 - நிர்வாகம் சட்டவாக்கத்தில் தங்கி இருத்தல்.
 - நம்பிக்கையில்லாப் பிரேரணை நடைமுறை.

10. • தேர்தல் தொகுதி பிரிப்பு
 - தொகுதி நிர்ணய ஆணைக்குழு மூலம் தொகுதிகள் பிரிக்கப்படல்.
 - 1. சனத்தொகை 2. நிலப்பரப்பு 3. சிறுபான்மையினர்
 (இரட்டை அங்கத்தவர் தொகுதி)

11. • தேர்தல் நடைமுறை (1947 - 1977)
 - சாதாரண பெரும்பான்மை முறை
 - சாதாரண பெரும்பான்மை முறையின் நன்மை - தீமை

12. ● விகிதாசாரப் பிரதிநித்துவ முறை.

– 1978 அரசியல் யாப்பின் XIV அத்தியாயத்தில் 91, 95, 98 பிரிவுகளின்படி.

13. ● விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் நன்மை தீமைகள்.

– 1.4.8.2.1 என்ற பிரிவுகளின் கீழ் உள்ள விடயங்களைப் பயன்படுத்தவும்.

14. ● மக்கள் வாக்கெடுப்பு – ஒப்பங்கோடல்

– நேரடி சனநாயக உத்தியாக.

– 1978 அரசியல் யாப்பின்படி ஒப்பங்கோடல் நடத்தக்கூடிய சந்தர்ப்பங்கள்.

15. ● சனாதிபதி தெரிவு

1978 யாப்பின் XIV அத்தியாயத்தின் 92.94 பிரிவுகளின் ஏற்பாடு.

1981 இன் 15 ஆம் இலக்க சனாதிபதி சட்டமூலம்.

7. கற்றல் கற்பித்தல் செயெலாழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய ஆசிரியர் - மாணவர் செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடு

- 1947, 1972, 1978 அரசியல் யாப்புகளின் கீழ் அரசத் தலைவர்களின் அதிகாரங்கள், கடமைகள் பற்றிய பட்டியல் தயாரிக்கும்படி மாணவர்களைப் பணித்தல்.
- மேல் சபையை ஏற்படுத்தல், ஒழிக்கவும் காரணமாய் அமைந்த காரணங்களை ஆராயும்படி மாணவர்களுக்குக் கூறுதல்.
- 1947 இன் சோல்பரி யாப்பின்படி பின்வரும் தலைப்புகளின் கீழ் விடயங்களைச் சேகரிக்கும்படி மாணவர்களை ஊக்குவித்தல்.
  1. மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தவர் தெரிவு.
  2. பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்களும் கடமைகளும்.
- 1977 – 1978 அரசியலமைப்புகளின் அடிப்படை மனித உரிமைகள் எவை என்பன பற்றியும், அவற்றுக்கிடையிலான வேறுபாடு பற்றியும் ஆராயும் படி மாணவர்களைத் தூண்டல்.
- 1917 இல் இருந்து 1978 வரை இயங்கிய கபினட் அமைப்பின் கீழ் கூட்டுப் பொறுப்பு இழக்கப்பட்ட சந்தர்ப்பங்களை ஆராயும்படி மாணவர்களை ஊக்குவித்தல்.
- 1947 – 1977 தேர்தல்கள் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு சாதாரண பெரும்பான்மை முறையின் நன்மை – தீமை பற்றி ஆராயும்படி மாணவர்களை ஊக்குவித்தல்.
- 1989, 1994 தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு விகிதாசார முறையின் நன்மை, தீமைகளை ஆராய மாணவர்களைத் தூண்டுதல்.
- 1982 இன் மக்கள் வாக்கெடுப்பு பற்றிய தகவல்களைத் தேடி அதுபற்றி விமர்சனம் செய்வதற்கு மாணவர்களை ஊக்குவித்தல்.
- இறுதியாக நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவர்களைத் தூண்டல்.

மாணவர் செயற்பாடுகள்

- சோல்பரி யாப்பு குடியரசு யாப்பு என்பவற்றின் அடிப்படையில் அரசுத்தலைவரின் அதிகாரங்கள், கடமைகள் பட்டியலிடுவர்.
- மேல்சபை அமைக்கப்படவும் ஒழிக்கப்படவும் ஆன காரணங்களைத் திரட்டிக் குறிப்பெடுப்பர்.
- சோல்பரி யாப்பின்படி மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படல், பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்கள், கடமைகள் பற்றிய விடயங்களை அறிக்கையிடுவர்.
- 1972 – 1978 அரசியல் யாப்புகளின் அடிப்படை மனித உரிமைகள் பற்றியும், அவற்றுக்கிடையேயான வேறுபாடுகள் பற்றியும் விடயங்களைத் தேடிக் குறிப்பெடுப்பர்.
- 1947 – 1978 வரையிலான அமைச்சரவை (கபினட்) முறையின் கீழ் கூட்டுப் பொறுப்பு மீறப்பட்டமை குறித்து தகவல்கள் திரட்டி அறிக்கையிடுவர்.
- 1947 – 1977 வரையிலான தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு எளிய பெரும்பான்மை முறையின் நன்மை, தீமைகளை அறிந்து குறிப்பர்.
- 1989, 1994 பொதுத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் நன்மை தீமைகளைப் பட்டியலிடுவர்.
- மூலாதாரங்களைக் கையாண்டு 1982 இன் மக்கள் வாக்கெடுப்பு பற்றிய தகவல்களைத் திரட்டுவர். விமர்சிப்பர், தேவையான குறிப்புகளை எழுதுவர்.
- சனாதிபதித் தேர்தல் பற்றிய தகவல்களைத் திரட்டி அவற்றின் சிறப்பம்சங்களைக் குறிப்பெடுப்பர்.

8. மதிப்பீடு

1. பின்வரும் அரசியல் யாப்புகளின் கீழ் அரசுத் தலைவரின் அதிகாரங்கள், கடமைகள் பற்றி விபரிக்குக.

   (I) சோல்பரி (II) முதலாம் குடியரசு (III) இரண்டாம் குடியரசு

2. சோல்பரி யாப்பின் படி பின்வருவனவற்றுள் எந்நிறுவனங்கள் சட்டவாக்கத்தில் தொடர்புபட்டன.

   1. A பிரதிநிதிகள் சபை D மகாதேசாதிபதி
      B மேல் சபை E நிதிசேவை ஆணைக்குழு
      C கபினட்

   (I) ABE (II) ABC (III) ABD (IV) CDE

   சரியான விடை (III)

3. பின்வரும் தலைப்புகளின் கீழ் மேல்சபை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

   (I) அமைக்கப்பட்ட நோக்கம் (III) அதிகாரமும் கடமைகளும்
   (II) அங்கத்துவ இணைப்புப் பதவி காலமும் (IV) ஒழிக்கப்படக் காரணம்

4. "பெயரளவு நிர்வாகி" இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது எந்த அரசியல் யாப்பின் கீழ்?

(I) கோல்புரூக் (II) டொனமூர் (III) சோல்பரி

(IV) முதலாம் குடியரசு (V) இரண்டாம் குடியரசு

சரியான விடை (III)

5. 1972 இன் அரசியல் யாப்பின் கீழ் பின்வருவனவற்றை ஆராய்க.

(I) அரசியலமைப்பு மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அம்சங்கள்.

(II) தேசிய அரசு பேரவையின் அதிகாரங்கள்.

(III) பெயரளவு நிர்வாகி

6. குடியரசு அரசியல் திட்டங்களின் கீழ் "நிறைவேற்று நிர்வாகி" பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.

(I.) தெரிவு (II) சட்டவாக்கத்தின் மீதுள்ள பொறுப்பு

(III) சட்டவாக்கத்தின் கட்டுப்பாடு

7. எளிய பெரும்பான்மை முறை பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் சிறுகுறிப்பு எழுதுக.

(I) தேர்தல் தொகுதி பிரித்தல் (II) தேர்தல் முறை

8. 1978 அரசியல் யாப்பின் கீழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தெரிவு பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் விபரிக்குக.

(I) பெயர்களை முன்மொழிதல்

(II) தேர்தல் நடத்தலும்அங்கத்தவர் தெரிவும்.

(III) பாராளுமன்ற அங்கத்துவ வெற்றிடங்களை நிரப்புதல்.

9. தேசியப் பட்டியலில் அங்கத்தவர் தெரிவு பற்றிய உங்கள் கருத்தை எழுதுக.

10. 1978 இன் அரசியல் யாப்பின்படி மக்கள் வாக்கெடுப்பு நடத்தக் கூடிய சந்தர்ப்பங்களைத் தருக.

11. 1978 அரசியல் யாப்பின் கீழ் சனாதிபதி தெரிவு முறையை 1972 அரசியல் யாப்பில் சனாதிபதி தெரிவு முறையிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.

1. அலகு: 2.2 சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியல் வளர்ச்சி.
2. பாடவேளைகள்: 120
3. உபஅலகு: 2.2.2.4 நீதிபரிபாலனமும் அரச சேவையும் (பாடவேளை - 04)
4. குறிக்கோள்கள்:

- சுதந்திர இலங்கையின் நீதிபரிபாலனமும் அரச சேவையும் பற்றி விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்

1. நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இருந்த ஏற்பாடுகளை விளக்குவார்.
2. 1972 அரசியல் யாப்பின் கீழ் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கான ஏற்பாடுகளை விளக்குவார்.
3. நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு 1978 அரசியல் யாப்பின் கீழ் இருந்த ஏற்பாடுகளை விபரிப்பார்.
4. அரச சேவையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இருந்த ஏற்பாடுகளை விபரிப்பார்.
5. முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் அரசசேவை அரசியல் அதிகாரத்துக்குக் கீழ் கொண்டு வரப்பட்டமையை விபரிப்பர்.
6. இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் மூலம் அரச சேவையின் சுதந்திரத்தைப் பேணுவதற்கான ஏற்பாடுகளை விபரிப்பார்.

6. பாட உள்ளடக்கம்

1. • நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேண சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள்.
2. • நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு 1972 அரசியல் யாப்பின் கீழ் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள்.
3. • நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு 1978 அரசியல் யாப்பில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்.
   - 1948 யாப்புக்குச் சமமான கோட்பாடுகள் பின்பற்றப்படல்.
   - உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அமைக்கப்படல்.
   
   ஐ.அமெரிக்கா, இந்திய அரசியல் அமைப்புகளைப் பின்பற்றல்.

4. • சோல்பரி யாப்பின் கீழ் அரச சேவையின் சுதந்திரத்தைப் பேண செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள்.

5. • அரச சேவை அரசியல் அதிகாரத்துக்குட்படல்.
   - அரச சேவை ஆலோசனை சபையும் அரச சேவை ஒழுக்காற்று சபையும் அமைக்கப்படல்.
   - அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு அரசியல் அதிகாரத்தின் கீழ் நடைபெறல்.

6. இரண்டாவது அரசியல் யாப்பில் அரசு சேவைக்கு
   - அரச சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை.
   - அரச சேவைக்கு அரசியலடிப்படையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய ஆசிரியர் - மாணவர் செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்

- நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய உதாரணங்களைத் தேடி மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- நீதிமன்றத் தொகுதியைப் பார்வையிட ஒரு சுற்றுலாவை ஒழுங்கு செய்தல்.
- பத்திரிகைகளில் வெளிவரும் வழக்குத் தீர்ப்புகளை வாசிக்க மாணவர்களைத் தூண்டுதல்.

மாணவர் செயற்பாடு

- நீதித்துறைச் சுதந்திரம் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை உதாரணங்களுடன் குறித்துக் கொள்வர்.
- நீதிமன்றத் தொகுதியைப் பார்வையிட்டு நடைமுறை அனுபவத்தைப் பெறுவர்.
- பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் வழக்குத் தீர்வுகளை வாசித்து நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய விடயங்களைக் குறிப்பர்.

8. மதிப்பீடு

1. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் நீதிமன்றத் துறையின் சுதந்திரத்தைப் பேணுவதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை விபரிக்க.
2. நீதித்தறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க 1978 அரசியல் யாப்பின் கீழ் இருந்த ஏற்பாடுகளை விபரிக்குக
3. அரச சேவையில் பின்வரும் துறைகள் பற்றி 1972 அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைப் பற்றி உங்கள் கருத்துக்களை முன்வைக்குக.
   (I) அரச சேவையில் ஆட்சேர்ப்பும் பதவி விலக்கலும்.
   (II) அரச சேவையில் இடமாற்றம்.
   (III) அரச சேவையின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு.

1. அலகு: 2.2. சுதந்திர இலங்கையின் அரசியல் வளர்ச்சி

2. பாடவேளைகள்: 120

3. உபஅலகு: 2.2.2.5 அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர், அரச கொள்கை பற்றிய கோட்பாடுகள்
(பாடவேளைகள் 07)

4. குறிக்கோள்

- அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர் உரிமைகள் அரச கொள்கை கோட்பாடு பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

1. சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாப்பது தொடர்பான யாப்பு ரீதியான ஏற்பாடுகளை விபரிப்பர்.
2. முதலாம், இரண்டாம் குடியரசுகளில் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாடுகளை விளக்குவார்.
3. அரசு கொள்கை பற்றிய கோட்பாடுகளை விளக்குவார்.
4. அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தன்மைகளை விபரிப்பார்.
5. பாராளுமன்ற ஆணையாளரின் அதிகாரங்கள், கடமைகள் பற்றி விளக்குவார்.

6. பாட உள்ளடக்கம்

1. • சிறுபான்மையினர் உரிமைகள் பாதுகாப்பு
   - 1947 யாப்பின் கீழ் இருந்த ஏற்பாடுகள்.
2. • முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் அடிப்படை உரிமைகள் பாதுகாப்பு தொடர்பாக இருந்த ஏற்பாடுகள்.
   - சிறுபான்மையினர்க்கு சிறப்பு ஏற்பாடு இல்லாமை.
   - அடிப்படை உரிமைகள் பற்றிய வெளியீடுகளால் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்படல்.
   - சட்டப்படியான பாதுகாப்பு இல்லாமை.

   இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு
   - 11 ஆம் அத்தியாயத்தில் உள்ள அடிப்படை உரிமைகள் பட்டியல்.
   - 126 வது பிரிவின்படி அடிப்படை உரிமைகள் பற்றிய சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்படல்.
3. அரச கொள்கை
   - 1972 குடியரசு அரசியல் யாப்பின் X அத்தியாயம்
   - 1978 அரசியல் யாப்பின் VI அத்தியாயம்
4. • அரசியல் அமைப்பு நீதிமன்றம்
   - முதலாம் குடியரசு அரசியல் திட்டத்தின் கீழ் அமைக்கப்படல். ( X அத்தியாயம்)

5. பாராளுமன்ற ஆணையாளர்
- இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய அம்சம்.
(1978 யாப்பின் XIX அத்தியாயத்தில்)

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு தொடர்பாக உபயோகிக்கக் கூடிய ஆசிரியர் - மாணவர் செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்

- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 1947 அரசியல் யாப்பின் கீழ் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பதை ஆராய்ந்து பார்க்க மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- முதலாம் இரண்டாம் குடியரசு அரசியல் யாப்புகளின் கீழ் அடிப்படை உரிமைகள் பற்றிய பட்டியல்களைத் தேடி அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகளை கண்டறிய மாணவர்களை ஊக்குவித்தல்.
- அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகள் பற்றிய தகவல்களைத் தேடி ஊக்குவித்தல்.
- 1978 அரசியல் யாப்பில் அத்தியாயங்களைப் படிப்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தல்.

மாணவர் செயற்பாடு

- சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு 1947 அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறியுள்ளதா என்பதை ஆராய்ந்து பார்த்து முக்கிய குறிப்புகள் எழுதிக் கொள்வர்.
- அடிப்படை உரிமைகள் பட்டியலைத் தேடி அவற்றின் பேறுபாடுகளை பட்டியலிடுவர் குறிப்பர்.
- அடிப்படை உரிமை மீறல் வழக்கு விசாரணை பற்றி தகவல்களைத் திரட்டுவர்.
- அரசியல் யாப்பின் அத்தியாயங்களைப் படித்து குறிப்பிட்ட விடயங்களை எழுதுவர்.

8. மதிப்பீடு

1. 1947 அரசியல் யாப்பில் சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை விபரிக்குக.
2. முதலாம், இரண்டாம் குடியரசு அரசியல் யாப்புகளின் கீழ் இருந்த அடிப்படை உரிமை பற்றிய பட்டியல் பற்றி விமர்சிக்க.
3. அரச கொள்கை பற்றிய கோட்பாடுகள் என்றால் என்ன என்பதை விளக்குக.

1. அலகு: சுதந்திர இலங்கையின் அரசியல் வளர்ச்சி

2. பாடவேளைகள் : 120

3. உபஅலகு: 2.2.3 சனாதிபதி ஆட்சிமுறை அதன் தன்மை நடைமுறை

(பாடவேளைகள் - 18)

4. குறிக்கோள்

- நிறைவேற்று அதிகார சனாதிபதி ஆட்சிமுறை பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்

1. நிறைந்த அதிகாரமுள்ள சனாதிபதி பதவியின் தன்மையை விளக்குவார்.
2. நிறைவேற்று அதிகார சனாதிபதியின் பதவியின் அதிகாரங்கள், கடமைகளை விபரிப்பர்.
3. நிறைவேற்று அதிகார சனாதிபதிக்கும் கபினட்டுக்கும் இடையே தொடர்புகளை விளக்குவர்.
4. இரண்டாம் குடியரசின் கீழ் பிரதம மந்திரியின் நிலை பற்றி விபரிப்பார்.
5. நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவி தொடர்பாக அண்மைக்காலமாக ஏற்பட்ட போக்குகளை விபரிப்பார்.

6. பாட உள்ளடக்கம்

1. ● நிறைவேற்று அதிகார சனாதிபதி பதவி
   - இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் சனாதிபதி பூரண அதிகாரமுள்ள நிறைவேற்று அதிகாரியாக ஆதல்.
   - சனாதிபதிக்கு உதவ பிரதமர் உட்பட அமைச்சரவை இருத்தல்.
   - சட்டவாக்கத்துக்கு நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தல் முடியாமை.
   - சனாதிபதியை பதவிநீக்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகள்.
     (1978 அரசியல் யாப்பின் 3.8.3 சரத்து)

2. ● நிறைவேற்று சனாதிபதி பதவியின் அதிகாரங்களும் கடமைகளும்
   - சட்ட ஆக்க - சட்ட நிர்வாக, நீதிபரிபாலன அதிகாரம்
   - 4.3.3 சரத்தின்படி பிரதமரை நியமித்தல்.
   - 4.5.1 சரத்தின்படி அமைச்சர்களை நியமித்தல்.
   - 70.1 சரத்தின்படி பாராளுமன்றத்தைக் கலைத்தல்.
   - 107, 112 சரத்துகளின்படி நீதிபரிபாலன அதிகாரம்.

3. ● நிர்வாக சனாதிபதியும் அமைச்சரவையும்
   - 1978 அரசியல் யாப்பில் 1/111 அத்தியாயத்தின் பின்வரும் சரத்துகளின் படி.
     43.1, 43.2, 43.3, 44.1, 44.2, 44.3, 45

4. ● பிரதமர் பதவியின் தன்மை
   - பிரதமரின் நிர்வாக அதிகாரம் குறைவு.
   - அமைச்சரவையின் தலைவரல்ல.

5. • நிறைவேற்று நிர்வாக சனாதிபதி பற்றிய அண்மைக் காலப் போக்குகள்.
   - நிறைவேற்று அதிகாரத்தை குறைக்க தூண்டும் என்ற கருத்துக்கள்.
   - நிறைவேற்று சனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் கருத்து.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்கான ஆசிரியர் - மாணவர் செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்.

- அரசியல் குற்றப் பிரேரணையின் போது எழும் நடைமுறைச் சிக்கல்கள் யாவை என்பதை ஆராய மாணவர்களைத் தூண்டல்.
- 1978 அரசியல் யாப்பின் 111 அத்தியாயத்தைப் படித்து நிறைவேற்று சனாதிபதியையும், அமைச்சரவையையும் பற்றிய விடயங்களை திரட்ட மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

மாணவர் செயற்பாடுகள்

- அரசியல் குற்றப் பிரேரணைச் செயலொழுங்கின் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை ஆராய்ந்து குறிப்பெடுப்பர்.
- இரண்டாம் குடியரசு யாப்பின் அத்தியாயம் 111ஐப் படித்து உரிய விடயங்களைக் குறிப்பெடுப்பர்.

8. மதிப்பீடு

1. இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் சனாதிபதியின் பதவி நீக்கும் அரசியல் குற்றப் பிரேரணை முறையை படிமுறை ஒழுங்கில் தருக.
2. "இலங்கையின் நிர்வாக சனாதிபதி முறை அமெரிக்க, பிரான்ஸ் சனாதிபதி முறைகளுடன் இணைப்பாகும்." ஆராய்க.
3. இலங்கையின் நிறைவேற்று அதிகார சனாதிபதியின் அதிகாரங்களை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
   (1) சட்ட ஆக்கம் (2) நிர்வாகம் (3) நீதிபரிபாலனம்
4. "1978 இன் அரசியல் யாப்பு அதிகாரப் பரவலாக்கம் போல் காணப்பட்டாலும் நடைமுறையில் சனாதிபதியிடம் மூவகை அதிகாரங்களும் குவிகிறது. இது பற்றிய உமது கருத்தை எழுதுக.
5. நிர்வாக சனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையே நிலவும் தொடர்பை விளக்குக.
6. இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் கீழ் பிரதமர் பாராளுமன்ற முறை பிரதமரில் இருந்து எவ்விதம் வேறுபடுகின்றார் என விளக்குக.
7. நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்து வழங்குக.

1. அலகு: 2.2 சுதந்திர இலங்கையின் அரசியல் வளர்ச்சி.

2. பாடவேளைகள்: 120

3. உபஅலகு: இலங்கையில் அரசியல் கட்சி முறை.
வளர்ச்சியும் போக்குகளும் (பாடவேளைகள் 10)

4. குறிக்கோள்: இலங்கையின் அரசியல் கட்சி முறை அதன் வளர்ச்சி போக்குகள் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்

1. “அரசியல் கட்சி”என்பதை வரைவிலக்கணப்படுத்துவர்.
2. இலங்கை அரசியல் தல்விமுறையின் தன்மையை விபரிப்பார்.
3. இலங்கை அரசியல் கட்சி முறையின் ஒழுங்கமைப்பை விளக்குவார்.
4. இலங்கை முக்கிய அரசியல் கட்சிகளின் கொள்கைகளைக் கூறுவார்.
5. இலங்கை அரசியல் கட்சிகளின் கடமைகளை விளக்குவார்.
6. இலங்கையர்களின் அரசியல் நடத்தையில் பாதிப்புச் செலுத்தும் காரணிகளை ஆராய்வார்.
7. இலங்கை வாக்காளர்களின் நடத்தைக் கோலத்தின் தன்மை பற்றி விபரிப்பார்.
8. இலங்கை அரசியல் ஆட்சி முறையின் அண்மைப் போக்குகளை எடுத்துக் காட்டுவார்.

6. பாட உள்ளடக்கம்

1. • வரைவிலக்கணம்
   - தாராண்மைவாத,. மாக்ஸ்வாத், ஏனைய வரைவிலக்கணங்கள்.
   - பொதுவான ஒரு வரைவிலக்கணம் இல்லை என்பது.
2. • இலங்கை அரசியல் கட்சி முறையின் இயல்பு.
   - இருகட்சி முறை
   - இரு பிரதான கட்சிகளின் முக்கியத்துவம்.
   - கோட்பாட்டு ரீதியாக அரசியல் கட்சிகளை பிரித்து நோக்கக் கூடிய தன்மை.
   - 1. இடதுசாரி அரசியல் கட்சிகள் 2. வலதுசாரி அரசியல் கட்சிகள் இனவாதப் போக்குள்ள அரசியல் கட்சிகள் (இவ்வை உதாரணங்களுடன்)
3. • அரசியல் கட்சிகளின் ஒருங்கமைப்பு
   - அரசியல் கட்சிகளின் யாப்பின்படி முக்கிய அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைப்புக் கோலம்.
   - இரு பிரதான அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைப்பு ஒப்பீடு.
4. • பிரதான அரசியல் கட்சிகளின் கொள்கைகள்.
   - அரசியல், பொருளாதார, சமூக கலாச்சார, செல்வாக்கு விவகாரம் போன்ற அம்சங்களில் ஒவ்வொரு கட்சியிலும் கொள்கையை ஒப்பிடல்.

5. ● அரசியல் கட்சிகளின் கடமைகள்.
   - நாட்டின் அபிவிருத்திப் போக்கில் கொள்கைகள் வகுத்தல்.
   - கொள்கைப் பிரசாரம்
   - சனநாயகத்தை ஸ்தாபித்தல்

6. ● இலங்கையர்களின் அரசியல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு அரசியல், பொருளாதார , கலாச்சார, சமூகக் காரணிகள்.

   உ+ம்: மொழிப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை இளைஞர் அமைதியின்மையும், 1977 இன் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, இனப் பிரச்சினை போன்றவையின் செல்வாக்கு.

7. ● இலங்கை வாக்காளர்களின் நடத்தைக் கோலத்தின் இயல்பு
   - 1947 - 1994 வரை வாக்களிப்பு 86%, 56% இடைவெளி இருந்தமை.
   - கிராமிய வாக்காளர்களின் நடத்தைக் கோலம், நகர வாக்காளர்களின் நடத்தைக் கோலம், வடக்கு, கிழக்கு வாக்காளர்களின் நடத்தைக் கோலம், அரசியல் நடத்தைகள் விடயத்தில் குழப்பங்கள் எதிர்ப்பு இயக்கங்கள், வேலை நிறுத்தங்களின் செல்வாக்கு.

8. ● அரசியல் கட்சி முறையின் அண்மைக் காலப் போக்குகள்.
   - இனவாதக் கட்சிகளின் உதயம், 1977 இன் பின் பெருந்தோட்டத்துறை வாக்காளர்கள் தீர்மானிக்கும் சக்தியாக மாறல். இளைஞர்கள் புரட்சிகரமான அரசியல் போக்கைத் தேர்ந்தெடுத்தமை, பிரதான அரசியல் கட்சிகள் வலதுசாரிப் போக்கைக் கடைப்பிடித்த சிறிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடும் கூட்டுகளும். இலங்கை அரசியல் கட்சிகளின் அண்மைய போக்குகளின் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் பங்கு.

7. கற்றல்- கற்பித்தல் செயலொழுங்குக்கான ஆசிரியர் - மாணவர் செயற்பாடுகள்.

## ஆசிரியர் செயற்பாடு

- அரசியல் கட்சி முறை பற்றி வரைவிலக்கணங்களைத் திரட்டும்படி மாணவர்களை ஈடுபடுத்தல்.
- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும்படி மாணவர்களைப் பணித்தல்.
- அரசியற் கட்சிகளின் ஒழுங்கமைப்புக் கோலம் பற்றிய ஒரு பாய்ச்சற் கோட்டுப் படத்தைத் தயாரிக்க மாணவர்களை ஊக்குவித்தல்.
- 1947 - 1994 வரை ஆட்சி மாற்றங்களுக்கு ஏதுவான காரணிகளை ஆராய மாணவர்களைத் தூண்டல்.

மாணவர் செயற்பாடு

- அரசியல் கட்சி பற்றிய வரைவிலக்கணங்களை எழுதுவர்.
- அரசியல் கட்சிகளின் பட்டியலைத் தயாரிப்பர்.
- அரசியல் கட்சிகளின் ஒழுங்கமைப்பு அட்டவணையை தயாரிப்பர்.
- 1947 முதல் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களுக்கு ஏதுவான காரணிகளை ஆராய்ந்து அறிக்கை இடுவர்.

8. மதிப்பீடு

1. அரசியல் கட்சி என்றால் என்ன என்பதை விளக்குக.
2. இலங்கை அரசியற் கட்சி தொடர்பாக பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
   (1) கட்சி முறையின் புதிய போக்குகள்.
   (2) சனநாயகத்தைப் பலப்படுத்துவதில் அரசியல் கட்சிகளின் தாக்கம்.
   (3) இலங்கை அரசியற் கட்சி முறையில் அண்மைக் காலமாகக் காணக் கூடியதாயுள்ள புதிய போக்குகளை ஆராய்க.
3. 1. பிரதான கட்சிகளில் இருந்து குழுக்கள் வெளியேறியமை.
   2. தேர்தல் கூட்டுக்கள் ஏற்பட்டமை.
   3. ஐக்கிய தேசியக் கட்சியின் தனியார் மயக் கொள்கை.
4. பின்வரும் அரசியல் கட்சிகளின் அடிப்படைக் கொள்கையை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்க.
   1. ஐக்கிய தேசியக் கட்சி        2. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
   3. இலங்கை சமசமாஜக் கட்சி
5. இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்க.
   1. பிரதான கட்சிகளில் இருந்து குழுக்கள் வெளியேறியமை.
   2. இனப்பிரச்சினை தொடர்பான மனப்பாங்கு.
   3. கூட்டுச்சேரும் போக்கு.
6. இலங்கையில் இனத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள அரசியல் நடவடிக்கைகளை விளக்குக.

1. அலகு: 2.2. சுதந்திரத்தின் பின் இலங்கையின் வளர்ச்சி

2. பாடவேளை : 120

3. உபஅலகு: 2.2.4.2 தேசியம், மொழி, சமயம், போன்றவை தொடர்பான இயக்கங்கள் (பாடவேளைகள் 08)

2.2.4.3 சமூக நலன்களும் பொருளாதார மாற்றங்கள். அரசியலில் பாதிப்புச் செலுத்திய விதம் (பாடவேளைகள் 05)

4. குறிக்கோள்கள்:

- தேசியம், மொழி, சமயம் தொடர்பான அரசியற் கிளர்ச்சி இயக்கங்கள் பற்றிய விளக்கம்.
- சமூக நலனும் பொருளாதார மாற்றங்களும் அரசியலில் பாதிப்புச் செலுத்திய விதம் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்:

1. தேசியம், இனவாதம் என்பவற்றைத் தெளிவுபடுத்துவார்.
2. இனப்பிரச்சினை வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார்.
3. இனப் பிரச்சினையின் இன்றைய நிலையை விளக்குவார்.
4. சுதந்திரத்தின் பின் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகநலன் சேவைகள், பொருளாதார மாற்றங்கள் பற்றி விளக்குவார்.
5. சமூக நலன் சேவைகள், பொருளாதார மாற்றங்கள் என்பன அரசியலைப் பாதித்த விதத்தை விபரிப்பார்.

6. பாட உள்ளடக்கம்

1. • தேசியம்
   - இலங்கை நிலப்பரப்பில் வாழும் சகலரும் இலங்கையர் என்பது.
   
   • இனவாதம்
   - ஒரு நாட்டில் வாழும் மக்கள், சமயம், மொழி, இனம், கலாச்சாரம் என்ற உணர்வுகளுடன் தமது தனித்துவத்தை குறித்து காட்டல்.
   - குடியேற்றவாதத்துக்கு எதிரான சமய இயக்கங்களைச் சுற்றி மக்கள் ஒன்றுபடுதல்.
   - சமய இயக்கங்கள் தேசிய இயக்கங்களுடன் இணையாமை.
   - சட்ட நிருபண சபைக்கு இன அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை.

2. • இனப்பிரச்சினையின் வளர்ச்சி
   - தேசிய இயக்கத்திலிருந்து தமிழ் குழுக்கள் வெளியேறின.
   - நிர்வாகக் குழு முறையில் தனிச்சிங்கள அமைச்சரவை.

- தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தமை.
- சிங்களம் அரச சரும மொழியாக்கப்பட்டமை.
- பௌத்த சமயம் அரசாங்க சமயமாக்கப்பட்டமை.
- சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் இருந்த சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் 1972, 1978 அரசியல் திட்டங்களில் பேணப்படாமையும், அடிப்படை உரிமைகள் மட்டும் பேணப்பட்டமையும்.

3. • இனப்பிரச்சினையின் இன்றை நிலை.
- தமிழ் மக்கள் இனரீதியாக ஒன்றிணைந்தமை. நிஜபூமி எண்ணக்கரு, தமிழீழக் கோரிக்கை, ஆயுதக் குழுக்கள் தோன்றி வளர்ந்தமை. அவற்றின் பலம் அதிகரித்தமை. சனநாயக அரசியல் பிரவாகத்தில் இருந்து தமிழ் இளைஞர்கள் வெளியேறியமை, மாகாண சபைகளினால் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறாமை, முஸ்லிம்கள் இஸ்லாமிய கலாச்சார அமைச்சு ஒன்று கோரியமை.

4. • சுதந்திரத்தின் பின் இலங்கையின் சமூகநல சேவைகள்.
- 1947 முதல் இன்று வரையான சமூகநலன் சேவைகள்.
- • சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள்.
- ஏற்றிறக்குமதிப் பொருளாதாரதம் மூலம் தேசிய மயக் கொள்கையின் தோற்றம், 1960 தசாப்தத்தில் ஏற்பட்ட கைத்தொழில் விருத்தி, அரச வங்கிகள் நிதித்தாபனங்களின் தோற்றம் உல்லாசப் பிரயாணத்துறை விருத்தி, 1977 இன் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை.

5. • சமூக நலன்களும் பொருளாதார மாற்றங்களும் அரசியலைப் பாதித்த விதம்.
- சுதந்திரத்தின் பின் எல்லா அரசியல் கட்சிகளுமே சமூக நலன் பொருளாதாரக் கொள்கைகளில் கவனம் செலுத்தியமை.
- தேசிய மயக் கொள்கையினால் மக்களின் கவனம் அரசாங்கத்தின் மீது ஈர்க்கப்பட்டமையும், அரச தொழில்களின் பால் மக்கள் விரும்பியமையும்.
- தாய்மொழிக் கல்வியினால் கல்வி விருத்தியடைந்தமை.
- சமூக நலன்கள் குறைக்கப்படும் போது மக்களின் வெறுப்புக்குள்ளாமை.
- தொழிற்சங்கத்தின் சுதந்திரத்தில் கட்டுப்பாடு.

7. • கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்கு உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடு

- தேசியம், இனவாதம் என்பவற்றின் வேறுபாட்டை அறிய மாணவர்களைத் தூண்டுதல்.
- அரசியல் போராட்ட இயக்கத்தின் வெவ்வேறு சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவர்களை ஈடுபடுத்தல்.
- சுதந்திரத்தின் பின் இனக்கலவரம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள், அவற்றிற்கான காரணங்கள் என்பவற்றை ஆராய மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- 1972 இன் அரசியல் யாப்பில் சிறுபான்மையினரைப் பாதிக்கும் அம்சங்களை ஆராய மாணவர்களை ஈடுபடுத்துல்.
- சுதந்திரத்தின் பின் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக நலன் சேவைகள் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவர்களுக்கு ஆலோசனை கூறல்.
- திறந்த பொருளாதாரத்தின் செயற்பாடு காரணமாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள் தொடர்பாக ஆராய மாணவர்களை ஈடுபடுத்தல்.

மாணவர் செயற்பாடு

- தேசிய இனவாதம் என்பவற்றின் வேறுபாட்டை ஆராய்ந்து குறிப்பெழுதுவர்.
- அரசியல் போராட்டங்களின் பல்வேறு சந்தர்ப்பங்கள் தொடர்பாக தகவல்களைத் திரட்டுவர்.
- சுதந்திரத்தின் பின் இலங்கையில் இனக் கலவரங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் சிறுபான்மைக்கெதிரான சரத்துகளைப் பட்டியலிடுவர்.
- சுதந்திரத்தின் பின்னைய சமூகநலன் சேவைகள் பற்றிய தகவல்களைத் திரட்டிக் குறிப்பெடுப்பர்.
- திறந்த பொருளாதாரச் செயற்பாடு காரணமாக ஏற்பட்ட சமூக மாற்றங்களை ஆராய்ந்து அறிக்கையிடுவர்.

8. மதிப்பீடு

1. சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி விஸ்தரிக்க.
2. இனப்பிரச்சினையின் இன்றைய நிலையை விளக்குக.
3. 1956 இன் பின் தேசிய மயக் கொள்கை ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் எந்நோக்கை அமைத்து கொள்வதற்காக.
   I. தனியார் முயற்சியாளர்களை வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்றல்.
   II. சோசலிஸப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறுதுல்.
   III. அரச பொருளாதாரத் தனியுரிமையை ஏற்படுத்த
   IV. வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெளியேற்ற
   V. வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க.

   (விடை II)
4. சுதந்திரத்தின் பின் இலங்கையின் நலன் பேண சேவைகளும் பொருளாதார மாற்றங்களும் அரசியலைப் பாதித்த விதத்தை உதாரணம் காட்டி விளக்குக.

1. அலகு: 2.2 சுதந்திரத்தின் பின் இலங்கை அரசியல் வளர்ச்சி.

2. பாடவேளைகள்: 120

3. உபஅலகு: 2.2.4.4. இடதுசாரி இயக்கம் (பாடவேளை 05)

2.2.4.5. அமுக்க குழுக்கள் (பாடவேளை 03)

4 குறிக்கோள்

- இலங்கையில் இடதுசாரி இயக்கங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய விளக்கம்.
- அமுக்கக் குழுக்கள் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

1. சுதந்திரத்தின் பின்னைய இலங்கையின் இடதுசாரி இயக்கங்களின் இயல்பை விளக்குவர்.
2. இலங்கையின் இடதுசாரி இயக்கங்களுக்கு சர்வதேச அரசியல் பாதிப்புச் செலுத்திய விதத்தை விபரிப்பர்.
3. அமுக்கக்குழு என்பதை வரைவிலக்கணப்படுத்துவர்.
4. இலங்கையில் வழக்கிலிருந்த அமுக்கக்குழு பற்றி விளக்குவர்.
5. அமுக்கக் குழுவுக்கும் அரசியல் கட்சிக்குமிடையேயுள்ள வேறுபாட்டை விளக்குவர்.
6. இலங்கையின் அமுக்கக் குழுக்களை வெளிநாட்டு அமுக்கக் குழுக்களுடன் ஒப்பிடுவர்.

6. பாட உள்ளடக்கம்

1. • சுதந்திரத்தின் பின் இலங்கையில் இடதுசாரி இயக்கம்.
   - கோட்பாட்டு வேறுபாட்டின் அடிப்படையில் இடதுசாரி இயக்கம் பல அரசியல் கட்சியாகப் பிரிதல்.
   - இடதுசாரிக் கட்சிகள் பிரதான கட்சிகளுடன் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்தல்.
   - இடதுசாரிகள் காலத்துக்காலம் ஒன்றிணைதலும், பிரிந்து செல்லலும், இடதுசாரிக் கட்சிகளில் இருந்த இளைஞர்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை மக்கள் விடுதலை முன்னணியின் தோற்றம்.
2. • சர்வதேச அரசியல் இலங்கையின் இடதுசாரி இயக்கங்களைப் பாதித்த விதம்.
   - ட்றொக்கிவாத இயக்கம், சீனா சோவியற் நாடுகளுக்கிடையிலான கருத்து வேற்றுமையடிப்படையில் இலங்கைக் கம்யுனிசக் கட்சி இரண்டாகப் பிரிதல் சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் ஏற்பட்டுள்ள போக்குகள்.
   - இடதுசாரிகளுக்கு வலதுசாரிக் கட்சிகளின் சவால்கள்.
3. • அமுக்கக் குழு பற்றிய வரைவிலக்கணம்
4. • இலங்கையில் செயற்படும் அமுக்கக் குழுக்கள், நலன்பேண அமைப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள்.

5. • அமுக்கக் குழுக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு.
   - ஐக்கிய அமெரிக்க தொழிற் சங்கங்களைச் சுற்றி 10 இலட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர் ஒன்று திரண்டிருத்தல்.
6. • இலங்கையிலும் வெளிநாடுகளிலும் செல்வாக்கு செலுத்தும் குழுக்கள்
   - வர்த்தக அமைப்புகளுக்குள் பலதுறைகளைச் சேர்ந்தோரும் ஒன்றுதிரண்டிருத்தல், பரந்த நிபுணத்துவ அறிவுள்ளவர்கள் இருத்தல், காரியாலங்களின் முறையான அமைப்பு.
   - தொழிற்பாடு - பாடசாலைப் பாடவிதானத்தில் கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் தொடர்பாக சில அமைப்புக்கள், அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியமை, விழுமியங்கள் தொடர்பான இயக்கங்கள் கருத்தடையை எதிர்த்தமை காரணமாக அரசாங்கம் அதைத் தடைசெய்தமை. அமுக்கக் குழுக்களின் தொழிற்பாடு அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்துக்கு உட்படாமை.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்

- கூட்டரசாங்கங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி தகவல்களைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.
- இடதுசாரி இயக்கத்தின் பிரிவைக் காட்டும் பாய்ச்சற் கோட்டுப்படத்தை வரைய மாணவர்களுக்கு ஆலோசனை கூறவும்.
- அமுக்கக் குழுக்கள் பற்றிய வரைவிலக்கணங்களைத் திரட்ட மாணவர்களைத் தூண்டுதல்.
- இலங்கையில் அமுக்கக் குழுக்களின செயற்பாடு தொடர்பான விடயங்களைத் தேட மாணவர்களை ஊக்குவித்தல்.
- வகுப்பறையை 4 குழுக்களாகப் பிரித்து பிரித்தானியா, பிரான்ஸ், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் அமுக்கக் குழுக்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கும்படி மாணவர்களுக்கு அறிவுத்தல் வழங்குதல்.

மாணவர் செயற்பாடுகள்

- கூட்டரசாங்கம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களை ஆராய்ந்து குறிப்பெழுதுவர்.
- இடதுசாரிகளின் பிரிவைக் காட்டும் பாய்ச்சற் கோட்டுப்படத்தை அமைப்பர்.
- அமுக்கக் குழுக்கள் பற்றிய வரைவிலக்கணங்களைத் திரட்டிக் குறித்துக் கொள்வர்.
- இலங்கையில் அமுக்கக் குழுக்களின் செயற்பாட்டைப் பற்றிய விடயங்களைத் தேடி குறிப்பெழுதுவர்.
- தமது குழு குறிப்பிட்ட நாட்டின் அமுக்கக் குழு பற்றிய தகவல்களைத் திரட்டி அறிக்கையிடுவர். குழுத்தலைவர் அறிக்கையை வகுப்பில் முன்வைப்பார்.

8. மதிப்பீடு

1. சுதந்திரத்தின் பின்னைய இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றி விபரித்து எழுதுக.
2. இலங்கையின் இடதுசாரி இயக்கத்துக்கு சர்வதேச அரசியல் ஏற்படுத்திய செல்வாக்கை விளக்குக.
3. இலங்கையின் அமுக்கக் குழுக்கள் அரசியல் செயலொழுங்கினைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. உதாரணங்கள் காட்டி விளக்குக.

1. அலகு: 2.2 சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியல் வளர்ச்சி
2. பாடவேளைகள்: 120
3. உபஅலகு: 2.2.5 அதிகாரப் பரவலாக்கம் - மாகாண சபை

(பாடவேளைகள்: 12)

4. குறிக்கோள்கள்

- அதிகாரப் பரவலாக்கம் மாகாண சபைகள் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

1. அதிகாரப் பரவலாக்கம், நிர்வாகப் பரவலாக்கம் பற்றி விளக்குவர்.
2. அதிகாரப் பரலாக்கத்துக்கான காரணங்களை விபரிப்பர்.
3. அதிகாரத்தைப் பரவலாக்க எடுத்த நடவடிக்கைகளை விபரிப்பர்.
4. மாகாணசபையின் ஆரம்பத்தை விபரிப்பர்.
5. மாகாண சபையின் அமைப்பு, அதிகாரம், கடமைகள் பற்றி விளக்குவர்.

6. பாட உள்ளடக்கம்

1. ● அதிகாரத்தைப் பரவலாக்கல் - அறிமுகம்.
   - நிர்வாகப் பரவலாக்கம் அதிகாரத்தை பிரதேச அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்தல்.
2. ● அதிகாரப் பரவலாக்கத்துக்கான காரணங்கள்.
   - 1931 அரசாங்க சபையின் உள்ளூராட்சி நிர்வாகக் குழுவின் சிறப்பு அறிக்கையில் இடம்பெற்ற விடயங்கள்.
   - சேர். ஜோன் கொத்தலாவலையின் பிரதேச ஆலோசனை
   - 1956 இன் இரட்ட சபாச்சட்ட மூலமும், பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம்.

     1956 மாவட்ட சபை முறை, 1980 மாவட்ட அபிவிருத்திச் சபை.

     1987 இலங்கை இந்திய ஒப்பந்தம்.
3. ● மாகாண சபையின் ஆரம்பம்
   - 1978 இன் 13ஆம் இலக்க அரசியல் சீர்திருத்தப்படி.
4. ● மாகாண சபையின் அமைப்பு
   - கவர்னர், முதலமைச்சரும் அமைச்சரவையும், மாகாண சபை அங்கத்தவர்கள், வருமான வரிகள், மத்திய அரசின் மாநிலங்கள், மாகாண வருமானம்.
5. ● அதிகாரங்கள் - ஒற்றையாட்சி யாப்பு முறையின் கீழ் மூன்று பட்டியல்களிலும் அதிகாரங்கள் பிரிக்கப்படல்.
   - மத்திய அரசுப்பட்டியல், மாகாண சபைப் பட்டியல் இணைந்த பட்டியல்,
6. ● மாகாணசபை நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட பிரச்சினைகள்.
   - மத்திய அரசுக்குக் கூடிய அதிகாரங்கள் உரித்தானமை.
   - மத்திய அரசு மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களைக் கொடுக்காமை, மத்திய அரசின் நிதியில் தங்கியிருக்க வேண்டிய நிலை, மாகாண சபைகளுக்கு ஏற்படக் கொடுத்த அதிகாரங்களை மீண்டு பறித்தெடுத்தல், வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்படல், மத்திய அரசினதும் மாகாண சபைகளினதும் அதிகாரங்கள் வெவ்வேறு கட்சிகளிடம் கிடைத்தமை. இனப்பிரச்சினைக்குத் தீர்ப்பு ஏற்படாமை.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுக்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடு

- அரசியற் திட்டத்தின் 13வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆராய மாணவர்களைத் தூண்டுதல்.
- மாணவர்கள் உள்நாட்டில் மாகாணசபை மூலம் இதுவரை செய்யப்பட்டிருந்து வேலைகளை அலசிப்பார்க்க மாணவர்களைத் தூண்டுதல்.

மாணவர் செயற்பாடு

- மாகாண சபைகளின் அதிகாரங்கள் கொண்ட பட்டியலைத் தயாரிப்பர்.
- தான் உட்படும்மாகாணசபை மூலம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளைக் கேட்டறிந்து அறிக்கை ஒன்று தயாரிப்பர்.

8. மதிப்பீடு

1. அதிகாரங்களைப் பகிர்ந்தளித்த அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றிக் கிடையேயுள்ள வேறுபாட்டை விளக்குக.
2. அதிகாரப் பரவலாக்கம் செய்ய வேண்டி ஏற்பட்டதற்கான காரணங்களை விபரிக்க.
3. அதிகாரத்தைப் பரவலாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.
4. மாகாண சபைகளின் அதிகாரங்களையும்கடமைகளையும் விபரித்து அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது எதிர்நோக்கிய பிரச்சினைகளை எடுத்துக் காட்டுக.

1. அலகு: 2.2 சுதந்திரத்தின் பின் இலங்கையின் அரசியல் வளர்ச்சி.

2. பாடவேளைகள்: 120

3. உபஅலகு: 2.2.6 உள்ளூராட்சி மன்றங்கள் (பாடவேளைகள் : 04)
2.2.6.1 மாநகர சபைகள்
2.2.6.2 நகர சபைகள்
2.2.63 பிரதேச சபை (பாடவேளைகள் : 03)

4. குறிக்கோள்கள்

- உள்ளூர் ஆட்சி மன்றங்கள் பற்றிய விளக்கம்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்

1. மாகாண சபைகள் நடைமுறைப்படுத்தலின் போது எழுந்த பிரச்சினைகளை விபரிப்பர்.
2. உள்ளூராட்சி மன்றங்கள் என்றால் என்ன என்பதை விளக்குவர்.
3. உள்ளூராட்சி முறையின் வளர்ச்சியை விபரிப்பர்.
4. நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களைக் குறிப்பிடுவர்.
5. மாநகர சபையின் அமைப்பை விபரிப்பர்.
6. நகர சபையின் அமைப்பை விபரிப்பர்.
7. பிரதேச சபைகளின் அமைப்பை விபரிப்பர்.
8. அரசியல் சமூகச் சக்திகளாக உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவத்தை விளக்குவர்.

6. பாட உள்ளடக்கம்.

1. • மாகாண சபைகள் நடைமுறைப்படுத்தலில் எழுந்த பிரச்சினைகள்.
   - மத்திய அரசுக்குக் கூடிய அதிகாரம் உரித்தானமை.
   - மத்திய அரசு மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்காமை.
   - மத்திய அரசின் நிதியில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டமை.
   - வழங்கிய அதிகாரங்கள் மீண்டும் பறித்தமை.

2. • உள்ளூராட்சி மன்றங்கள்
   - ஒற்றையாட்சி முறையொன்றின் கீழ் அரசாங்கத்தின் கருமங்களை இலகுவாக்குவதற்காக பாராளுமன்றச் சட்டமூலத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள்.

3. • உள்ளூராட்சி முறையின் வளர்ச்சி
   - பழைய கிராமசபை முறை, பிரித்தானியர் காலத்தில் உள்ளூராட்சி, இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்படல், அவை சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டமை.
   - 1871 இன் ஒரு சட்டமூலத்தின்படி மறைந்து போயிருந்த கிராமசபை மீண்டும் தாபிக்கப்படல்.
   - 1931 இன் டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் உள்ளூராட்சிக்கென்று ஒரு அமைச்சு ஏற்படுத்தப்பட்டமை.
   - 1947 பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் அரசின் பிரதான உறுப்புகளாக அமைத்தல்.

4. • நடைமுறையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள்
   – மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை.

5. • மாநகர சபையின் இயல்பு, அமைப்பு, அதிகாரங்கள் கடமைகளை மத்திய அரசுடனான தொடர்பு.

6. • நகரசபையின் இயல்பு, அமைப்பு அதிகாரங்கள், கடமைகள், மத்திய அரசுடனான தொடர்புகள்.

7. • பிரதேச சபைகள் 1987 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்ட மூலத்தின்படி அமைக்கப்படல்.
   அமைப்பு, அதிகாரங்கள், கடமைகள், மத்திய அரசுடனான தொடர்பு.

8. • உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம்.
   – மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கும் மன்றங்களாக இருத்தல,, காலத்துக்கேற்ற விதத்தில் நிறுவனம் திருத்தியமைக்கப்படல். அரசியல்வாதிகளைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாக செயற்படல், இளைஞர் பிரதிநிதித்துவத்துக்கு வாய்ப்பேற்படல், நிர்வாகம் மக்களுடன் நெருக்கமடைதல்.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்

- அதிகாரப் பரவலாக்கம் செய்ய எடுத்த முயற்சி தோல்வியடைய காரணமாய் அமைந்தவைகளை ஆராய மாணவர்களை ஊக்குவித்தல்.
- 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் மாகாண சபையின் அமைப்பைப் பற்றிய விடயங்களை ஆராய மாணவர்களுக்கு ஆலோசனை கூறுக.
- பழைய கிராமிய சபை முறையின் அமைப்பை ஆராய மாணவர்களை ஈடுபடுத்தல்.
- டொனமூர் கால உள்ளூராட்சி அமைச்சரின் கடமைகளைப் பற்றி ஆராய மாணவர்களைத் தூண்டுதல்.
- பாடசாலை அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தின் பணிகளை ஆராய்ந்து பார்க்க மாணவர்களைத் தூண்டல்.
- இலங்கையின் மாநகர சபைகளின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க ஆலோசனை கூறல்.
- நகரசபைகளின் அதிகாரங்களையும், கடமைகளையும் கொண்ட பட்டியல் தயாரிக்க மாணவர்களைத் தூண்டல்.
- இலங்கையின் மாநகர சபைகளின் பட்டியல் தயாரிக்க மாணவர்களுக்கு ஆலோசனை கூறல்.
- நகரசபைகளின் அதிகாரங்கள், கடமைகள் பற்றிய தகவல்களைத் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.
- பிரதேச சபைச் சட்ட மூலத்தின்படி பிரதேச சபைகளின் தன்மைகளை ஆராய மாணவர்களை ஊக்குவித்தல்.

மாணவர் செயற்பாடுகள்.

- அதிகாரப் பரவலாக்கத்துக்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடையக் காரணமானவைகளை ஆராய்ந்து குறிப்பு எழுதுவர்.
- இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழ் மாகாண சபையின் அமைப்பைப் பற்றி விடயம் சேகரிப்பர்.
- மாகாண சபைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றி ஓர் அறிக்கை தயாரிப்பர்.
- பழைய கிராமசபை முறை பற்றி விடயங்களைத் தேடிக் குறிப்பெடுப்பர்.
- டொனமூர் கால உள்ளூராட்சி அமைச்சரின் கடமைகளை ஆராய்ந்து குறித்துக் கொள்வர்.
- பாடசாலை அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்தின் கடமைகள் பட்டியலைத் தயாரிப்பர்.
- நகரசபைகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் பட்டியலிடுவர்.
- பிரதேச சபை பற்றிய தகவல் திரட்டி குறிப்பெடுப்பர்.

மதிப்பீடு

1. ஐரோப்பியர் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் வளர்ச்சியடைந்த விதத்தைப் பற்றி எழுதுக.
2. மாநகரசபை பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழ் சிறுகுறிப்பெழுதுக.
   1. அமைப்பு
   2. அதிகாரங்களும் கடமைகளும்.
   3. மத்திய அரசுடன் வைத்துள்ள தொடர்பு
3. ஒரு நகரசபையின் மூலம் கொண்டு நடத்தப்படும் சேவைகளை விபரித்தெழுதுக.
4. அரசியல், சமூக சக்தி என்ற வகையில் உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

# 1. அலகு: 2.3 இலங்கையும் சர்வதேச சமூகமும்

2. பாடவேளைகள்: 130

3. உபஅலகு: 2.3.1 இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை.

4. குறிக்கோள்கள்:

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் அதன் முக்கிய மாற்றங்கள் நடைபெற்ற காலப் பிரிவுகளும் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்:

1. வெளிநாட்டுக் கொள்கை என்றால் என்ன என்பதை விளக்குவர்.
2. வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரிப்பர்.
3. வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்குவர்.
4. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விளக்குவர்.

6. பாட உள்ளடக்கம்

1. ● வெளிநாட்டுக் கொள்கை அறிமுகம்
   - "ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் கொண்டுள்ள தொடர்பின் தன்மையைத் தீர்மானிக்கும் அளவுகோல் அந்நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையாகும்."
2. ● வெளிநாட்டுக் கொள்கை தீர்மானிக்கப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.
   - சர்வதேச அரசியல் நிலை, நடைமுறையிலுள்ள அரசின் அரசியல் பொருளாதாரக் கொள்கை நாட்டின் பாதுகாப்பு பொருளாதார அபிவிருத்தி தொடர்பான விடயங்கள்.
3. ● வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியத்துவம்
   - வெளிநாட்டுக் கொள்கை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாகத் தாக்கம் செலுத்துதல்.
4. ● இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றங்கள்.
   - 1948 – 1956 வரை
   - 1956 – 1977 வரை
   - கைதறி உதவி பெறல், புலமைப்பரிசில், கலாச்சாரக் குழுக்கள் பரிமாற்றல் போன்றவை பற்றிய விபரங்கள்.
   - வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒரு ஆசிய – ஆபிரிக்க முகப்பைப் பெற்றுக் கொடுத்தமை.
   - 1965 – 1970 வரை ஐரோப்பிய நாடுகளுடன் நட்புற்ற ஒரு வெளிநாட்டுக் கொள்கை.
   - 1977 இன் பிற்பட்ட காலம், மேல் நாடுகளுக்குச் சார்பான கொள்கை மீண்டும் ஏற்படல்.

7. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்கு உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்.

- விரிவுரை / கலந்துரையாடல் / வினாவிடை முறை மூலம் விடயங்களை விளக்குதல்.
- தலைப்பில் பிரவேசிப்பதற்காக சிறிய கேள்விக்கொத்தை மாணவர்களுக்கு வழங்குவர்.
- மக்கள் சீனக் குடியரசை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல்.
  அரிசி – இறப்பர் ஒப்பந்தமும் அதன் வர்த்தக முக்கியத்துவமும். 1955 பண்டும் மகாநாடு, பற்றிய தகவல்கள் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.
- அணிசேரா மாநாடுகள் நடைபெற்றமை பற்றிய தகவல்களை சேகரிக்க ஆலோசனை கூறல்.
- 1987 இலங்கை – இந்திய ஒப்பந்தம் தொடர்பான தகவல் தேட மாணவர்களைத் தூண்டல்.

மாணவர் செயற்பாடு

- கேள்விக்கொத்துக்கு விடையளித்து கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.
- சீனாவை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல். இறப்பர் – அரிசி ஒப்பந்தம் பங்குங் மகாநாடு பற்றிய் தகவல்கள் தேடி குறிப்பெடுப்பர்.
- அணிசேரா மகாநாடுகள் நடைபெற்ற சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவர்.
- இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் தகவல்களைத் திரட்டி குறிப்பிடுவர்.

8. மதிப்பீடு

1. நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விபரிக்க.
2. 1948 – 1956 வரை இலங்கை பின்பற்றிய செயற்பாட்டுக் கொள்கை பற்றி விபரிக்க.
3. "1956 இன் பின் இலங்கை பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையின் சிறப்பம்சம் யாதெனில் சோசலிஸ நாடுகளுடனான நல்லுறவாகும்." இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் காட்டி விளக்குக.

மேலதிய வாசிப்புக்கான நூல்கள்


1. உலக நிறுவனங்கள்.
2. இனங்களுக்கான நியாயமும் தேசிய ஒற்றுமையும் – மார்கா வெளியீடு
3. இலங்கை இந்திய ஒப்பந்தம் – கல்வி அமைச்சின் வெளியீடு
4. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தகவல் கையேடு.
5. தென்னாசியாவின் அரசியல் சிந்தனை – மார்க வெளியீடு
6. தேசிய சிந்தனையும் தேசிய பொருளாதாரமும் – குணதாச அமரசேகர
7. அணிசேராமையும் மூன்றாம் உலகமும் – ஜனதாஸ பீரிஸ்

# 01. அலகு: 2.3. இலங்கையும் சர்வதேச சமூகமும்

02. பாடவேளைகள்: 30

03. உபஅலகு: 2.3.2 பிராந்திய ஒத்துழைப்பும் சார்க் அமைப்பும்

(பாடவேளைகள் : 05)

04. குறிக்கோள் :

பிராந்திய ஒத்துழைப்பு அமைப்புகளை அறிந்து கொள்ளலும் சார்க் அமைப்பின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலும்.

05. சிறப்புக் குறிக்கோள்கள்.

1. பிராந்திய ஒத்துழைப்பை இனங்கண்டு அதன் முக்கியத்துவத்தை விபரிப்பர்.
2. பிராந்திய ஒத்துழைப்பு அமைப்புகளை பெயரிடுவர்.
3. சார்க் அமைப்பின் தன்மையை விபரிப்பர்.

06. பாட உள்ளடக்கம்

- பிராந்திய ஒத்துழைப்பு
  - " அரசியல் ரீதியாக வேறுபாடுகள் இருப்பினும் பூகோள ரீதியாக அதன் மீதுள்ள வரலாற்று, பொருளாதார, ரீதியான பொது இயல்புகளையும் பிரச்சினைகளையும் கொண்டுள்ள நாடுகளிடையே இருக்க வேண்டிய ஒத்துழைப்பு.
- பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவம்.
  - பொதுவான பிரச்சினைகளைப் பேசித் தீர்த்தல்.
  - பொருளாதார, சமூக , கலாச்சார, விஞ்ஞானத் துறைகளில் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ளல்.
  - பிராந்தியம் தொடர்பான சர்வதேசப் பிரச்சினைகளின் போது பொதுவான குரல் எழுப்புதல்.

2. • பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு.
   - ஓபெக் - ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்
   - ஆசியா - சார்க்

3. • சார்க் அமைப்பு
   - ஆரம்பம் - 1985.12.08
   - அங்கத்துவ நாடுகள்
   - சார்க் மாநாடுகள் நடைபெற்ற ஆண்டுகள்.

- நோக்கங்கள்:
  - பிராந்திய நாடுகளுக்கும் பொதுவான அரசியல் , பொருளாதார, கலாச்சார, சமூகப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்குரிய பரஸ்பர நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.
  - பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பற்றி சர்வதேச மாநாடுகளின் போது அங்கத்துவ நாடுகளிடையே ஒத்துழைப்பு பலப்படுத்தப்படல்.
  - சமமான நோக்கங்களும், இலக்கும் கொண்ட அத்தகைய வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் கருமமாற்றல்.

கட்டமைப்பு

– சார்க் சம்மேளனம், சார்க் செயலகம், வேறு குழுக்கள்.

பயன்

கலாச்சார வர்த்தகத் தொடர்புகள்.

குறைபாடு

07. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்கான உபயோகிக்கக்கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்.

- விரிவுரை, கலந்துரையாடல் வினாவிடை முறை மூலம் விடயங்களை விளக்குதல்.
- ஓபெக், ஆசியான், சார்க், ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகிய அமைப்பு நாடுகள் அடங்கிய தேசப்படத்தை வரையும்படி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குக.
- சார்க் நாடுகள் பற்றிய பின்வரும் தகவல்களைத் திரட்ட மாணவர்களை ஈடுபடுத்தல், தலைநகரம், நிலப்பரப்பு, சனத்தொகை, சமயம், மொழி, இனம், ஆட்சிமுறை.
- சார்க் அமைப்பில் இதுவரை நடத்தப்பட்ட சம்மேளனங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் திரட்ட மாணவர்களை ஈடுபடுத்தல்.

மாணவர் செயற்பாடுகள்

- ஓபெக், ஆசியான், சார்க், ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் போன்ற பிராந்திய அமைப்புகளைக் காட்டும் தேசப்படத்தை தயாரிப்பர்.
- சார்க் நாடுகள் பற்றிய தகவல்கள் திரட்டி குறிப்பெடுப்பர்.
- சார்க் சம்மேளனங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் திரட்டுவர்.

08. மதிப்பீடு

1. பிராந்திய ஒத்துழைப்பு என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.
2. பிராந்திய ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுக.
3. பிராந்திய ஒத்துழைப்பு நிறுவனங்களின் கட்டமைப்பு, அதிகாரம் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.
4. சார்க் அமைப்பின் நோக்கத்தை விளக்குக.
5. "சார்க் அங்கத்துவ நாடுகளினுக்கிடையிலும், அங்கத்துவ நாடுகளுக்குள்ளும் நிலவும் அரசியல் பிரச்சினைகள் அதன் நோக்கத்தினை அடையத் தடையாகவுள்ளது."
   இக்கூற்று பற்றிய உங்கள் கருத்தை எழுதவும்.

01. அலகு: 2.3 இலங்கையும் சர்வதேச சமூகமும்

02. பாடவேளைகள்: 30

03. உபஅலகு: 2.3.3 சர்வதேச நிறுவனங்கள்

2.3.3.1 ஐக்கிய நாடுகள் சபை

04. குறிக்கோள்: சர்வதேச தாபனங்களுக்கும் இலங்கைக்கும் இடையேயுள்ள தொடர்பை இனங்காணலும் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளலும்.

05. சிறப்புக் குறிக்கோள்கள்:

1. ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பத்தை விபரிப்பர்.
2. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கத்தை விபரிப்பர்.
3. ஐக்கிய நாடுகள் சபையின் தன்மையை விபரிப்பர்.
4. ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்புத் தாபனங்களை விபரிப்பர்.
5. ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்புத் தாபனங்கள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விபரிப்பர்.
6. ஐக்கிய நாடுகள் சபையின் சேவையை விபரிப்பர்.
7. ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றியைக் குறைக்க ஏதுவான காரணங்களை விளக்குவர்.

06. பாட உள்ளடக்கம்

1. ● ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்பம்
   - ஐக்கிய நாடுகள் சபையும் அதன் தொடக்கத்துக்கு ஏதுவான காரணிகள்
2. ● ஐக்கிய நாடுகள் சபைகள் நோக்கம்.
   - சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணல்.
   - நாடுகளுக்கிடையேயான தொடர்பை விருத்திசெய்தல்.
   - சர்வதேசப் பொருளாதாரம், சமூக, கலாச்சாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள உதவுதல்.
   - மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் பாதுகாக்க உதவுதல்.
   - வர்த்தக விருத்தி தொடர்பான வேலைத்திட்டம்.
   - பல்கலைக்கழக கல்வியை விருத்தி செய்தல்
3. ● ஐக்கிய நாடுகள் சபையின் இயல்பும் கட்டமைப்பும்.
   - பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொதுச் செயலாக்கம், பொருளாதார சமூக சபை, சர்வதேச நீதிமன்றம், நம்பிக்கைப் பொறுப்புச் சபை, அங்கத்தவ நாடுகள், அங்கத்தவர் தெரிவு, பதவிக்காலம், கடமைகள்.
   - பாதுகாப்புச்சபை - அங்கத்தவர் தொகை, அவர்களைத் தெரிவு செய்தல் முறை, பதவிக்காலம், கடமைகள்.

- பொதுச் செயலகம் - பொதுச் செயலாளத் தெரிவும் பதவிக் காலமும் கிளைக்காரியாலங்கள் - கடமைகள்
- பொருளாதார சமூகசபை - அங்கத்தவர் தொகை தெரிவு செய்யும் முறை, பதவிக்காலம் கடமைகள்.
- சர்வதேச நீதிமன்றம் - ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதிமன்றம் எந்த வகையில், அங்கத்தவர் தொகை, தெரிவு செய்யும் முறை, பதவிக்காலம், அதிகாரங்கள், கடமைகள்.
- நம்பிக்கைப் பொறுப்புச் சபை - நம்பிக்கைப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ள பிரதேசங்களின் நிர்வாகம், பல பிரதேசங்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளமையால் நம்பிக்கைப்பெபாறுப்புச் சபையின் முக்கியத்துவம் குறைந்துள்ளது.

4. ● இலங்கையுடன் தொடர்பான இணைத் தாபனங்களின் விபரத்தைத் தயாரித்தல். (அவற்றின் அமைப்பு, அதிகாரம், கடமைகள் அடங்கிய)

5. ● ஐக்கிய நாடுகள் சபையின் இணைந்த தாபனங்கள் இலங்கையுடன் கொண்டுள்ள தொடர்பு.

- புனர் நிர்மாணத்துக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி, மகாவலி அபிவிருத்தித் திட்டம் பதவி மஹவிலச்சி விவசாயக் குடியேற்றத் திட்டம், நோட்டன் பிரிஜ் கொஹல்முல்ல மின்சாரத்திட்டம், குருநாகலை மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்துக்கான உதவி, வரவு செலவுத் திட்ட இடைவெளியை நீக்க உதவி.
- சர்வதேச நாணய நிதியம் - சென்மதி நிலுவைக் குறைபாட்டைப் போக்க உதவி வழங்கல், நீண்ட காலக்கடன்.
- உங்டாட் - வர்த்தக நடவடிக்கைகள் விருத்திக்கான விருத்தி உங்டாட் சிபார்சின் பேரில் பிரித்தானியாவுக்குக் கொடுக்க வேண்டிய 20 மில்லியன் கடனைக் கழித்து விட்டமை.
- உணவு விவசாய அமையம் - விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள உதவிகள்.
- யுனெஸ்கோ: கல்வி அபிவிருத்திக்கான உதவி வழங்கல், கலாச்சார அபிவிருத்திக்கான உதவி வழங்குதல்.
- யுனிசெப்: குழந்தை நோய்த் தடுப்புக்கான ஊசி மாற்றி உதவி.
- உலக சுகாதார நிறுவனம் : உலர் வலயத் தொற்றுநோய், மலேரியா, டெங்கு, பரவா, எய்ட்ஸ் போன்ற நோய்களைத் தடுப்பதற்கான உதவி வழங்குதல்.

6. ● ஐக்கிய நாடுகள் சபையின் சேவைகள் பின்வரும் தலைப்புகளில் மதிப்பீடு செய்தல்.

- சமாதானம், பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கை, சமூகவிருத்தி.

7. • ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றியளித்த சந்தர்ப்பங்களும் அவற்றிற்கான காரணங்களும்.

– தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் அதிகார பலமின்மை, சர்வதேச பொலிஸ் தாபனம் ஒன்றை அமைக்காமை. சபையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது தனிப்பட்ட விருப்பு வெறுப்பு அடிப்படையில் நடத்தல். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உலக சமபலத் தன்மையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

07. கற்றல் - கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்.

ஆசிரியர் செயற்பாடுகள்

- விரிவுரை / கலந்துரையாடல், வினாவிடை முறைமூலம் விளக்குதல்.
- ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட ஏதுவாயமைந்த காரணிகளை ஆராய்ந்து பார்க்க மாணவர்களை ஊக்குவித்தல்.
- கோட்டுப் படத்தின் மூலம் ஐ.நா. வின் அமைப்பைக் காட்டல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் இணைந்த தாபனங்களுடன் தொடர்பான புத்தகங்கள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், தரவுகள், படங்கள் ஆகியவற்றைத் திரட்ட மாணவர்களை ஊக்குவித்தல்.
- ஐக்கிய நாடுகள் தொடர்பான தலைப்புகளில் கட்டுரைகள் எழுத மாணவர்களை ஊக்குவித்தல்.
- யுனெஸ்கோ மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள உதவிகள் பற்றிய தகவல்கள்ளைத் திரட்ட மாணவர்களைத் தூண்டல்.

மாணவர் செயற்பாடு

- ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பற்றிய தகவல்களைத் திரட்டி குறிப்பெடுப்பர்.
- ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பைக் காட்டும் கோட்டுப்படத்தை வரைவர்.
- ஐக்கிய நாடுகள் சபை பற்றிய பிரசுரங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள், தரவுகள், படங்கள் என்பவற்றைத் திரட்டுவர்.
- ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த நிறுவனங்கள் தொடர்பான கட்டுரைகளை எழுதுவர்.
- யுனெஸ்கோ நிறுவனம் இலங்கைக்குச் செய்துள்ள உதவிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி குறிப்பெடுப்பர்.

8. மதிப்பீட்டு முறை

1. ஐக்கிய நாடுகள் சபை தோன்ற ஏதுவாயிருந்த காரணிகளை விபரிக்க.
2. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கத்தை விளக்குக.
3. ஐக்கிய நாடுகள் சபையின் கடமைகளை விபரிக்குக.
4. ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த இரு நிறுவனங்களைத் தெரிவுசெய்து அவற்றின் கடமைகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் எழுதுக.
   1. நோக்கம்  2. கட்டமைப்பு  3. இலங்கைக்கு வழங்கிய உதவி.
5. ஐக்கிய நாடுகள் சபையின் இணைத்தாபனங்கள் இலங்கையின் அபிவிருத்திக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குக.
6. உலக சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள சேவைகளை விபரிக்க.
7. மூன்றாம் உலகின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகள் சபை மூலம் ஆற்றப்பட்டுள்ள சேவைகளை மதிப்பிடுக.

1. அலகு: இலங்கையும் சர்வதேச சமுகமும்.

2. பாடவேளைகள்: 30

3. உபஅலகு: 2.3.2 பொதுநலவாய அமைப்பு (பாடவேளைகள் 03)

4. குறிக்கோள்கள்: பொதுநலவாயம் பற்றிய விளக்கத்தை வழங்குதல்.

5. சிறப்புக் குறிக்கோள்கள்.

1. பொதுநலவாயத்தை அறிமுகப்படுத்தி அதன் தோற்றத்துக்கான காரணங்களை விபரிப்பர்.
2. பொதுநலவாய அமைப்பின் நோக்கங்களை விபரிப்பர்.
3. இலங்கைக்கு பொதுநலவாய அமைப்பால் கிடைத்துள்ள உதவிகள் பற்றி விபரிப்பர்.

6. பாட உள்ளடக்கம்

1. ● பொதுநலவாய அறிமுகம்
- பொதுநலவாயத்தின் தோற்றத்துக்கான காரணங்கள்.
- பிரித்தானியாவின் குடியேற்றங்களாக இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளை ஒரு அமைப்பின் கீழ் இணைத்து வைத்துக் கொள்ள பிரித்தானியாவுக்கிருந்த் தேவை.
- இந்நாடுகளுடன் இருந்த தொடர்புகளை விருத்தி செய்து கொள்ளவதற்கான தேவை.

2. பொதுநலவாயத்தின் நோக்கம்.
- சகல அங்கத்தவர்களையும் சமமான மதித்தல்.
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை பாதுகாப்புக்காகக் குந்தகம் விளையாத விதத்திலும் சர்வதேச அமைதியைப் பாதிக்காத வகையிலும் தீர்த்துக் கொள்ளல்.
- வேறொரு நாட்டுக்கெதிராக ஆயுதபலத்தைப் பிரயோகிப்பதிலிருந்தும் அவ்வாறு பிரயோகிப்பதற்கு எச்சரிப்பதிலிருந்தும் விலகியிருத்தல்.
- எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு சட்டத் தீர்ப்புகளுக்குட்படுத்தப்பட்ட விடயங்களில் தலையிடாமை.

3. ● இலங்கைக்குப் பொதுநலவாயத்திலிருந்து கிடைத்த உதவிகள்.
- பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கான உதவிகள்.
  1. மின்சக்தி உதவி
  2. வளவாளர் அபிவிருத்தித் திட்டம்.
  3. கைத்தொழில் அபிவிருத்திக்கான தொழில்நுட்ப அறிவு.
  4. புலமைப் பரிசில்.

7. கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்காக உபயோகிக்கக் கூடிய செயற்பாடுகள்

ஆசிரியர் செயற்பாடுகள்

- பொதுநலவாய அங்கத்துவ நாடுகளைக் காட்டும் தேசப்படத்தை அமைத்து வகுப்பில் முன்வைத்தல்.
- பொதுநலவாய அமைப்பின் மூலம் இலங்கைக்கு வழங்கப்பட்டள்ள உதவிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி மாணவர்களிடம் முன்வைத்தல்.

மாணவர் செயற்பாடுகள்

- தேசப்படத்தின்படி பொதுநலவாய நாடுகளின் பட்டியலைத் தயாரிப்பர்.
- பொதுநலவாயத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி எழுதிக்கொள்வர்.

8. மதிப்பீடு

1. (1) பொதுநலவாயத்தை அறிமுகப்படுத்துக.
   (2) பொதுநலவாயத்தினால் இதுவரை நடைபெற்றுள்ள சேவைகளை மதிப்பீடு செய்க.

2. பொதுநலவாயத்தினால் இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் பற்றி விளக்குக.

உசாத்துணை நூல்கள்


1. அரசியல் அரசறிவியல் சுருக்கம் – அப்பாத்துரை
2. மகாராணியின் அரசாங்கம் – சர் அய்வர் பெனிங்ஸ்
3. பிரித்தானிய ஆட்சிமுறை – ஐ.டி.எஸ். வீரவர்த்தன.

COMPUTING For CHILDREN II

3 Months Fee: 3000/-

Printed by:
Buddhi Printers & Publishers,
University Road, Gangodawila,
Nugegoda.
Tel: 824930, 072-75309